Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 20

# ஈழநாடு

## வார மலர்




மலர் 12 சௌமிய மாசி 3 ஜுல்ஹஜ் 7 (14-2-70) சனிக்கிழமை இதழ் 4

# வெடிகுண்டுவிபத்து 3 பேர் பலி கரவெட்டியில் கோர சம்பவம்

## ஒருவர் நிலை கவலைக்கிடம் ஆறு பேர் ஆஸ்பத்திரியில்

### விசேஷபொலிஸ்நிலையம் திறக்கப்படுகிறது

### துப்பறியும் நிபுணர் குழு வருகிறது

[நமது சிறப்பு நிருபரும், மாவிட்டபுரம் நிருபரும்]

வடமராட்சியிலுள்ள கரவெட்டிப்பகுதியில் நேற்று முன்தினம் மாலை நடந்த கைக்குண்டு வெடிச் சம்பவத்தில் மூவர் மாண்டனர். இருவர் அந்த இடத்திலேயும் ஒருவர் ஆஸ்பத்திரியிலும் மரண மானுர்கள். மற்றும் இருவர் ஆபத்தான நிலையில் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்தக்குண்டு வெடிப்புச் சம்பவம் சம்பந்தமாக பொலிசார் புலன் விசாரணை செய்து வருகின்றனர். வடபகுதிப் பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கத்தின் கோரிக்கையின் மீது கொழும்பிலிருந்து துப்பறியும் பொலிஸ் குழுவொன்று கரவெட்டிக்கு வரவிருக்கிறது. இதே சமயம் கரவெட்டியில் விசேஷ பொலிஸ் நிலையம் ஒன்று நிறுவவும் வடபகுதி பொலிஸ் அதிபர் நடவடிக்கை எடுத்திருக்கிறுர்.

கைக்குண்டு வெடித்ததில் எம். செல்வரத்தினம், கே. செல்வராசா, வேலும் மயிலும் ஆகிய மூவருமே மாண்டவர்களாவர். ஆறு பேர் காயங்களுடன் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்

வடபகுதி பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் சம்பவம் நடந்த இடத்தை நேரில் சென்று பார்வையிட்டார்.

கரவெட்டியில் விசேஷ பொலிஸ் நிலையம் ஒன்றைத் திறப்பதற்கு அவர் உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொண்டார். விசேஷ பொலிஸ் நிலையம் இன்று திறக்கப்படவிருக்கிறது. பொதுமக்கள் பீதியடையத் தேவையில்லையென்றும் பொலிசார் பொதுமக்களுக்குப் பாதுகாப்பளிப்பார்களென்றும் தெரிவித்த வடபகுதி பொலிஸ் அதிபர், குண்டு வெடிப்புச் சம்பவம் பற்றி பூரண விசாரணை செய்து குற்றம் செய்தவர்கள்மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் கூறினுர். அமைதியைக் குலைக்க முயல்பவர்கள்மீதும் சட்டத்தையும் ஒழுங்கையும் மீறுபவர்கள்மீதும் கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் அவர் கூறினுர்.

### மரண விசாரணை

வெடி விபத்து நடந்த இடத்துக்கு பருத்தித்துறை நீதிபதி திரு. கே. விக்னராஜா சென்று பார்வையிட்டார் விபத்தில் மாண்ட மூவரின் மரணம்பற்றியும் மந்திகை ஆஸ்பத்திரியில் நீதிபதி முன்னிலையில் விசாரணை நடைபெற்றது. விசாரணை முடிவடைந்தபின் மாண்டவர்களின் சடலங்கள் அவர்களின் உறவினர்களிடம் கொடுக்கப்பட்டது.

## குண்டு வெடிப்புக்கு காரணம் என்ன?

கைக்குண்டு தயாரித்த போதுதான் இந்த வெடிவிபத்து ஏற்பட்டதாகவும் இதற்கு ஆதாரமாக பல தடயப்பொருள்கள் கிடைத்திருப்பதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

ஆனுல் இப்பகுதியில் வசிக்கும் ஒரு பிரிவினரைச் சேர்ந்த எட்டுப்பேர் குண்டுகளை வீசிவிட்டு ஓடிச்சென்றதைத்தாங்கள் பார்த்ததாக வேருெரு பிரிவைச் சேர்ந்த சிலர் பொலிசாருக்குத் தெரிவித்துள்ளனர். இவர்கள் எட்டுப்பேரும் பொலிசில் விரைவில் சரணடைவார்களென்று பொலிசார் எதிர்பார்க்கின்றனர்.

கரவெட்டிப் பகுதியில் வாழும் இரு பிரிவினருக்கிடையில் சென்ற சில தினங்களாக அமைதி குலைந்திருந்ததென்றும் வெடிகுண்டு விபத்துச் சம்பவத்துக்கு இதுவே காரணமாயிருக்கலாமென்றும் பேசிக்கொள்ளப்படுகிறது. வெடிகுண்டு விபத்துப்பற்றி பாரபட்சமற்ற விசாரணை நடத்தப்படவேண்டுமென்று சிறுபான்மைத் தமிழர்மகாசபைத்தலைவர் திரு. எம். சி. சுப்பிரமணியம் பிரதமரையும் பொலிஸ் அதிபரையும் தந்திமூலம் கேட்டுள்ளார்.

## ஊர்வலமும் கூட்டமும்

யாழ்ப்பாணம், சனி

ஈழத்தமிழ் இளைஞர் இயக்கத்தின்ஊர்வலமும்பொதுக் கூட்டமும் நேற்று யாழ்ப்பாணத்தில் நடந்தது.

திரு. தேசிய இலங்கை மன்னன் பேசும்போது, தமிழருக்கான பல்கலைக்கழகம் வடக்கு கிழக்கில் அமைய வேண்டுமென்று கூறினுர்.

## "வடபகுதியில் இராணுவம் அதிகரிக்கப்படவேண்டும்"

### மகா தேசாதிபதிக்கும் பிரதமருக்கும் ஆர். ஜி. தந்தி

வடபகுதியில் இராணுவம் அதிகரிக்கப்படவேண்டும் என்று சிங்கள மகாஜன கட்சித்தலைவர் திரு ஆர் ஜி சேனநாயகா பிரதம மந்திரிக்கும் மகாதேசாதிபதிக்கும் எதிர்க்கட்சித்தலைவருக்கும் அனுப்பியுள்ள தந்தியில் வற்புறுத்தித்தெரிவித்துள்ளார்.

வடபகுதியிலிருந்து இராணுவத்தை வாபஸ்பெறும்படி தமிழ்த்தலைவர்கள் கோரியிருப்பதற்குப் பதிலாக இராணுவத்தை அதிகரிக்கும்படி திரு சேனநாயகா கோரியுள்ளார்.

வல்வெட்டித்துறைகள்ளக் கடத்தலுக்கு முக்கியத்துவம் வாய்ந்த இடமென்றும் இராணுவத்தினர் கள்ளக் கடத்தலை முறியடிக்கும் நடவடிக்கைகளைத் தடுத்து அவர்களுக்கு களங்கம் ஏற்படுத்தவும், இதன்மூலம் இராணுவத்தினரை வாபஸ் பெறச்செய்யவும் கள்ளக் கடத்தல்காரர்கள் தங்கள் ஏஜண்டுகள்மூலம் இப்படியான சம்பவங்களை ஏற்படுத்திவருவதாக அத்தந்தியில் கூறப்பட்டிருக்கிறது.

## கடைசி நேரத்தில் திடீர் மாற்றம் ஏற்படலாம்

### நாளை யாழ்ப்பாண மேயர் தெரிவு

யாழ்ப்பாணம், சனி

தமிழரசு-தமிழ் காங்கிரஸ் குழுவைச்சேர்ந்த ஒருவரே யாழ்ப்பாண மேயராகத் தெரிவுசெய்யப்படுவார் என்று தான் நம்புவதாக தமிழ் காங்கிரஸ் நிர்வாக காரியதரிசி திரு. தா. சங்கரப்பிள்ளை நேற்று தெரிவித்தார்,

மாநகரசபை உறுப்பினர் எவரும் தமிழ் காங்கிரசிலிருந்து ராஜினுமா செய்யவில்லையென்றும் தமிழரசு-தமிழ் காங்கிரஸ் ஒப்பந்தம் காப்பாற்றப்படுமென்றும் அவர்மேலும் தெரிவித்தார்.

திரு துரையப்பாவே அடுத்த மேயராக வருவார் என்ற நம்பிக்கை துரையப்பா குழுவினரிடம் இருக்கிறது தமிழ் காங்கிரஸ் உறுப்பினர் சிலரும் திரு துரையப்பாவை ஆதரிப்பார்களென்று தாங்கள் நம்புவதாக குழுவினர் தெரிவித்தனர்.

மேயர் தெரிவில் கடைசி நேரத்தில் திடீர் மாற்றங்கள்ஏற்படலாமென்றுமாநகரசபைவட்டாரங்கள்நேற்று தெரிவித்தன,

## பல்கலைக்கழக கமிஷன் விசாரணை இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், சனி

வடக்கிலா அல்லது கிழக்கிலா உத்தேச பல்கலைக் கழகத்தை நிறுவுவது என்பதைத் தீர்மானிப்பதற்கு நியமிக்கப்பட்ட தேசிய உயர் கல்விச்சபையின் உபகுழு யாழ் வந்துள்ளது.

இன்று யாழ்ப்பாணம் அரசாங்க செயலகத்தில் இக்குழுவின் விசாரணை ஆரம்பமாகிறது. இவ்விசாரணைக்குழுவின்முன் வடமாகாணக் கல்லூரி அதிபர்கள்சங்கம், வழக்கறிஞர் சங்கம், யாழ். பெற்ருேர்சங்கம் ஆகியனவும் மற்றும் ஓய்வு பெற்ற அதிபர்கள், கல்விமான்கள் ஆகியோரும் தங்கள் நேரடி வாக்குமூலங்களை அவரவர்களுக்குக்குறிப்பிட்டுள்ள தேதிகளில் அளிப்பார்கள்.

கொழும்பில் தமிழ்க் காங்கிரசுக்கு வாக்குமூலமளிக்கக் கொடுக்கப்பட்ட தேதி பிற்போடப்பட்டுள்ளதால் தமிழ்க்காங்கிரஸும் இங்கு தனதுவாக்குமூலத்தை அளிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. தமிழரசுக் கட்சியின் வாக்குமூலம் மேற்படி குழுவால் ஏற்கனவே கொழும்பில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார சாரம் — அரசியல் நிருபர்

# ராணுவம் இங்கு தேவையில்லை

"ஆட்டைக் கடித்து மாட்டைக்கடித்து கடைசியில் மனிதரையும் கடித்த மாதிரி'' என்று ஒரு பழமொழி இருக்கிறது. நமது நாட்டு இராணுவம் இந்தப் பழமொழிக்குச் சரியான பொருத்தம்சண்டைபிடிப்பதற்காகவே பயிற்சியளிக்கப்படுவதுஇராணுவம். அதிர்ஷ்டமோ, துரதிர்ஷ்டமோ சண்டை பிடிப்பதற்கு இலங்கை இராணுவத்துக்கு சந்தர்ப்பமில்லை. அவர்கள் தான் என்ன செய்வார்கள். பயிற்சிபெற்றுவிட்டு சும்மா இருக்கமுடியுமா? அவர்களுக்குக் கிடைக்கும் சந்தர்ப்பம் அப்பாவி மக்கள்மீது கைவரிசையைக் காட்டுவது தான். அப்பாவி மக்களின் பிரதிநிதியையும் அவர்கள் விட்டுவைக்கவில்லை. பாவம் பருத்தித்துறைப் பிரதிநிதி. அமைதியை நிலைநாட்டச் சென்றபோது இராணுவ சிப்பாய் ஒருவர் தனது வீரத்தைக் காட்டினர். அதன் விளைவு மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வருகிறார். இராணுவத்தளபதிவல்வெட்டித்துறைக்கு வந்து போயிருக்கிறார். அவர் என்னத்தை சொல்லப்போகிறார். "இராணுவத்தினர் கட்டுப்பாடாகவே இருக்கின்றனர். வேறு சிலர்தான் விஷமம் செய்தனர்'' என்றுதான் சொல்லுவார். இல்லையென்றால் கள்ளக்கடத்தல்காரரின் விஷமத்தனம் என்று அவர் சொல்லுவார். "நாய்க்கு விசர் பட்டம் கட்டிச்சுட்டுக் கொல்லு'' என்று ஆங்கிலத்தில் ஒரு பழமொழியிருக்கிறது. இராணுவத்தினரின் சேட்டைகளுக்கும் இராணுவத்தளபதியும் சரி அரசாங்கமும்சரி கள்ளக்கடத்தல், கள்ளக்குடியேற்றம் என்று ஏதாவதொரு சாட்டுச் சொல்லித் தப்பித்துக் கொள்ளும். கடந்த காலங்களில் நடந்த சம்பவங்கள் இதற்குச் சான்று.

மன்னாரில் சமீபத்தில் நடந்த சம்பவங்களுக்கு இராணுவத்தளபதி விளக்கம் கூறியதை மறந்துவிட முடியுமா?

சட்டவிரோதக் குடியேற்றம் குறைந்துவிட்டது. கள்ளக்கடத்தல் நடந்துகொண்டுதானிருக்கிறது. கள்ளக்கடத்தல் வடபகுதிக்கரையோரங்களில் மட்டும்தான் நடைபெறுகிறதா? கொழும்புத்துறைமுகத்தில் வந்து சேர்ந்த ரயில் எஞ்ஜினுக்குள்ளேயே பல லட்சம் பெறுமதியான பொருள்கள் இருந்தது கண்டுபிடிக்கப் பட்டதே!

வடபகுதிக் கரையோரங்களில் முகாமிட்டுள்ள இராணுவத்தினர் இதுவரை எத்தனை சட்ட விரோதக் குடியேற்றக்காரர்களைப் பிடித்திருக்கின்றனர். கள்ளக்கடத்தல் முயற்சிகள் எத்தனையை முறியடித்திருக்கின்றன? இதுபற்றி இராணுவத்தளபதியோ அரசாங்கமோ விபரமாக அறிக்கை வெளியிடுமா? பொதுமக்களைத் தாக்கிய சம்பவங்கள் எத்தனையென்றும் அறிக்கை வெளியிட்டால்நல்லதுதான்!

இராணுவத்தை வேறு நல்ல காரியங்களுக்குப்பயன்படுத்திக்கொண்டு சட்ட விரோதக் குடியேற்றம், கள்ளக்கடத்தல் தடுப்பு வேலைகளுக்கு பொலிசாரைச் சில மாதங்களுக்காவது பரீட்சார்த்தமாகவாவது பயன்படுத்திப் பார்த்தாலென்ன?

## நாளைக்கு யார் மேயர்?

### மேயர் தேர்தல்

யாழ்ப்பாண நகருக்குப் புதிய ஒருமேயரைத் தெரிவு செய்வதற்காக யாழ்பாண மாநகரசபை நாளை மாலை கூடுகிறது. யார் மேயராகத் தெரிவு செய்யப்படுவார் என்று நிச்சயமாகச் சொல்லமுடியாத நிலை. சென்ற வாரம் 'யாழ் நகர மேயர் பதவியும் நள்ளிரவு நாடகங்களும்' என்று இந்தப்பக்கத்தில் எழுதியிருந்தேனல்லவா? அதுசிலருக்கு எரிச்சலையூட்டியிருக்கிறது. உண்மை கசக்கத்தானே செய்யும்! மேயர்பதவி இறக்க நாடகத்தை எழுதி முடித்தபோது புதிய மேயர் யார்?'' என்று ஒரு கேள்வியைப் போட்டு "அதுவேறு ஒரு நாடகம்'' என்று முடித்திருந்தேனல்லவா? அந்த நாடகம்இப்பொழுதுபலபலகாட்சிகளுடன் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. யாழ்ப்பாண மாநகரசபைக்கட்டிடத்தைச்சுற்றியும் நீதிமன்றக்கட்டிடங்களைச் சுற்றியும் நடைபெறும் நிகழ்ச்சிகள் இப்பொழுது கொழும்பு வரை விரிவடைந்திருக்கின்றன. மாநகரசபை அங்கத்தவர்கள் சிலர்கொழும்புக்குச் சென்று திரும்பியிருக்கின்றனர். நான்குபேர் மேயர் பதவியில் கண் வைத்துள்ளனர். ஒருவர் மிகநம்பிக்கையுடன் தாமே மேயர் என்று கூறுகிறார். எதிர்முகாமிலிருந்த முன்னாள் மேயர் ஒருவரே தமது பெயரை நாளை பிரேரிப்பார் என்று அவர் கூறுகிறார். நாளை பிற்பகல் 3மணிவரையும் நிச்சயமாக எதையும் சொல்ல முடியாது. கடைசிநேரத்தில் திடீர் மாற்றங்கள் ஏற்படலாம். என்னதான் மாற்றங்கள் ஏற்பட்டாலும் எவர் தான் என்ன ஒப்பந்தத்திலோ உடன்பாட்டிலோ மேயராக வந்தாலும் மற்றொரு நம்பிக்கையில்லாத்தீர்மானம் வராமலிருந்தால் நல்லதுதான்.

# அரபு-இஸ்ரேல் சிக்கல்

அரபு-இஸ்ரேல் பிரச்னையில் எனது உணர்ச்சி கலப்புள்ளதாகும்: எனது மதிப்புக்குரிய நண்பர்கள் இரு பகுதியிலுமுள்ளனர். யூதர்களின் திறமைக்கும் புத்திக்கூர்மைக்கும் மதிப்பளிப்பவன் நான். மறுபக்கத்தில், ஏகாதிபத்தியத்தை எதிர்த்து தன் சுதந்திரத்தைக் காப்பாற்ற முயலும் அராபியர்களின்பால் என் இதயம் கலந்திருக்கிறது. அதேசமயம் இருபக்கத்திலுமுள்ள குறைகளையும் நான் விரும்பவில்லை. மனித இனத்தின் அவலத்துக்கும் அழிவுக்கும் ஏதுவான மகாயுத்தமொன்றுக்கு அடிகோலினிலும் முடிவு காணமுடியாத இப்பிரச்னையையிட்டு என் அபிப்பிராயத்தைத் தெளிவுபடுத்த நான்மேலும் தயங்க விரும்பவில்லை. தேவதைகளே போகத் தயங்கும் ஒரு பாதையில் நான் காலடி வைக்கிறேனென்றாலும், தேவையேற்பட்டால் போகத்தானேவேண்டும்.

இன்றைய உலக நோக்கில் அரபு-இஸ்ரேல் பிரச்னை பல சிக்கல்கள் நிறைந்தகானாலும் பிரச்னைக்குரிய விடயங்கள் தெளிவாகவிருக்கின்றனவென்றே கருதுகிறேன். உண்மையான நடுநிலைமைக் கருத்தென்னவென்றால், பெரிய வல்லரசுகளின் ஆதரவுடன் அந்நிய நாடு ஒன்றினால், அரபுகளுக்குரிய பாலஸ்தீனம் முற்றுகையிடப்பட்டிருப்பது தான். முதலாவதாக பிரிட்டன் பின் அமெரிக்கா, ரஷ்யா, ஐ. நா. ஆகியவை அமெரிக்காவின் அமோக ஆதரவுடன் பெரிய வல்லரசுகளாவிருக்கின்றன. ஐரோப்பா, அமெரிக்கா ஆகிய நாடுகளிலுள்ள யூதர்களும், பின்பு சேர்ந்துகொண்ட ஆசிய யூதர்களுமே அந்நியர் என்று கூறப்படவேண்டும்.

மேற்கத்திய யூதர்கள் நாடு நகரமின்றி அகதிகளாக பாலஸ்தீனத்துக்கு வரவில்லை; தங்களுக்கென்றே ஒரு நாட்டை-இஸ்ரேலை அமைக்கவே வந்தார்கள். ஆரம்பத்தில் யூதர்களின் ஊடுருவலை சந்தேகப்படாத அரேபியர்கள், காலக்கிரமத்தில் உண்மைநிலைஅறிந்து தம் பிரதேசத்தைக் காப்பாற்ற கொதித்தெழுந்தனர். பாலஸ்தீன அரேபியர்களுக்கும் யூதர்களுக்கும் நேரிடையான பிரச்னையாக இது இருந்திருந்தால் இதைத் தீர்த்துவைப்பதில் கஷ்டமிருந்திருக்காது. ஆனால் ஏகாதிபத்திய ஆதிக்க வெறிபிடித்த பிரிட்டன், தனது மூன்றிலொரு யுத்த வீரர்களைக்கொண்டு 1936-39 ம் ஆண்டுக்கிடையில் அராபியரின் சுதந்திர எழுச்சியைத் தகர்த்தெறிந்தது

பல வருடங்களுக்குமுன் தம் மூதாதையர் பாலஸ்தீனில் வசித்தார்களென்பது தவிர, அந்நிய தேச யூதர்களுக்கு பாலஸ்தீனத்தில் எவ்வித உரிமையுமில்லை. ஏனையோரும் இதே உரிமை கொண்டாடினால் எத்தகைய அசம்பாவிதங்கள் இவ்வுலகில் நிகழக்கூடுமென்று நாம் சிந்தித்துப் பார்க்கலாம்.

### உதாசீனப் பார்வை

பல நூற்றாண்டுகளாக தமக்கிழைக்கப்பட்ட அநீதிகளுக்காக, யூதர்களுக்கு பரிவும் பச்சாத்தாபமும் காட்டப்படவேண்டியது தான். ஆனால் இதற்காக அராபியர்கள் - முக்கியமாக பாலஸ்தீனியர்கள் [illegible] படக்கூடாது

யூதர் சமூகத்தையே பூண்டோடு அழிக்க முற்பட்ட கிறிஸ்தவர்களும், மேற்கத்திய வல்லரசுகள் சிலவும், யூதர்களுக்கு ஏதாவது உதவி செய்யவேண்டுமென்று எண்ணியிருக்குமானால், அராபியரை நசுக்கி அந்நன்மையைச் செய்ய அவர்களுக்கு எவ்வித அதிகாரமுமில்லை. இதைவிட சர்வாதிகாரமும், வெட்கக்கேடான விடயம் வேறெதுவுமில்லை. இந்தப் பாதகமான தீர்ப்பை அராபியர்கள் எதிர்ப்பதில் ஆச்சரியமில்லை அல்லவா? மற்றவர் வேறு முறையில் நடந்திருக்க முடியுமா? யூதர்கள் இதே நிலையில் இருந்திருந்து அவர்களின் நாடு பலாத்காரமாகக் கைப்பற்றப்பட்டு, இந்த இருபதாம் நூற்றாண்டில் அராபியர்களின் நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தால் இந்தநிலையை ஏற்றுக்கொண்டிருப்பார்களா?

முழுவிடயத்தையும் உதாசீனமாகவும் தர்க்கரீதியாகவும் எடுத்தால் பாலஸ்தீனப் பிரச்னை சரித்திரத்தில் முக்கியமானதல்ல. ஏனென்றால் அராபியர்கள்கூட தமது எழுச்சிக்காலத்தில் பல அந்நிய நாடுகளைக் கைப்பற்றி, தம் ஆட்சியை நிலைநிறுத்தி, அத்தேச மக்களை ஒடுக்கியவர்கள்தான். இது சந்தேகமற்ற உண்மை. ஆனால் தேசிய உணர்ச்சி ஓங்கி, ஆசியா ஆபிரிக்க நாடுகளில் ஏகாதிபத்தியத்தை மக்கள் எதிர்க்க முற்பட்ட சமயத்தில்தான் பாலஸ்தீனத்தில் [illegible] பாலஸ்தீன அராபியர்கள். இரண்டாவது உலக யுத்தத்துக்குப்பின் தமக்குச் சுதந்திரம் கிடைக்குமென்று எதிர்பார்த்த வேளையில், பிரிட்டனின் ஆயுத உதவியுடன் அந்நியர் ஆதிக்கம் செய்யமுற்பட்டது அராபியருக்கு ஏற்பட்ட புதுப்பிரச்னையாகியது. இஸ்ரேல் இராச்சியம், மறுமலர்ச்சி பெற்றுவரும் ஆசிய ஆபிரிக்க நாடுகளுக்கு ஒருசவாலாகவும் அவர்கள் நெஞ்சில் ஈட்டியைப் பாய்ச்சுவது போன்ற பயமுறுத்தலாயிருக்கிறது.

பகல் இரவு மாறிவருவது போல் 1948 அராபிய — இஸ்ரேல் யுத்தமும் காட்சியளித்தது. இந்த யுத்தம் தவிர்க்கமுடியாத ஒன்று. பிரிட்டன். அமெரிக்கா, ரஷ்யா ஆகிய வல்லரசுகள் இஸ்ரேலையும் பாலஸ்தீனப் பிரிவினையையும் அங்கீகரிக்காமலிருந்தால்இதில்பெரும் திருப்பம் ஏற்பட்டிருக்கலாம். என்றாலும் ஐ. நா, ஆலோசனையைப் புறக்கணித்து, பிரிவினை எல்லைக்கு அப்பாலுள்ள பகுதியையும் இஸ்ரேல் ஆக்கிரமித்தது. இது ஸ்ரேலுடைய ஸ்திரமான கொள்கையாயிருக்கிறது. ஐ. நா. இருந்தாலென்ன, இருக்காவிட்டாலென்ன, அராபிய கெடுபிடியிலிருந்து தன்னைப்பாதுகாக்க இஸ்ரேல் இந்நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. ஆனால் இஸ்ரேலியர்கள் ஒன்றை மறந்துவிடுகிறார்கள். தமது ஆக்கிரமிப்புக் கொள்கையிலும்பார்க்க பாலஸ்தீன அராபியரின் நல்லெண்ணத்தில்தான் தமது பாதுகாவல் தங்கியிருக்கிறதென்பதை உணர்கிறார்களில்லை.

### இஸ்ரேலியரின் வாதம்

அராபிய — இஸ்ரேலிய காட்சியை உற்றுநோக்கும் பொழுது கோலியாத்தை, சிறுடேவிட் சந்தித்த காட்சி தான் ஞாபகத்திற்கு வருகிறது. தைரியசாலியான சிறு டேவிட்மேல்தான்இயற்கையாகவே எவருக்கும்அனுதாபம் ஏற்படும். அதோடு இஸ்ரேலின் மறுமலர்ச்சியோடு அராபியரின் பழைய சம்பிரதாயங்களையும், இஸ்ரேலின் முன்னேற்றப்பாதையில் அராபியரின் பின்தங்கிய நிலையும், இஸ்ரேலிய சோஷலிசத்துக்கெதிராக அராபியரின் ஏகாதிபத்தியக் கொள்கையும்போன்ற பலவற்றைப் பார்க்கும்போது எல்லோருடைய அனுதாபத்தையும்இஸ்ரேல்தான் கவருகிறது.

### சமரசம் காணவழி

இந்த நிகழ்ச்சிகள் உண்மையாகில், இஸ்ரேலியர் சிந்திக்க வேண்டியகாலம் வந்துவிட்டது இந்த அடிப்படையில் மேற்காசியாவில் சமரசம் காணவேண்டுமானால் பாலஸ்தீன-இஸ்ரேலிய சமரசத்தில்தான் தங்கியிருக்கிறது. யூதர்களும், அராபியர்களும் சமஅந்தஸ்துடன், சமபிரஜைகளாக வாழக்கூடிய தேசிய ஜனநாயக பாலஸ்தீன ஆட்சி நிறுவினால்தான் முடியும். இக்கால உலகில் இது சாத்தியமற்றதல்ல. அறிவு, ஆற்றல், இனமத குரோதமற்ற பல ஆண்கள், பெண்கள் இரு சமூகத்தவரிடையேயும் இருக்கிறார்கள். சாந்தி, சமாதானம், பொருளாதார முன்னேற்றம் மேற்காசியாவில் நிலவவேண்டுமானால் அராபியர்களுக்கும் யூதர்களுக்குமுள்ள ஒரே வழி இதுவென்பது தெளிவு.

மேற்கண்ட முடிவை அமுல் நடத்தவேண்டுமானால், பாலஸ்தீனியர் இஸ்ரேலியரின் ஆக்கிரமிப்பை அங்கிகரித்து, இஸ்ரேலையும் அங்கீகரிக்கவேண்டும். தம்மைத்தாமே அழிக்கும் எண்ணமில்லாவிடில், அராபியருக்கும் இதுதன் சிறந்த

(16-ம் பக்கம் பார்க்க]

—ஜயப்பிரகாஷ் நாராயணன்—

[சர்வ சேவா சங்க சஞ்சிகையிலுள்ள ஆங்கிலக்கட்டுரையின் மொழியாக்கம்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“இந்த நோயாளிகள் பலவிதம்; சில நோயாளிகள் படுக்கையிலிருந்து எழாமலேயே ஏதேனும் செய்ய முயல்வர்; வேறு சிலர் படுக்கையிலிருந்து எழுந்து புத்திசாலித்தனமான வேலைகளில் ஈடுபடுவர். சமையல் கூடச்செய்வர்!”

# தூக்கத்தில் நடக்கும் மர்ம வியாதி !

**பரணி**

“அவன் தூக்கத்தில் எழுந்து நடக்கிறுனே! அவன் கண்களைத் திறந்தபடியே இருந்தபோதும்கூட அவன் எதையும் பார்த்ததில்லை.”

பத்துவயதுப் பையன் ஒருவனின் தாய் குழப்பத்துடனும் கவலையுடனும் கூறினுள். பேயோ, பிசாசோ பிடித்திருக்குமோ என்ற பரபரப்பு அவளின் நெஞ்சத்தைப் படாதபாடு படுத்திக்கொண்டிருந்தது!

## பேய், பிசாசு ஒரு கற்பனை

ஆனுல் உண்மையில் பேய் பிசாசு போன்ற ‘கற்பனை’யால் இந்த வியாதி ஏற்பட்டதல்ல! குழந்தைப்பருவத்தில் ஏற்படக் கூடிய இந்த நோய், அநேகமாகப் பிற்காலத்தில் தாளுகவே எவ்விதச் சுவடுமின்றி மறைந்துவிடுகிறது. இது நிபுணத்துவம்பெற்ற டாக்டர்கள் கண்டறிந்த உண்மை.

இந்த நோயைப்பற்றி பல மேல்நாட்டு டாக்டர்கள் ஆராய்ச்சிசெய்து, இதன் உண்மைத் தன்மையையும் சிக்கலையும் கண்டறிந்திருக்கின்றனர்.

மனித உடல் தொடர்ந்து வளர்ச்சியும், முன்னேற்றமும் அடைந்துவருகிறபோதிலும் பல அவசியமற்ற ‘மிதமிஞ்சிய’ உறுப்புகளையும், உள் உணர்வுகளையும் இன்னமும் கொண்டுள்ளது. அதாவது மனிதன் குரங்கிலிருந்து பிறந்தான் என்ற தத்துவத்தை நிரூபிப்பது போன்றதுதான் இந்த நோய்.

## ஒருவகை ‘ஹிஸ்டீரியா’

தூக்கத்தில் ஏற்படும் இந்தக் கோளாறு, ஒருவகை ‘ஹிஸ்டீரியா’ என்று கூடச் சொல்லலாம். அத்துடன் ‘கை கால் வலிப்பு’போன்ற பலவிதமான நோய்களின் சேர்க்கை என்றும் சொல்லலாம்.

இந்த நோயில் பலவகையுண்டு. சில நோய்கள் படுக்கையிலிருந்து எழாமலேயே ஏதேனும் செய்கின்றனர். வேறுசிலர் படுக்கையிலிருந்து எழுந்து புத்திசாலித்தனமான வேலைகளில் ஈடுபடுகின்றனர். அந்த நோயாளி சமயல் செய்யக் கூடும்; அல்லது அறையைச் சுத்தம்செய்யக்கூடும். விழித்தெழுந்ததும், தான் செய்த வேலைகள் யதொன்றும் அவர் நினைவுக்கு வருவதில்லை. இரவில் தான் செய்த வேலைகளைப்பற்றி மற்றவர்கள்மூலம் அறியும்போது அவருக்குப் பேராச்சரியம் ஏற்படுகிறது.

## அற்புதங்களை செய்கின்றனர்

சில நோய்கள் தூக்கத்திலிருந்து எழுந்து வீட்டினுள்ளே நடப்பதில்லை சிலர் ஜன்னல் வழியாகக் குதித்து தெருவில் நடக்கின்றனர். சிலர் உண்மையான அற்புதங்களையும், கரையின் விளிம்பில் நடப்பது, மிகவும் உயரமான சுவர்களை ஏறிக் குதிப்பது போன்ற சாகசச்செயறுகளையும் செய்துள்ளனர்.

இவற்றுக்கான விளக்கத்தைக் கொடுப்பது டாக்டர்களைப்பொறுத்தவரையில் கூட கஷ்டமான காரியமாகத்தான் உள்ளது.

இத்தகையநோய் கொண்டவர்கள் தூங்கும்போது என்ன ஏற்படுகிறது? தூங்கிக் கொண்டிருக்கும் மூளையின் சில பகுதிகள் தூக்கத்திலிருந்து விடுதலைபெற்று, கிளர்ச்சியடைகின்றன. இதனல் மூளையின் தலைமைப் பீடத்தின் கட்டுப்பாடு இன்றி, தன்னிச்சையாக செயல்படுகின்றன.

## அசாதாரணச் சுறுசுறுப்பு

தூக்கத்தில் செயற்படும் நோயாளிகளுக்கு அசாதாரணச் சுறுசுறுப்பு இருப்பது பலரை நிச்சயம் வியப்பிலாழ்த்தத்தான் செய்கிறது. உயரமான கரையின் நுனியில் அநாயாசமாக நடக்கிறுர்களே, அவர்களுக்குத் தலைசுற்ருதா?

இங்கு இரு அம்சங்களை மேல் நாட்டு டாக்டர் ஒருவர் தனது கடும் ஆராய்ச்சியின் பயனுகக் கண்டுபிடித்துள்ளார்.

நமது மூதாதையரான மனிதக் குரங்குகளுக்குள்ள சில தன்மைகளின் பலனுக இப்படிச் செய்ய முடிகிறது எனலாம். இரண்டாவது அம்சத்தைப் புரிந்துகொள்ள ஒரு சிறு உதாரணம்: ஓர் அகலமான பலகையின்மீது நீங்கள் நடக்கிறீர்கள். அதில் ஒரு சிறிய இடைவெளி இருந்தபோதிலும் நாம் சற்றும் கவலைப்படுவதில்லை. சர்வசாதாரணமாகப் பயமின்றி நடந்துவிடுகிறேம். ஆனுல், அதே பலகை உயரமான இரு மலைச் சிகரங்களினூடே போடப்பட்டிருக்கிறதென்றும், கீழே படுபாதாளத்தில், பயங்கரமான காட்டாற்றுவெள்ளம் பேரிரைச்சலுடன் ஓடிக்கொண்டிருப்பதாகவும் கற்பனை செய்துகொள்ளுங்கள். பலரும், அந்தப் பலகைப் பாலத்தின் மீது நடக்க மறுத்துவிடுவார்கள். பயம் அவர்களைத் தடுத்துவிடும்.

ஒருவன் விழிப்புடன், அதாவது தூங்காது விழிப்பு நிலையில் இருக்கும்போது பயம் ஏற்படுவது சகஜமே. ஆனுல் அவன் தூங்கிக் கொண்டிருக்கும்போது, அவனுக்குப் பயம் ஏற்படுவதில்லை. அவன் தீரமுடன். மிகுந்த சுறுசுறுப்புடன் தயக்கமின்றிச் செயல்படுகிறுன். இதுதான் தூக்கத்தில் நடக்கும் அசாதாரணத் திறமைக்குக் காரணம்.

## தூக்கத்தைக் கலைக்கக்கூடாது

தூக்கத்தில் நடக்கும் ஒருவனை, அவனது செயல்களின்போது எழுப்புதல் கூடாதுமாருக, அமைதியாக அவனது கையைப் பிடித்து, அவனிடத்துக்குக் கூட்டிச் செல்லவேண்டும்.

இக்கட்டுரையின் ஆரம்பத்தில் கூறப்பட்ட பையனின் கதையும் இப்படித்தான். அவனுக்குப் பெற்ருேர்கள் செய்யவேண்டிய உதவி என்னவென்ருல், அவனது தினசரி வாழ்க்கையைக் கண்டிப்பாக வரையறுத்து அதனை அவன் ஒழுங்காகப் பின்பற்றுமாறுசெய்யவேண்டும். படிப்பதற்கும், விளையாடுவதற்கும் உண்பதற்கும் உறங்குவதற்கும் சரியான காலத்திட்டத்தை அமைத்து, அதனை அவன் பின்பற்றுமாறுசெய்யவேண்டும். தகுந்த உடற்பயிற்சியுடன். அவனது நரம்பு மண்டலத்திற்கு முறுக்கேற்றசில நல்ல டானிக்குகளும் கொடுக்கப்படவேண்டும். தூக்கத்தில் நடக்கும் வியாதியுடன், வேறெரு வியாதியும் சேர்ந்து இருப்பதாகத் தெரிந்தால், அந்தநோயைக் கண்டறிந்து குணப்படுதத வேண்டும்.

“நமது மூதாதையரான மனிதக் குரங்குகளுக்குள்ள சில தன்மைகளின் பலன்தான் தூக்கத்தில் நடப்பது போன்றவியாதிக்கு முக்கிய காரணம்.”

---

கைம்மையைப் போக்க, தாயைக் காத்துச் சேயை வளர்க்க ... ...

# வீட்டுக்கொருவர் முன்வரும் நாளே நாட்டின் பொன்னுள்

**விண்ணகத்தையெல்லாம் வெற்றி கொண்டுவிட்ட இவ்விந்தை யுகத்தில் மனிதஇரத்தத்திற்குப் பதிலாகப் பயன்படுத்தக்கூடிய எதுவும் இன்னும் விருத்தி செய்யப்படவில்லையே என்று கவலையுறும் கட்டுரையாளர் கைம்மைநிலையையும் அநாதை நிலையையும் நீக்க வீட்டுக்கொருவர் என்ற ரீதியில் அணிவகுத்து இரத்ததானம் செய்ய முன்வரும் நாளே நாட்டின் பொன்னுள் என்கிருர்.**

**அ. ஜேம்ஸ் ஞானப்பிரகாசம்**

பாராளும் மன்னன் அவன் பவனிவரும் வேளையில் பற்றிக்கொள்ள ஏதுமின்றிப் பரிதவித்து நின்ற முல்லைக் கொடிக்குத் தன் தேரையே பற்றுக்கொடுத்தான் வள்ளல்பாரி. வீரப்போர் புரிந்தபின்பு குற்றுயிரும் குலையுயிருமாகக் கிடந்தவேளையிலும் தன் தருமத்தையெல்லாம் தாரைவார்த்துக் கொடுத்தபின்பே விண்ணுலகு எய்தினுன் கர்ணன், ஒருபுருவின் உயிருக்காக தன் உடலையே அர்ப்பணிக்கத் துணிந்தான் சிபிச்சக்கரவர்த்தி. இவை எல்லாம் நம் பழந்தமிழ் மன்னரின் புகழ்பரப்பும் சிறப்புச் செயல்கள். ஆனல் இன்றேு உற்ற நண்பனையும், உயிருக்குயிரான மனைவியையும், பெற்ற தாயையும் கூடக் காப்பதற்காக ஒரு துளி இரத்தத்தைத் தானஞ் செய்யத் தயங்கும் இழிநிலையில் இருக்கிறேம் என்பதை அறியும்போது மிக்க வருத்தப்படவேண்டியுள்ளது.

விஞ்ஞானம்மிக்கவளர்ந்துவிட்ட இந்நாளில்கூட ஒவ்வொருநாளும், நம் தாய்த் திருநாட்டில் நூற்றுக்கணக்கில், விபத்துக்குள்ளாகிக் காயப்படுவோர், பிரசவத்தின்போது இரத்தப் போக்கிற்கு ஆளாகும் தாய்மார், ‘நீலம்பாய்ந்த’சிசுக்கள், சத்திர சிகிச்சைபெறும் நோயாளர்கள், இரத்தச் சோகை போன்ற பல்வேறு நோய்களால் அல்லற்படும் மக்கள்... இப்படிப் பலரும் தம்வாழ்வின் [illegible] இரத்தத்திற்காக ஏங்கித் தவித்து அல்லலுற்று அவஸ்தைப்படும் காட்சி கல்லையும் கனியவைத்துவிடும்.

விண்ணகத்தை எல்லாம் வெற்றிகொண்டுவிட்ட இவ்விந்தையுகத்தில்கூட மனித இரத்தத்திற்குப் பதிலாக பயன்படுத்தக்கூடிய எதுவும் இன்னும் விருத்திசெய்யப்படவில்லை என்னும் கசப்பான உண்மையை நாம் உணரவேண்டியுள்ளது. இன்னும் மனித உடல்தான்இரத்தம் பெறுவதற்கு ஆகாரமாக இருக்கிறது, இரத்தம் உற்பத்தி செய்யப்படமுடியாதவரை போதியளவு இரத்தம் பெறுவதற்கு தாராள மனம்கொண்ட தருமவான்களின் உடலையே, வைத்திய உலகம் நம்பியிருக்கவேண்டியுள்ளது.

## இரத்தத்தின் மாண்பு

ஜீவராசிகளிடத்தெல்லாம் பல அற்புதங்களைப் புரியும் இரத்தம் கோடிக்கணக்கான நுண்அணுக்களை ‘பிளாஸ்மா’ என்னும் திரவத்தில் கொண்டிருக்கிறது. இத்திரவத்தில் புரதச் சத்துக்களும் மற்றும் அத்தியாவசிய சத்துக்களும் அடங்கியுள்ளன. செஞ்சீவ அணுக்கள் சுவாசப்பையிலிருந்து பிராணவாயுவை உடலில் எல்லாப் பாகங்களுக்கும் எடுத்துச் செல்கிறது. வெண் சீவ அணுக்கள் நோயையும் கிருமித்தொற்றையும் எதிர்க்கிறது. இரத்தம் வடியும்போது ‘பிளேற்றற்’ என்னும்பொருள் அதனைக் கட்டிபடச்செய்கிறது. இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த இரத்தம் நம் உடலில் போதியளவு இல்லாதபோது நமது உடலில் போதியளவு உயிர்த்துடிப்புக் கொடுககமுடியாமல் ஆகிவிடுகிறது. இதன் முடிவு நமது கடைசி அத்தியாயத்திற்கு முற்றுப்புள்ளி வைத்துவிடுகிறது.

மனித உடலின் இயக்கத்திலும் உற்பத்தியிலும் முதன்மையும் முக்கியத்துவமும் வாய்ந்துள்ள இரத்தத்தை இழந்தவருக்கு இத்தறுவாயில் இரத்தம் ஏற்றுதலே தனிச்சிகிச்சையாகும். இதுவே உயிர் கொடுக்கும் சிகிச்சையுமாகும். இரத்தம் வேண்டித் துடிககும் உயிர்கள் எல்லாம் இரத்தம் ஏற்றப்படுவதால்மட்டுமே காப்பாற்றப்படமுடியும்.

## தீங்கு விளைக்குமோ?

தனக்குக்கண்டு தானம் வழங்கு என்ற முதுமொழிக்குஒப்ப, யார், எப்போது. எவ்வளவு இரத்தம் தானஞ் செய்யலாம் என்ற கேள்விக்கு மிக நுணுக்கமான, ஆதாரபூர்வமான நீண்ட பல ஆராய்ச்சிகளின் பின் வைத்தியத்துறை வல்லுநர்கள் பின்வரும் வரையறைகளைக் கூறியுள்ளனர்.

18 வயதிற்கும் 50 வயதிற்குமிடைப்பட்ட தேகாரோக்கியமுள்ள கயரோகம்,

(15-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெனனகால ஜென்ம நட்சத்திர ராசிகொண்டு பலனை அறியுங்கள்

# இவ்வாரம் உங்கள் பலன்

ஜோதிஷமணி மேல்கரவை

— காவ. சிவப்பிரகாசன் —

**மேடம்:** பணவிஷயம் உள்ளிட்டு வியாபார வகையில் சிக்கல் தோன்றும். புகையிரதவகைப் பிரயாணம், களவு, விபத்துவகை தொல்லை கொடுக்கும். சோதரவழி வாக்குவாதம் மனக்கிலேசம்உண்டு. முதுசவகைச்சொத்து சேரவழியுண்டு. பெண்பாலார் களிப்பிற்கிடமேயில்லை. புத்திரர்க்கு விஷநீர்ப்பீடை உண்டு. யாத்திரைகிட்டும்.

**இடபம்:** அமைதியை நாடுவீர்கள், வெற்றி கைமேல் கிட்டிவிடும் அமைவுண்டு. எதிராளி தொந்தரவு சிறிது உண்டு. செலவினம் அதிகரிக்கும். நடுப்பகுதி விபத்து நிகழும். பிதாவழி மறைவு காண்பீர். பிறதேச சஞ்சாரம் உண்டு. சொத்துவகை வழக்கு நிகழ இடமுண்டு. மாற்ருனுடன் முன்னெச்சரிக்கையுடன் நட.

**மிதுனம்:** கடினகாலம் தான். குடும்பத்தில் வாக்குவாதம் நிகழும். எதிர்பாராத செலவினம் வாட்டும். தூரதேசஉறவினர் பாதிப்புக்காண்பர். இரத்தசம்பந்தப்பட்டு நோய்கள் தோன்றும். வயது முதிர்ந்தோர் மறைவு நிகழும். பெண்ணுல் ஏமாற்றம் காண்பீர். மேற்படிப்புக்கு இடமுண்டு.

**கடகம்:** கஷ்டகாலம்பூரணமாய் நீங்கிவிட்டது. சோதரரிடை பிணக்கு தோன்றும். பணநிலை சீர்பெருது. தொழில் ஸ்தாபனத்தில் பிணக்குத்தோன்றினும்முன்னேற்றம் உண்டு. புத்திரர் நோய்வாய்ப்படுவர். கமத்தொழில்லாபமுண்டு. வாகனவகை நட்டம் காண்பர்.

**சிங்கம்:** சந்தோஷ சூழ்நிலை. பணநிலை சீரடையும். வியாபாரவகையில் முன்னேற்றம்கிட்டும். விவாகபந்தம், புத்திரப்பேறு இவை நிகழ இடமுண்டு. வேலைத்தலத்தில் தரத்தில் குறைந்த ஊழியருடன் பிணக்குத் தோன்றும். விபத்து நிகழ இடமுண்டு.

**கன்னி:** எதிர்பாராதவகையில் பணவரவுநிகழும். தொழில்விருத்திகாண்பர். குடும்பச்சச்சரவு மறைவுபடும். கடின பான்மையுடன்தான் பிறருடன் தொடர்பு காண்பர் குடும்பவழிவிபத்து உண்டாகும். படிப்பில் முன்னேற்றம் இல்லை. உஷ்ணம் சம்பந்தமாய் நோய்கள் தோன்றும்.

**துலாம்:** இரத்தாசயம், சுவாசப்பை சம்பந்தப்பட்டு நோய்கள் தோன்றும். வாகனச்சுபமுண்டு. பிதாவழி விபத்து நிகழும். மாதாவழி நரம்பு சம்பந்த வியாதிப்பயமுண்டு. படிப்புவகை நாட்டம் குறைவுபடும். சோதரர் பிரிவு நிகழும்.

**விருச்சிகம்:** மாமன்வகை மறைவுண்டு. சொத்து, கையிழப்பு நிகழும். வியாபாரவகை மந்தம் உண்டு. புத்திரர் பிணக்கு நிகழும். குடும்பத்தில் சிறுதொல்லையுண்டாகும். தொழில் உயர்ச்சிகிட்டும். பெண்பாலார் மனநிம்மதிக்குறைவுண்டாகும். பிரயாணம் தவிர்க்கவும்.

**தனு:** பலவிடத்திலும் எதிர்ப்புத்தோன்றும். யாத்திரை. பிரயாணம் இவை சுமுகமாய் நிகழும், காதலில் விறுவிறுப்புண்டாகும். பெண்கள் உதவி கிட்டும். வியாபார முன்னேற்றம் காண்பர். பங்குதாரர் லாபம் பெற இடமுண்டு. புத்திர விருத்தியுண்டு.

**மகரம்:** பணப்பெருக்கமுண்டு. வாகனக்கொள்வனவு தவிர்க்கவும். சோதரரை நம்பி ஏமாற்றமடைய வேண்டாம். கிழமை முற்பகுதியில் சிறிது மனச்சஞ்சலமுண்டு. பெற்ருேர்நோய்வாய்ப்படுவர். விஷஜெந்துக்களால் அபாயமுண்டு.

**கும்பம்:** படிப்பு முன்னேற்றம் காண்பர். பிறரால் கௌரவிக்கப்படும் அமைவு உண்டு செலவுகட்கு பணமிருந்தும் பயன்பட இடமில்லை. பிரயாணம் உண்டு. காதலர்க்கு ஒரே குதூகலம்தான். சிறுமனஸ்தாபமும் நிகழலாம். குடும்பத்தார் உஷ்ண ரோகம் காண்பர்.

**மீனம்:** மனச்சஞ்சலம் குறைவதாயில்லை. குடும்பப்பிணக்கு விறுவிறுப்புக் காணும். எதிராளிகளுடன் சேர்தல் தீது. சிறுபணவரவு நிகழும். கமத்தொழில் பலிதம்காண்பர். ஆட்சியாளர் உதவி கிட்டும். தொழில் விருத்தி குன்றும்.

## முக்கிய தினக்குறிப்பு

பெப்ரவரி

| | | |
|---|---|---|
| 15 | (1564) | கலிலியோ ஜெனனதினம். |
| 15 | (1942) | சிங்கப்பூர் ஜப்பானியர் வசமாகியது. |
| 16 | (1796 | இலங்கையில் ஆங்கிலேய ஆதிக்கம் ஆரம்பம். |
| 16 | (1954) | டி. கே. சிதம்பரநாத முதலியார் மறைவு. |
| 16 | ( — ) | பீம ஏகாதசி விரதம். |
| 17 | (1836) | ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் தோற்றம். |
| 19 | (1855) | உ. வே. சாமிநாதையர் தோற்றம். |
| 20 | ( — ) | உடப்பு மாரியம்மை அலங்கார உற்சவம் |

## தேசிய நோக்கு

அன்னிய தேசத்தாருடைய வியாபார நிலை பெருகும் நிலையுண்டு. மக்களிடையேவிவாகம் நடக்கும் வீதம் கூடுதலையும், ஒடுக்கப்பட்ட சாகியத்தாரிடை அமைதியின்மை வலுவடையும். இரும்பு, உருக்குத் தொழில் சம்பந்தப்பட்டுள்ள முக்கிய பெரியார் ஒருவரின் மறைவும் உண்டு. துறைமுகத்தொழில் சம்பந்தப்பட்ட பிணக்குகள் சீர்பெற இடமேயில்லை. திடீர் மரண விபத்துகள் அதிகரிக்கும். ஆட்சியாளர் கை மேலோங்கும் சாத்தியக்கூறுகள் உண்டு. கிழமைக் கடைக்கூறில் கீழ் கரையோரப் பகுதிகளில் பரவலாக மழை, காற்று உண்டு.

தேவாரத் திருவமுது

# கலைபயில் அந்தணர் வாழும் கலய நல்லூர்


நிற்பானுங் கமலத்தில்
இருப்பானு முதலா
நிறைந்தமரர் குறைந்
திரப்ப நினைந்தருளி
யவர்க்காய்
வெற்பார்வில் லரவுநாண்
எரியம்பால் விரவார்
புரமூன்றும் எரிவித்த
விகிர்தனூர் வினவில்
சொற்பால பொருட்பால
சுருதியொரு நான்குந்
தோத்திரமும் பல
சொல்லித் துதித்
திறைதன் திறத்தே
கற்பாருங் கேட்பாரும்
ஆசியங்கும் நன்கார்
கலைபயிலந் தணர்
வாழுங் கலய நல்லூர்
காணே.

நெடிய வடிவத்தில் நிற்பவர் திருநெடுமால். செந்தாமரைப் பூவில் இருப்பவர் பிரமா தேவர்களுக்கு அரசன் இந்திரன். அகில ஆன்ம வர்க்கத்தையும் வருத்தியவர் முப்புரத்து அவுணர்கள். அம்மூவராலும் நேர்ந்த துன்பத்தை தாங்க முடியாமல் வருந்திய அரிபிரமேந்திராதி தேவர்கள் காத்தருளும்படி கைலாசபதியிடம் வந்து அடைக்கலம் புகுந்தனர். அவர்களைக் காத்தருளத் திருவுளங்கொண்ட கைலாசபதியானவர் போர்க்கோலம் புனைந்தார். அப்போர்க்கோலத்தில் சிவபிரானுக்குப் பூமியே தேர். சூரிய சந்திரரே அதன் சில்லுகள். நால் வேதங்களே நான்கு குதிரைகள். பிரமனே அத்தேர்ச் சாரதி. மகாமேருமலையே சிவபிரான்கையில் வில்லாயிற்று. ஆதிசேடனே அவ்வில்லுக்கு நாண். நாராயணனே அம்பு. இவ்வாருகவே எல்லாத்தேவர்களும் சிவபிரானதுபோர்க்கோலத்துக்கு அங்கமாயினர். அவ்வாறு அமைந்தவுடன் அத்தேவர்கள் யாவருடைய உள்ளத்திலும் அவர்களை அறியாமலே ஓர் இறுமாப்பு உண்டாயிற்று. அது யாதெனில் ''சிவபிரான் பேராற்றல் வாய்ந்தவராயினும் எங்களுடைய உதவியாலன்ருே போர்க்கோலங்கொண்டு முப்புரத்தவுணரைப்போரில் வெல்லப் போகிருர்'' என்பது, எங்கும் நிறைந்த பரம்பொருளுக்கா அந்த உளக்குறிப்பு அறியப்படாதிருக்கும்? யுத்தத்திற்கு யாவும் சித்தமாகவே எல்லாத் தேவரும் பிறவும் ஆயத்தமாயினர். முப்புரத்தவர் எதிர்ப்பட்டபோது சிவபரம்பொருள் தமது திருவாயில் ஒரு புன்முறுவல் பூத்தருளினர். இவர்களது அறியாமை இருந்தபடி என்னே? என்பது அப்புன்சிரிப்பின் பொருள்போலும். அச்சிரிப்பிலிருந்து அக்கினிப் பிளம்பு கிளம்பியது. தாரசாக்கன், கமலாக்கன், வித்யுன்மாலி என்னும் முப்புரத்தவரும் எரிந்து நுண்ணிய சாம்பராயினர். இவ்வாறு ஒரே செயலில் யாவரது மயக்கத்தையும் அழித்தருளிய சிவபிரானர் கோவில்கொண்டு சாந்நித்தியமாக எழுந்தருளியிருக்கும் ஊர் யாது? எனில்—

எடுத்தல், படுத்தல் நலித்தல், நீட்டிநலித்தல் என்னும் நால்வகைச் சுரபேதங்களோடு ஓதப்படும் நால் வேதங்களையும், பொருள் விரிவுகொண்ட மாபாடியங்களையும் தோத்திரங்களையும் பலவாகச் சொல்லித் துதித்துஇறைவனதுபேராற்றலைப்பற்றிக் கற்பவரும் கேட்பவரும் ஆராய்பவரும் சிந்திப்பவரும் தெளிபவரும் ஆகிய நல்லதுறையில் ஈடுபடும் அந்தணர் வாழுகின்ற திருக்கலய நல்லூராகும். (5

— க. வை. ஆ. சர்மா —

# பண்ணைக்கு ஒரு புதியபடைப்பு




எத்துறையிலும் மனிதனின் சிரமத்தைக் குறைப்பதில் நவீன விஞ்ஞான கருவிகள் பெரிதும் உதவிவருகின்றன. பண்ணையாளருக்கு நன்கு பயன்படக்கூடிய நடமாடும் இயந்திர ஆலையொன்றை பிரிட்டிஷ் கம்பனி ஒன்று உருவாக்கியுள்ளது. விலங்கின உணவை உடனுக்குடன் தயாரிக்கும் இப்புதுரகமான இயந்திரஆலை வைக்கோலையும் தானிய வகைகளையும் அரைத்து, [illegible] இந்த ஆலை தனித்தியங்க வல்லதாக அமைக்கப்பட்டிருக்கிறது. டீஸலினுலேயே இது செயற்படுகிறது.

இந்தஆலை பலவித நன்மைகளைக் கொடுக்கக்கூடியதென உற்பத்தியாளர்கள் கருதுகிருர்கள். இதனைஇயக்குவதிலும், சுமைகளைக் கையாளுவதிலும் சிரமம் குறைவாக இருப்பதோடு, எரிபொருள் செலவும் பெரிதும் குறைகிறது. இந்த ஆலைக்குள் பிரமாண்டமான சாக்குப்பைகளைத் தூக்கும் பாரந்தூக்கி, இரு கலவை கருவிகள், தானியத்தை அளக்கும்கருவி, பதனப்படுத்தும் சாதனம்ஆகியவை உண்டு. இக்கலவைக் கருவிகள் அளந்து கொடுக்கப்படும் தானியவகைளை அரைத்து கலக்கி கால்நடைகளுக்குஏற்ற உணவைத் தயாரித்துவிடுகின்றன? தூசியோ எந்தவித தொற்றுநோய்க்கிருமிகளோ இதனுட் செல்ல வழியேயில்லை.

இந்த ஆலைக்குரிய சகல இயந்திர சாதனங்களும் காலநிலை பாதுகாப்பை முன்னிட்டு உள்ளடக்கி மூடப்பட்டிருக்கின்றன. 163 குதிரைச்சக்தியுடைய டீஸலே இதை இயக்குகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# சமநீதி

நாளைக்குப் பிள்ளையார் கோவில் கொடியேற்றம். அதனை மீண்டும் எத்தனை யாவதோ முறையாக நினைத்துப் பார்த்துக்கொண்டாள் மயிலி. பின்னேரமாக தன்னுடைய ஆட்கள் யார்தான் ...எவர்தான்... கோவில்வீதி கூட்டித்துப்பரவாக்கவராது போனாலும்... எப்படியும்... என்ன விதப்பட்டும்... தானென்றாலும் கோவிலடிக்குப்போய்க் கோவில்வீதி கூட்டித் துப்பரவாக்கிவிட்டுத்தான் வருவது என்று மனதில் உறுதிப்படுத்திக் கொண்டவளாய், ஓடியாடிப் பரபரவென்று தன்னுடைய வீட்டுவேலைகளைக்கவனிக்கத் தொடங்கினாள் ... அடி வீட்டிற்குள் பாயில் முடங்கிக் கிடந்த அவள் கணவன் கணபதி ஆற்றில் குளிக்கப் போய் பெரிய இராட்சத முதலையிடம் அகப்பட்டுக் கொண்டதாகக்கனவு கண்டு கதறியவன்போல ''மயிலி... மயிலி...'' என்று சத்தமிட்டு அழைத்தான். வேலையில் ஆழ்ந்திருந்த மயிலி அவன் குரல்கேட்டு பதறியடித்து எழுந்து உள்ளே ஓடினாள்.

வாசலைக் கூர்குறிப்பாக உற்றுநோக்கியபடி காத்திருந்த கணபதி மயிலியிடம் கூறினான்;... ''இந்தா மயிலீ இப்ப ஒரு கிழமை இரண்டு கிழமையாய்... நானுனக்குப் படிச்சுப்படிச்சுச் சொல்லிக் கொண்டு வாறன்...பேந்து... மறந்து கிறந்துபோயெண்டாலும்... இண்டைக்கிக் கோயில்வீதி கூட்டித்துப்பரவாக்கிற வேலைக்கு கடைசிவரை போய்விடாதே என்ன...? ...எங்கடையாக்களை...உவங்கள்கோயிலுக்குள்ளை மன ஒற்றுமையாய்ப் போகவிடுகிற வரைக்கும்... எங்கடையாக்களெல்லாரும் இப்பிடியே ஒற்றுமையாக... கோயிலடிக்கு எந்தவிதமான தொண்டுதுரவுகள் செய்யப் போகாமலும் கும்பிடப் போகாமலும்எங்களெங்கள் வீடுவாசலிலேயே இருந்து எதிர்ப்பைக் காட்டினால் தான்...உவங்களின்ரை செருக்கெல்லாம் நல்லவடி வாயடங்கும்... கோயிலுக்கெண்டு உவங்கள் வந்து கேட்டால்...ஒரு இளநீர் குடும்பைதன்னும் எங்கடையாக்கள் எனிமேல் புடுங்கிக் குடுக்கமாட்டாங்கள்... அப்பிடியெண்டாலும் ஆரும் மானம் ரோசம் வெட்கம் கெட்ட புறத்தியாங்களைக் கூட்டியாந்துநாங்கள்செய்து குடுக்காத வேலைகளைச் செய்விப் பாங்களாக்கும்... நாங்களேறிப் பிழைக்கிற தங்கடை பனைகளையும், தென்னைகளையும் அப்பிடி மிஞ்சிப்போனால் எங்களுக்கு விடமாட்டமெண்டு தடுத்து மறிப்பாங்களாக்கும்..உதுக்கெல்லாம் இனிப்பயந்துசாக முடியுமோ...? ஒண்டில் லாட்டியொண்டு...கடவுளேயெண்டு எங்கடையாக்களுக்கு ...எந்த வன்னிக் காட்டுக்குள்ளேயும் போய்ப் பிழைக்கிற வல்லமையிருக்குது...என்ன மயிலீ...நாங்களெல்லாரும் இப்பிடிச்செய்யிறதாலே... பிள்ளையார்... எங்களை எல்லாம் கோவிப்பார்... தண்டிப்பாரெண்டு மாத்திரம் நீ... பேய்த்தனமாய் விளங்கிப் போடாதை ... நாங்கள் பிள்ளையாரை எதிர்த்துநடக்கல்லையே...? ஏன் மயிலி... இந்தப்பிள்ளையாராலை...எல்லாம் முடியுமெண்டால்... ஏன் அவங்களின்ரை மனத்தை மாறச்செய்து... எங்களையெல்லாம் கோயிலுக்குள்ளை வாருங்கோ வெண்டு கூப்பிடுவிக்கமுடியாது...? அதுதான் சொல்லுறன் மயிலி...இதெல்லாம்... ஏன் எதுக்கெண்டு அவரே... உணரட்டும்... அது வரைக்கும் நாங்களும்... நடக்கிற மாதிரி நடப்பம். நீயும் எங்கடையாக்களெல்லாரோடையும் சேர்ந்து இண்டைக்குக் கோயில் வீதி கூட்டப் போகாமல் ஒற்றுமையாக நில்...ஒரு பெரிய புரட்சிக் கூட்டத்தின் உணர்ச்சிமிக்க தலைவன் பேசியதைப் போல இவ்வாறு சொல்லி முடித்தான்கணபதி''. மீண்டும் எத்தனையாவதோ தடவையாக இடித்துரைக்கும் கணவனின் இந்த வாய் மொழிக்கு தனது உள்ளத்தினால் சம்மதமளிக்காமல் உடலைமட்டும் இசைவாக அசைத்துக்கொண்டது மாதிரியாக ஓமென்றுசும்மாபெயருக்கு தலையாட்டிக்கொண்டு குசினிக்குள் திரும்பினாள் மயிலி. பல்லுப்பிடுங்கியும் பல்விஷம் போகாத ஒரு கொடிய விஷப்பாம்பாகவே தன்னுடைய கணவனை அப்பொழுது அவள் தனக்குள் உருவகித்தாள்... ''சிமானுக்குப் பிள்ளையார் நல்ல பாடம் படிப்பிச்சும் இன்னும்தான் அறிவுவரலலையோ...'' என்று அவள் மனம் எண்ணி வருந்தியது. பின்நோக்கி மூன்று நான்கடி நடந்து சென்று குசினிக்கப்புடனே பின்பக்கமாய் கைகட்டி நின்ற அவளின் மனம் சிந்தனையில் ஆழ்ந்தது. ஒன்ரு இரண்டா, எத்தனை சம்பவங்கள்...

வடபகுதியிலுள்ள சகல சைவ ஆலயங்களிலும் தங்கள் சாதியினருக்கு கதவு திறந்துவிடும் பிரச்னை தீவிரமடைந்து அது விஷயம் தங்களுடைய கிராமத்திற்குள்ளும் மிக மிக வேகமாகப் பரவி விட்டதையும்... சென்ற பிள்ளையார் கோவில் கொடியேற்றத்திருவிழாவன்று தன்னுடைய கணவனின் தலைமையில் ஒரு கும்பல் ஆலயப்பிரவேசம் செய்ய முற்பட்டபோது பிள்ளையார்கோவில் தர்மகர்த்தாவான விக்கினேஸ்வரக்குருக்களும் இன்னும் பலரும் கூடி அவர்களை மூர்க்கத்தனமாக அடித்து விரட்டிவிட்டதையும்... இதனால் மிகவும் ஆத்திரமடைந்துபெரும்வன்மம்கொண்டுவிட்ட தனது கணவன்... ஆலயப் பிரவேசத்தை வருகின்ற திருவிழாவிலன்றுதுப்பாக்கி, எறிகுண்டு போன்ற பயங்கரசக்திகளோடு வலோற்காரமானமுறையில்அதிதீவிரமாகநடாத்தப் பலபேரோடு கூடி இரகசியமான முறையில் திட்டம் போட்டிருந்ததையும்... அதற்கிடையில் இந்தத்திருவிழாவிற்கு ஒருமாதமிருக்கத்தக்கதாகத் தலைக்கிடாய் விழுந்தகணக்காகத் தன்னுடைய கணவனைப் 'பாரிசவாதம்' மின்னுமல்முழங்காமல் படுக்கையில் போட்டுவிட்டதையும் ... அமைதியற்ற உள்ளத்தினளாய் நினைவு கூர்ந்து நின்றாள். தன்னுடைய கணவன் நடந்துகொண்ட அடாத்தான விதம்... பிள்ளையாருக்கு கொஞ்சமும் பிடிக்காமற்தான்...பிள்ளையார் தன்னுடைய கணவனை இந்தத்திருவிழா வருவதற்கிடையில் இவ்விதமாகத் தண்டித்துக்காட்டியிருக்கின்ருரென்ற தனது வலுவான எண்ணத்தை நடுங்கிப் பதறும் ஒருவித பக்திப்பரவச மேலீட்டான மன உணர்ச்சியுடனே மீண்டும் உறுதிப்படுத்திக்கொண்டாள்... 'பிள்ளையார்கண்ணுக்குமுன்னாலை காட்டிவைச்சது பத்தாது ...பத்தாது....பேந்தும் பேந்தும்...அதமக் கூத்தாடி... தலையாலை நடந்து... தெய்வத்தைக்கொண்டுஒரேயடியாகச் சினப்பித்து... இருந்த இடம் தெரியாமலுக்கு அழிஞ்சுபோற புத்தியோ...?'' என்றெல்லாம் தனக்குள் நின்று ஆவேசக் கூத்தாடியபடி கணவனைக் காரசாரமாகச் சினந்து கொண்டாள். ''இண்டைக்கி ஆர் கெட்டாலென்ன... ஆர்...செத்தாலென்ன... நான் கோயில்வீதி கூட்டித் துப்பரவாக்கிற வேலை செய்யிறது செய்யத் தப்பாது'' என்று தனக்குள் சபதம் செய்துகொண்டாள் மயிலி. நேரத்தின் துரிதமான ஓட்டத்திற்குத்தக்கதாகத் தன்னுடைய கையைக் காலையாட்டி... அவதி அவதியாக வீட்டு வேலைகளை ஒதுக்கி முடித்துக்கொண்டவள் ...... அதன்பின் முதல்வேலையாகத் தன்னுடைய கணவனுக்குத் தெரியாமல் கோவிலடிக்குக்கொண்டு போக வேண்டிய பெரிய நார்க் கடகத்தையும் விளக்குமாற்றையும் வேலியாற் தூக்கி வெளியே போட்டுவிட்டு... ''இஞ்சரப்பா... இருந்து கொள்வாறன்... வள்ளிமச்சாள் வீட்டை கனநாளாய்ப் போகேலை...ஒருக்கா அந்தப் பக்கம் போட்டு பொழுது படவாக வந்திடுறன்'' என்று சொல்லிக்கொண்டு பிடிபடாமல் களவெடுத்துவிட்டு சிறைச்சாலையிலிருந்து தப்பித்துக்கொண்ட கடூழியத் தண்டனை பெற்ற கைதியாகக் கோவிலடியை நோக்கி ஓட்டமும் நடையுமாகப் பறந்தாள்,

கோவிலடிக்கு கண்மூடி விழிக்கும் நேரத்திற்குள்ளாக வந்துசேர்ந்தவள் அங்கு கோவில் வீதியில் ஒரு காகமும் பறக்காததைக் கண்டு சிறிதேனும் மனம் தளராதவளாகப் பல்லை யிறுக்கிக்கடித்துக்கொண்டு கோவில் வீதியைக் கூட்டிப் பெருக்கலானாள். தன்னுடைய ஆட்கள் செய்த வேலையை நினைக்க நினைக்க அவளுடைய இதயத்திலிருந்து ஆத்திரம் கொதித்து எழுந்தது. கோடைவெய்

(12-ம் பக்கம் பார்க்க)

— தையிட்டி இராசதுரை —

'ஈழநாடு' பத்தாவதாண்டு நிறைவையொட்டி நடாத்தப் பெற்ற இலக்கியப் போட்டியில் பாராட்டுப்பெற்ற சிறுகதைகளில் இதுவுமொன்று.

''இல்லறம் அல்லது
நல்லறம் அன்று''

ஈழத் தமிழர் இன்புற்றிருக்க சீதன முறையை சிரியமுறையில் முன்னேர் வகுத்தார்.

ஆண்களும் பெண்களும் ஆனந்த தம்பதிகளாகவும் முதலைக்காத்து வட்டியில் வாழவும் சீதனப் பணத்துடன் சிக்கனமாக தயக்கமின்றி வாழ்க்கையை வகுக்கவும்

தம்பி அன் கோ

நிரந்தர சேமிப்பிற் சேருங்கள்

ரூ. 3000/-தொடக்கம் ரூ. 30000/- வரை

வருடம் 12 சதவீதம் (12% P.A.) வட்டி

கொடுக்கப்படும்.

முக்கிய அறிவிப்பு:-

(1) வட்டி ஒவ்வொரு மாதமும் முதற் போயா தினத்தில் திருநெல்வேலி ஆபீசில் கொடுக்கப்படும்.

(2) முதலை எப்பொழுதும் 3 மாத அறிவித்தலில் எடுக்கலாம்.

முழுவிபரங்கட்கு:-

தம்பி அன் கோ.,

திருநெல்வேலி

வண்ணார்பண்ணை :-: யாழ்ப்பாணம்

சின்னஞ் சிறுகதை

## அன்பின் திறன்கண்டான்

மந்தை வெளியில் மேய்ந்துகொண்டிருந்த மாடொன்று மேய்ப்போனின் கண்காணிப்புக்குத் தப்பி அப்பாற்சென்றது.

அந்த மாடு சென்ற இடத்தின் அருகே பசுமை பூத்துக் குலுங்கும் வயலொன்றிருந்தது. அதைக்கண்ட மாடு வயலுள் நுழைந்து தன்னிஷ்டையாக பயிர்களை மேயத்தொடங்கிற்று.

வயற்காவற்காரன் அதனைக்கண்டான். சினத்துடன் கோல்கொண்டு மாட்டை அடிக்கத்தொடங்கினான். அது மூர்க்கமுள்ள மாடு. காவற்காரனை கொம்பினாற் குத்த முனைந்தது. காவற்காரனின் ஆத்திரம் அதிகரிக்கவே அதைக் கலைக்கத் தொடங்கினான் மாடோவயலைவிட்டு வெளியேருது வயலுக்குள்ளேயே சுற்றிச்சுற்றி ஓடத்தொடங்கிற்று. காவற்காரனால் ஒன்றும் செய்ய முடியவில்லை. அவன் துரத்தத்துரத்த மாடுவயலுக்குள் ஓடியதனால் பயிர் மேலும் சேதமடைந்ததே தவிர காரியம் கைகூடவில்லை.

மேய்ப்போன் வெளியிலுள்ள மாடுகளைக் கவனித்துப் பார்க்கையில் ஒன்றுஅங்கில்லாதிருப்பதைக் கண்டான் அது சென்ற சுவட்டிலே அவன் சென்றபோது வயலில் மாட்டை காவற்காரன் துரத்துவதையும் அதுமூர்க்கமாக ஓடுவதையும் கண்டான். மெதுவாக மாட்டின்பெயரைச்சொல்லி அழைத்தான். மாடு அந்த அன்புக்குரலின் இனிமையிற் கட்டுண்டு மெதுவாக மேய்ப்போனை வந்தடைந்தது. காவற்காரன் அதிசயித்தான். மாடு தனது மூர்க்கத்தனமடங்கி எவ்வளவு சாதுவாக இருக்கிறது! மேய்ப்போன் மாட்டைஅன்பாக வருடினான். சாந்தமாக அவன்பின் மாடு சென்றது.

— இ. நா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கமத்துறை

— கங்காபுத்திரன் —

## பாரதிகண்ட பாவையர்

'பட்டங்கள் ஆள்வதும்
சட்டங்கள் செய்வதும்
பாரினிற் பெண்கள்
நடத்த வந்தோம்
எட்டுமறிவினில்
ஆணுக் கிங்கேபெண்
இளைப்பில்லை காணென்று
கும்மியடி'

பாட்டுக்கொரு புலவனுன பாரதி இந்தப் பாட்டைப்பாடி பல ஆண்டுகள் ஆகிவிட்டன. அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு? என்று கேட்டவர்களையெல்லாம் அடக்கிவிட்டு நாட்டின் விடுதலையில் ஆயிரம் ஆயிரம் பெண்கள் கலந்துகொள்ள வழிவகுத்தது அவன் பாடல். சட்டங்கள்செய்யவும் பட்டங்கள் ஆளவும் வழிகிடைத்தது. இன்று இந்தியாவை இந்திராகாந்தி என்ற பெண்மணி பல்வேறுபட்ட பிரச்னைகளுக்கு நடுவே அச்சாணிஆக நின்று காப்பது பாரதியின்ஆசிதான். இலங்கையையும் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா ஆட்சிபுரிந்ததும் நேற்றுத்தான். இது வரவேற்கக்கூடியது, பெண்கள் பெருமைபெறக்கூடியது.

ஆனால், எதற்கும் எல்லாவற்றுக்கும் ஆணுக்கிங்கே இளைப்பில்லை என்று கருதும் சிலபெண்கள் உடை விஷயத்தில் ஆண்களைவிட சற்று மெலிந்துபோகின்ற இந்தக் காலத்திலே 'மாதரறங்கள் பழமையைக் காட்டிலும் மாட்சிபெறச்செய்து வாழ்வமடி' என்று பாரதி அழுத்திச் சொல்வதைக் கவனிக்க வேண்டும். தொன்றுதொட்டுஅறங்களையே நமது பெண்குலம் சிறப்பாகச் செய்து தெய்வநிலை அடைந்தனர் என்பதையும் பாரதி தனது புதுமைப்பெண்ணுக்குச் சுட்டிக்காட்டியிருக்கின்ருன். அறங்களை 'பழமையைக்காட்டிலும் மாட்சி பெறச்செய்து வாழ்வமடி' என்பதை இன்றைய நவநாகரிக நாரிமணிகள் கவனித்தால் அவர்கள் உடைப் பஞ்சத்தை அனுசரித்துச் சிக்கனம் பிடிக்கமாட்டார்கள்.

## பரதம் என்ற சொல்லுக்கு ஒரு விளக்கம்

இன்றைக்கு நமது நாட்டில் பல பெற்ருர்கள் தம் செல்விகளுக்குப் பரதம் பயிற்றுவிக்கப் போட்டிபோட்டுக்கொண்டு முன்னணியில் நிற்கிருர்கள். நமது பண்பாட்டின் மூலவேரே நமது கலைகள்தான். கலைகள் மறுமலர்ச்சி பெறும்போது நாடு நிச்சயம் நன்னிலைப்படும். இந்தக் கருத்துத் துளிர்விடும்போது அதற்குத் தண்ணீர் வார்த்து, உரமுமிட்டுக் கட்டிக்காக்க ஒவ்வொருவரும் கடமைப்பட்டவர்கள். ஆனுல் மறுமலர்ச்சியென்பது வெறும் பாஷணுக அமையக்கூடாது; கலைகளின் ஆழமான அர்த்தத்தை உணர்ந்து வளர்க்க வேண்டும். பரதக்கலை பற்றி கலைஞர் கருணுநிதி வெளியிட்ட கருத்தை நமது உபசபாநாயகர் ஒரு பரத அரங்கேற்றத்தில் கூறினுர்; யான் அவர் கூறியதை உங்களுக்குச் சொல்லக் கடமைப்பட்டவன்.

'பரதம்' என்ற சொல்லின் இரண்டாவது எழுத்தான 'ர' வின் காலை எடுத்தவுடன் 'பரதம்' என்பது பாதம் ஆகின்றது. பாதம் என்ருல் கால் என்பதாகும். பரதசாஸ்திரம் பயில்பவர்களுக்கு பாதமே ஆதாரமாகும். பரதம் என்பதில் இரண்டாவது எழுத்தான 'ர'வை முழுவதும் எடுத்துவிட்டால் அது 'பதம்' என்ருகும். நாட்டியத்தின் ஜீவனே பதத்தில்தான்தங்கியுள்ளது. பரதம் என்பதின் மூன்ருவது எழுத்தான 'த' வை நீக்கிவிட்டால் பரம் ஆகும். அதாவது கடவுள் ஆகும். பரதம் என்பதன் முன்னிரண்டு எழுத்துக்களும் நீங்கினுல் தம் ஆகும். 'தம்' என்ருகும். ஆடுபவர் தம்பிடித்து அதாவது முழுப் பலத்துடன் துரிதமாக ஆட வேண்டிய அவசியத்தை உணர்த்துகின்றது.

## கவிஞன் கொடுத்த இடம்

முன்ஞளில் மூவேந்தர் ஆட்சி செய்தனர். முச்சங்கம் வைத்து முத்தமிழை வளர்த்தனர். பாடும் புலவன் பயன் கண்டான். நாடு அவன் நாவின் பலத்தால் வாழ்ந்தது.

புலவனைப்பேணி, புலவனின் படைப்பையே போற்றிவந்த வள்ளல்களும் மன்னர்களும் அப்புலவர்களின் பனுவல்களிலே வாழ்கின்ருர்கள்.

கம்பரை ஆதரித்தவர் சடையப்ப வள்ளல். கம்பர் சடையப்ப வள்ளல்மேல் வைத்த அன்புக்கும் மரியாதைக்கும் நிகரே கிடையாது.

ஒருசமயம் கம்பர் வீட்டில் நடைபெற்ற விழாவுக்குச் சடையப்ப வள்ளலும் வந்தார். அவருக்கு முன்னர் பல பெரியார்களும், மன்னர்களும் கம்பரின் வீட்டுக்கு வந்திருந்தனர். கம்பரைக் கருத்துடன் பேணுகின்ற சடையப்பருக்குத் தனியிடம் கொடுக்கவேண்டுமென்பது கம்பரின் தாயின் விருப்பம். அவர் தனிமையில் கம்பரை அழைத்து 'மகனே, சடையப்ப வள்ளல் வந்திருக்கிருர். அவரை மற்றவர்களைப்போலப் பொதுவான இடத்தில் வைத்திருக்கின்ருயே, தனியானஇடம் வழங்கிக் கௌரவிக்கவேண்டாமா?' என்று கேட்டார். கம்பர் "அம்மா நீ நினைப்பது போலவல்ல நான் நினைப்பது. அண்ணல் சடையப்பனுக்குத் தனியிடம் கொடுக்க என்வீடு தகுதியல்ல. அவருக்கு நான் கொடுக்க வேண்டிய இடம் உண்டு. அதனைப் பின் அறிவாய்' என்ருர்.

தாய்க்கு அளித்த வாக்குப்படி கம்பர் சடையப்பருக்கு இராமாயணம் என்ற காவியத்திலே தனியிடம் வழங்கியிருக்கிருர், முன்னும் பின்னும் இன்றைக்கும் கம்பன் காவியத்தால் வாழ்வதுபோல காவியத்தினுள்ளே சடையப்பர் வாழ்கிருர்.

ஆகவே, கவிஞன் சிந்தனையில் இடம்பெறும் எவனும் நாளைக்கும் வாழ்வான் என்பதைக் கம்பர் காட்டிவிட்டார். நன்றியைப்போற்றி நன்றியை [illegible] தான் மனிதன். மனிதருள் மாணிக்கம் கம்பன்.

# பசுந்துளிர்

# கடல்காற்றும் பொன்மீனும்

சென்ற ஆண்டு பெப்ரவரி மாதமாக யாழ்ப்பாணம் வந்து கீரிமலைக்கேணிக்கருகே 'சுதந்திர சதுக்கம்' ஒன்றைத் திறந்துவைத்து யாழ்ப்பாணத்தவருக்கு சுதந்திர நினைவூட்டி வைத்துப் போன அமைச்சர் சுகததாசா இவ்வாண்டு பெப்ரவரியில் மீண்டும் வடமாகாணம் வந்தபோது வல்வெட்டித்துறை கடற்கரைப் பக்கம் சென்று அங்கு சமுத்திரத்தைப் பார்த்துவிட்டு 'ஒருகாலத்தில் எத்தனைமன்னர்கள் இக்கடல் வழியாக நமது பூமியிற் கால் வைத்திருக்கிருர்கள்! என்று கூறி நெட்டுயிர்த்துப் பெருமூச்செறிந்து சிலநேரம் பூர்வக்கியானத்தில் ஆழ்ந்து போய் விட்டாராம்.

கௌரவ அமைச்சர் சுகததாசா சிலகாலமாக வடக்கு நோக்கி வந்தபோதெல்லாம் கூடவே சரித்திரகால பூர்வக்கியானமும் அவருக்கு உண்டாகிவிடுவது நாம் அவதானித்த புதுமைதான். அப்பொழுதெல்லாம் நம்மையும் இழுத்துக்கொண்டு போய் சமுத்திரத்தில் ஆழ்த்துவதுபோல சரித்திர காலத்தில் ஆழ்த்தி நமக்கு மூச்சுத்திணறுவதை அப்பொழுது வேடிக்கை பார்ப்பார்.

வல்வெட்டித்துறை சமுத்திரத்தில் மூழ்கி எழுந்ததனுல் சரித்திர பொற்கால ஞானேதயம் எய்தி பழைய கால மன்னர்களையும் தூதர்களையும் மகான்களையும் நினைவுகூர்ந்து அவர்களுக்கு அஞ்சலி செலுத்திய அமைச்சர், அவ்வேளை வாய்க்குள் குறுநகை அரும்ப 'வல்வெட்டித்துறை சமுத்திரத்தில் இன்றைக்கும் மன்னர்கள் ஆட்சி நடைபெறுகிறதாமே, மன்னர்கள் கடல் கடந்து வந்துகொண்டும் போய்க்கொண்டும் இருக்கிருர்களாமே!' என்று இக்காலத்துப் புதிய மன்னர்கள் பற்றியும் ஒருவார்த்தை சொல்லி வைத்தார்.

அமைச்சருக்களிக்கப்பட்ட இதே வரவேற்புக் கூட்டத்தில் பேச எழுந்த பருத்தித்துறைத் தொகுதிப் பிரதிநிதி, அமைச்சரின் 'இராசபக்தி' குறித்து இன்னும் சுவைபடப் பேசினுர். 'வல்வெட்டித்துறையிலே மன்னர்கள் ஏது பிரபு? இங்கெல்லாம் வாழ்பவர்கள் பரம ஏழைகள். அதனுல்தான் உங்கள் கண்களுக்கு அவர்கள் கடல் மன்னர்களாகத் தோன்றுகிருர்கள். சமுத்திரத்தைக் கட்டியாளும் மகா பராக்கிரமசாலிகள் அவர்கள். சலியாத கடின உழைப்பாளிகள். இந்த வழியில் அவர்கள் எல்லோரும் இந்நாட்டு மன்னர்களாகத் திகழ்பவர்களே என்று சொல்லத் தகும்' என்றவர், தொடர்ந்து இதே நீரிணையில் கொடிநாட்டிய தென்னிலங்கை மன்னர்கள் பற்றிக் குறிப்பிட்டு 'அவர்களை மறந்து போய்விட்டீர்களே அமைச்சர்வாள்!' என்று கேட்டுச் சிரித்தார். சென்ற யுத்த காலத்தின்போது அரசாங்கக்காவலில் இருந்து இதே கடல்வழியாக இந்தியாவுக்குத் தப்பியோடிய சமசமாஜக்கட்சி வீரர்கள் —வீர [illegible] தாண்டவமும் அடிமன்றத்தில் அமைச்சரர்க் கொலுவீற்றிருந்ததையும், இருப்பதையும்தான் பருத்தித்துறை தமிழரசன் இவ்வாறு கிண்டல்சுவையுடனே குறிப்பிட்டு அமைச்சரை மேலும் குஷிப்படுத்திஞர்.

இன்ஞெரு தடவை வடபகுதிக் கடற்கரையோரமாகவரும்மற்ருெரு அமைச்சர் அக்கரை இத்தனை சமீபத்தில் இருக்கும்போது இருகரையையும் இணைத்து கடல்மேலாக ஒரு பாலம் அமைத்தால் எவ்வளவு நன்ருயிருக்கும்!' என்று கூறிஞல்கூட நாம் அதையிட்டு ஆச்சரியப்படாமல் அவர் பேச்சை இப்போதைய காற்று வாக்கில் விட்டுவிடலாம்.

வல்வெட்டித்துறையில் கடல் காற்ருனது சரித்திர காலமும் அரசியலும் தேர்தலுமாக இவ்வாறு சுழன்றடித்துக்கொண்டிருந்த போது. யாழ்நகரில் ஒரு சினிமாக் கொட்டகையில் கேரளச்சீமைக் கடற்கரைக் குடியிருப்பொன்றில் தென்னையின்கீற்றிச்சலசலத்திடத் தென்னஞ் சோலைகளினூடாகத் தவழ்ந்து வந்த ஆரோக்கியமான கடற்காற்றை நூற்றுக்கணக்கானேர் கூடியிருந்து மனம் குளிர மெய் சிலிர்க்க அனுபவித்து, அதன் சுகத்தில் திளைத்தார்கள். அது கேரளநாட்டைத் தொட்டுத் தழுவும் அரபிக் கடலிலிருந்து வீசிய கடல் காற்ரு அல்லது கொட்டகையில் தலைக்குமேலே சுழலும் காற்ருடி பரப்பிய மின்காற்ரு என்றெல்லாம் அவர்கள் அப்பொழுது எண்ணிப் பார்க்கவேயில்லை. அந்தக் காற்ருேடு அடிவானத்தில் ஈழ மின்னலும் மலையாள மின்னலும் சூழ மின்னும் அறிகுறி ஏதும் அவர்களுக்குத் தோற்றப்பட்டதோ இல்லையோ - அது பற்றியும் நாம் ஏதும்சொல்லக்கூடியதாயில்லை...

0

பொன்மீன் கதை தெரியுமா? ஒரு ருஷ்ய நாட்டுக் கிராமியக் கதை. கடலிலே மீன் பிடிக்கப்போன ஒரு செம்படவனுக்கு கடல் தேவதை ஒரு நாள் அவன் துயரக் கண்ணீருக்கு இரங்கி ஒரு பொன்மீனை அவன் வலைக்குள் சிக்கவைக்கிருள். செம்படவன் மட்டற்ற

### மணிப்புறவம்

மகிழ்ச்சியுடனே பொன்மீனை கையிலெடுத்து கண்ணில் ஒற்றிக்கொண்டு வீடு திரும்புகிருன். தன் மனையாளிடம் அதைக்காண்பித்து தங்களுக்கு கிட்டிய அதிருஷ்டபாக்கியத்தைச் சொல்லி ஆனந்தக் கூத்தாடுகிருன் "இன்றைக்கு கடுமையாகப்பசிக்கிறதடி, சோறு போடு!" என்றுஅவன்நின்று குதித்தபோது "அரிசியில்லை. எங்கேயாவது வாங்கிவாருங்கள்" என்கிருள் அவள். பொன்மீனை அதற்குரிய பெரும்தொகை கொடுத்து வாங்கக்கூடியவர்கள் யாருமில்லை. அற்ப சொற்ப விலைக்கு பொன்மீனைக் கைவிடவும் மனமில்லை. பசியோ வயிற்றைக்குடைகிறது. கண்களைச் சுழற்றுகிறது. இந்நிலையில் செம்படவன் திரும்பவும் கடலுக்கே ஓடி கடலில் பொன்மீனை விட்டுப் பாதிராத்திரிவேளையில் கடற்கரையில் குந்தியிருந்து, "தேவதையே, எனக்குப் பொன்மீனும் வேண்டாம் வெள்ளி மீனும் வேண்டாம். என்றைக்கும் கிடைத்த சாதாரண மீன் கிடைத்தாலே போதும்" என்று கடல்தேவதையிடம் ஓலமிட்டு ஒப்பாரிவைத்ததாகவும் அதுமாதிரியே ஆகி பொழுதுவிடிய கடலில் வலைவீசிக் கிடைத்த நாலெட்டு மீன்குஞ்சுகளுடனே வீடு திரும்பி சோறு சமைத்து வயிருர உண்டு பசிநீங்கித் திருப்திப்பட்டான் என்றும் அந்தக்கதை முடிவு பெறுகிறது'

இந்த ருஷ்ய நாட்டு பொன்மீன் கதையைப் போல தமிழிலும் பொற்கோடரி கதையொன்று உண்டு. விறகுவெட்டிக்கு வனதேவதை பொற்கோடரி கொடுத்து அவனைச் சோதித்து வேடிக்கைபார்த்ததாம். பொற்கோடரிவிறகு வெட்ட உதவாமல் போனதையும் அதனுல் அவனது இரண்டு நாள் சீவனம்கெட்டுப்போனதையும் விறகு வெட்டி தெரிந்துகொண்டு பொற்கோடரியை ஆற்றில் வீசி எறிந்துவிட்டு முதலில் ஆற்றில் தவறிப்போன சாதாரண கோடரியையே திரும்பவும் வனதேவதையிடம் கேட்டுப் பெற்றுக்கொண்டாஞம்.

'போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து' பேராசை பெருந்தரித்திரம்- என்பன போன்ற முதியோர் வாக்குக்கு விளக்க உரையாக அமைந்த இதுமாதிரி இன்னும் எத்தனையோ கதைகள், எவ்வளவோ புனைந்துரைகள் - உபகதை. சிறுகதை, நாவல், நாடகம் கவிதை காவியங்களாக. எல்லா மொழிகளிலும் எல்லா நாட்டிலும் எக்காலத்திலும் இன்றைக்கும் நாளைக்கும் உண்டு. நீதிபரிபாலன, நியாயவாத மன்றங்களை சட்டநிரூபண சபையையும்கூட இவை, இந்த போதாத மனமும் பொல்லாத ஆசையும்தான் எட்டிப்பார்க்கும்.

### செம்மீன்

இருல் பிடித்து விற்றுச் சீவனம் நடத்தும் செம்படவன் குடும்பத்தைப்பற்றிய கதை. அவன் 'பொன் மீனு'க்கு ஆசைப்பட்ட கதை. மலையாள மொழியில் தகழி சிவசங்கரம்பிள்ளை எழுதிய இந்நாவல் இந்திய சாகித்திய அகடமிப் பரிசு பெற்ற சிறந்தஇலக்கியப் படைப்பு. அதனுல், கதையைத் திரைப்படமாகத் தயாரித்தவர்கள்கூட ஜனுதிபதியின் விருதும் சன்மானமும்பெற்று கௌரவம் அடைந்தார்கள். செம்படவன் பொன்மீனுக்கு ஆசைப்பட்டு, அது அவனுக்கு கிடைத்தபோது, குடும்ப வாழ்க்கையில் சம்பவிக்கும் மாறுதல்களையும் புதிய திசை திருப்பங்களையும் தாங்கிக்கொள்ளமாட்டாத கோழையாகிப்போய் வீடு வாசல் குடும்ப வாழ்க்கை யாவும் சீரழிந்து முடிவில் அவனுக்குப் பைத்தியமே பிடித்துவிடுகிறது. கதையினூடே இழைந்தோ

(10-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நம் நாட்டுக் கலைஞருடன் ஒரு சுவையான பேட்டி



கலியுகவரத பாலநந்தீஸ்வர தவில் வித்துவான்

# கைதடி பழனிமலை

தமிழகத்து பிரபலநாதஸ்வர தவில் வித்துவான்களுடன் தவில்வாசித்து ஈழத்துக்கு புகழ் தேடிக் கொடுத்துக்கொண்டிருக்கும் பெருமைக் குரியவர் தான், கலியுக வரதபால நந்தீஸ்வர தவில் வித்துவான் கைதடி கே. பழனிமலை! சென்னையில் நடந்த இரண்டாவது உலகத் தமிழாராய்ச்சி மகா நாட்டின் கலை நிகழ்ச்சிகளில் கலந்து தவில் வாசித்த பெருமையும் இவருக்குண்டு.

யாரிடம் தவருகவும், திறமையற்றவனென்றும், பைத்தியமென்றும் சொன்னதை நான் என்றுமே மறக்கமாட்டேன். அவருடன் மேடையில் இருந்து தவில் வாசிக்க ஆரம்பித்த போது, சிலர் எனக்கு அளித்த 'வரவேற்பை'யும் மறப்பதற்கில்லை'' என்று உணர்ச்சிவசப்பட்டு சொன்ன பழனிமலை காருக்குறிச்சியாருடன் தவில் வாசித்தபின்னர் நடந்த நிகழ்ச்சியையும் கூறினார்:

### காருகுறிச்சி பாராட்டினர்

''கச்சேரி நடந்து முடிந்த பின்னர் சாமி கும்பிட்ட பிறகு, உள்வீதிக்கு மேற்கு வீதியால் வந்தோம். அவர் என்னை உட்காரச்சொல்லித் தானும் உட்கார்ந்தார். 'அருமையாக வாசித்தாய். உனக்கு நல்ல எதிர்காலம் இருக்கிறது. எதிர்ப்புகளைக் கண்டு அஞ்சாதே. எனக்கும் ஆரம்பத்தில் இப்படித்தான் எதிர்ப்புகள் இருந்தன. இவைகளைக்கண்டு பயந்தால் நாம் முன்னேறவே முடியாது' என்று காருக்குறிச்சியார் என்னிடம்கூறினர். அவர் மனந்திறந்து என்னைப் பாராட்டியதும், அவர் அளித்த உற்சாகமும் தான் என்னை மனந்தளரவிடாது ஏறுநடைபோட வைக்கிறது''—என்று கூறிய பழனிமலை தனது குருவான இணுவில் கிருஷ்ணமூர்த்தியின் கை ராசிக்கும் தலை வணங்கினர்.

**''எதிர்ப்புகளைக் கண்டு அஞ்சாதே! எனக்கும் ஆரம்பத்தில் இப்படித் தான் எதிர்ப்புகள் இருந்தன. இவைகளைக் கண்டு பயந்தால் நாம் முன்னேற முடியாது' என்று காருகுறிச்சியார் என்னிடம் கூறினர். அவர் அளித்த உற்சாகம்தான் என்னை மனந்தளரவிடாது ஏறுநடை போட வைக்கிறது.''**

### விளையும் பயிர் முளையில்...

'விளையும் பயிரை முளையில் தெரியும்' என்பார்கள். பழனிமலைக்கு அப்போது பதினைந்து வயதுதான். சென்னையில் அப்போது வருடாவருடம் நடக்கும் தியாகராஜசுவாமிகள் படஊர்வலத்தில், பிரபல வித்துவான்களான நீடாமங்கலம் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, நாச்சிமார் கோவிலடி ராகவப்பிள்ளை, திருச்சேரை முத்துக் குமாரசுவாமிப்பிள்ளை ஆகியோருடன் ஆயிரக்கணக்கானோர் மத்தியில் சேர்ந்து தவில்வாசித்து எல்லாருடைய 'அப்ளாஸை'யும் பெற்றார். அதுதான் பழனிமலைக்கு முதல் அனுபவம்.

நாதஸ்வரமேதை காருக்குறிச்சி அருணசலத்துடன் வல்லிபுரக்கோயிலில் ஆறு மணி நேரம் தொடர்ந்து தவில் வாசித்தது ஒரு சுவையான அனுபவம் என்றார் பழனி.

''பத்து வருடங்களுக்கு முன்னர் என்று நினைக்கிறேன். அப்போது எனக்கு 27வயது வல்லிபுரக்கோயில் தேர்த் திருவிழாவின்போது காருக்குறிச்சியாருடன் தவில்வாசிக்க ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தது. ஆனால் அதனைக்குழப்புவதற்கு பலர் என்னைப்பற்றி காருக்குறிச்சியாரிடம் தவருகவும், ...

### ஏழுவயதில் ஆரம்பம்

ஏழுவயதிலிருந்து ஒன்பது வயதுவரை பழனி தன் தந்தையார் குமாரவேலுக்கு தாளம்போட்டார் தவில், நாதஸ்வர பயிற்சிக்கு ஆரம்பம் தாளம்தான். அதனைப் பயிலும்போது சிறுவன் பழனி பட்டபாடு போதும் போதும் என்றாகிவிட்டது.

ஒன்பது வயதானதும் இணுவில் கிருஷ்ணமூர்த்தியிடம் பழனி தவில் பழகுவதற்காகச்சேர்க்கப்பட்டார். குரு-சிஷ்யமுறையில் வீட்டிலேயே தங்கியிருந்து பயிற்சியை ஆரம்பித்தார். ஈழத்து மற்ருெரு பிரபல தவில் வித்துவானுக இப்போதும் திகழும் தெட்சணமூர்த்திக்கும் ஏறக்குறைய ஒரே வயதுதான். இருவரின் குருவாகஒருவரே இருந்ததால்தான் என்னவோ, இப்போது இருவரும் இரு கோணங்களாக இருந்து கொண்டு, ஈழத்துக்கு புகழ் தேடிக்கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள்!

பதினெரு வயதானதும், யாழ்ப்பாண பிரபல தவில் வித்துவான் சின்னத்துரையிடம் சென்று பழனிமலை பயிற்சிபெறத் தொடங்கினர். மூன்றுவருடம் இவரிடம் பயிற்சிபெற்ற பின்னர், நாதஸ்வர வித்துவான் பி. எஸ். ஆறுமுகம்பிள்ளையுடன் தவில் வாசித்தார்.

பதினறு வயதில், பழனியை நாதஸ்வர வித்துவான் முருகையா இந்தியா கூட்டிச்சென்று, இன்று பிரபலமாக விளங்கும் திருச்சேரை முத்துக்குமாரசுவாமிப்பிள்ளையின் சிஷ்யனுகைச் சேர்த்து 6 மாதம் பயிற்சி பெற்றார். ஆறுமாதம் அங்கு அவரிடம் பயின்ற பழனி மீண்டும் யாழ்ப்பாணம் திரும்பி, முருகையாபிள்ளைக்கே தவிலாக இருந்தார். ஆறுமாத காலம் இங்கு கச்சேரிகளில் பங்குபற்றி பின்னரும் இந்தியாசென்று குறநாடு பழனிவேலிடம் 6 மாதப்பயிற்சி பெற்று விட்டு திரும்பிவந்து சாவகச்சேரி சண்முகசுந்தரத்துக்கு தவிலாக இருந்தார். மூன்றுவருடகாலம் அவருடன் சேர்ந்து கச்சேரிகளில் கலந்துகொண்டார். பின்னர் மீண்டும் இந்தியா சென்று சிதம்பரம் கட்டைக்கோவிந்தசாமிப்பிள்ளையிடம் 6 மாதப் பயிற்சியைப்பெற்றார்.

அங்கு இந்தச் சமயம் பயிற்சிபெற்றபோது பிரபல வித்துவான் குளிக்கரை பிச்சையப்பாவுடன் சேர்ந்து தவில் வாசித்ததை பழனி பெருமையாகக் கருதுகிறார். இதன்பின்னர் வீட்டிலேயே லக்சுமண தவில்காரரை ஒரு வருடம் தனது குருவாக அமர்த்தி மாதாமாதம் அவருக்கு நூறுரூபாய்கொடுத்து பயிற்சிபெற்றார்.

இதன்பிறகு பழனிமலை தானகவே பயிலத்தொடங்கினர். அனுபவம் அவருக்கு ஆசானகியது.

அவ்வப்போது தமிழகத்திலிருந்து நாதஸ்வர, தவில் வித்துவான்களை அழைப்பித்து, பழனி அவர்களுடன் சேர்ந்து பல கச்சேரிகளைச் செய்தார். கைதடி பழனிமலையின் புகழ் ஈழத்தில் மட்டுமல்ல, தமிழகமெங்கும் பரவத்தொடங்கியது; அவருடைய கைத்திறன், விரலிலிருந்து விழும் அந்த இனிய நாதம் கேட்டவர்கள் காதுகளையெல்லாம்மெய்சிலிர்க்க வைத்தது. மக்களின் ஆதரவு 'பழனி'க்கு மேலும் உற்சாகத்தை அளித்தது.

### அண்ணமலை இசைவிழாவில்

1966-ம் ஆண்டு டிசம்பர் 31.ம் திகதி சென்னை தமிழிசைச் சங்கத்தின் ஆதரவில் ராஜ அண்ணமலைமன்றத்தில் நடைபெற்ற அகில பாரதஇசைவிழாவில் நாதஸ்வரச் சக்கரவர்த்தி குளிக்கரை பிச்சையப்பாவுக்கு தவில் வாசித்து, தனக்கிருந்த திறமையைக் கூடியிருந்த பல்துறைக் கலைஞர்கள், ஆயிரக்கணக்கான ரசிகர்கள் முன்னிலையில் ஊர்ஜிதம் செய்துகொண்டார். இதனை அடுத்து 1968-ம் ஆண்டிலும் வாசித்தார். அதே ஆண்டு 2-வது உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டில் பழனிமலை கலந்துகொண்டு குளிக்கரை பிச்சையப்பாவுக்கு தவில் வாசித்தார். இதனைக்கண்ட தமிழ் உலகமே வியந்து பாராட்டியது.

### சேதுராமன்-பொன்னுச்சாமிக்கு வாசித்தார்

விசேஷஅழைப்பொன்றை ஏற்று 1969-ம் ஆண்டு டிசம்பர் 17-ம் திகதி தமிழகத்திலுள்ள க்ருவூரில் நாதஸ்வர மேதை திரு. ரி என். ராஜரத்தினம்பிள்ளை நினைவு விழாவில் தில்லானமோகனம்பாள், ''நலயதான'' புகழ் சேதுராமன்-பொன்னுச்சாமி கோஷ்டியினருக்கு தவில் வாசித்தார். இனிய நாதஸ்வர ஓசைக்கு பழனியின் தவில் ஒலி, நாதம் பேசிக்கொண்டிருந்ததைக் கேட்டவர்களும் பார்த்தவர்களும் 'சபாஷ்' 'பலே' போடத்தவறவில்லை.

இதற்கு 2 நாள் கழித்து சேங்காவிபுரம் என்ற இடத்தில் நடந்த விழாவொன்றில், நாமகிரிப்பேட்டை கிருஷ்ணனுடன் கச்சேரி செய்தார்.

1969 டிசம்பர் 30-ம்திகதி நாதஸ்வர மேதை ஷேக் சின்னமௌலானவுக்கு தவில் வாசித்தார்.

''ஒவ்வொரு விதமான திறமைசாலியான நாதஸ்வர வித்துவான்களுடன் தவில் வாசித்திருக்கும் நீங்கள் என்றாவது அவர்களுக்கு ஏற்றபடி வாசிக்கமுடியாமல் திண்டாடியது உண்டா?'' என்று பழனியிடம் கேட்ட போது அவருக்கே வழக்கமானசிரிப்புடன் சொன்னர்:

''யார் எப்படி புதுப்புது சுரங்களுடன் வாசித்தாலும் அதற்கேற்றபடி வாசிக்கக் கூடிய ஆற்றலை எனக்கு ஆண்டவன் அளித்திருக்கிறுன். பின் ஏன் நான் திண்டாடவேண்டும்? நாதஸ்வர வித்துவான்கள் பலர் எனது ஆற்றலைக் கண்டு வியந்திருக்கிறார்கள். இன்னும் இதனை விபரித்துச் சொல்லப்போனல் அது 'தற்புகழ்ச்சியாகிவிடும்.''


### பொன்னடை போர்த்தி கௌரவம்

கடந்த ஆண்டின் இறுதிப் பகுதியில் தமிழகத்தில் பல இடங்களில் கச்சேரிகள் செய்து, ஏகோபித்தபாராட்டுதல்களைப் பெற்றார் பழனி.

தமிழகத்திலிருந்து திரும்பிவருவதற்கு முன்பதாக வெளிநாட்டுக் கலைஞர் ஒரு

[14ம் பக்கம் பார்க்க]

பாமா ராஜகோபால்





## உலகத்தமிழ் மகாநாட்டில் ஈழத்தின் புகழை ஒலிக்கவைத்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சந்திரனை நோக்கிப் புறப்படுவதற்குமுன் கலம் சரியான கோணத்தில் வந்ததும் எஞ்சின்கள் இயக்கப்பட்டு அண்ட வெளியில் எகிறிப்பாயும் சந்திரனின் நிலை, பூமியின்நிலை, கலத்தின்நிலை ஆகிய யாவற்றையும் ஒரு கொம்பியூட்டர் கருவி மிக நுணுக்கமாக அவதானித்து சேவைக்கலத்திலுள்ள பகுதிக்கு அஞ்சல் செய்யும். அப்பகுதியில் உள்ள கருவிகள் கலத்தின் மூன்றும் கட்ட எஞ்சின்கள்**

# சந்திரப் பயணம்-7

# அம்புலிப் பாதையில் என்ன நேர்கிறது?



எந்தச் சமயத்தில் இயங்க வேண்டுமென்பதை ஆராய்ந்து அப்பகுதிக்கு அறிவிக்கும்: உடனே என்சின்கள் சடுதியாக உயிர்பெற்று இயங்க ஆரம்பித்ததும் கலம் சந்திரப்பாதையில் புறப்பட்டு விடும்.

**ஆரம்பக்கட்டத்தில் ஆபத்து ஏற்படில் தப்புவதற்கான தற்காப்புப்பகுதி.**

கட்டளைக்கலம் முதலிலும் இரண்டாவதாக சேவைக் கலமும் மூன்றாவதாக சந்திரக்கலமும் பொருத்தப்பட்ட நிலையில் அப்பலோ சந்திரனை நோக்கியபாதையில் புறப்பட்டதும் சிலமாற்

**கட்டளைக்கலம்**

றங்களைச் செய்து கொள்கின்றது. பாதுகாப்பை உத்தேசித்தே இந்த மூன்று

**சேவைக்கலம்**

கலங்களும் ஒன்றன் பின் ஒன்றாகப் பொருத்தப்பட்டிருக்கின்றன.

அப்பலோ கலத்தின் தளபதியாகவிருக்கும் வீரர் ஒரு விசையை இயக்கி சந்திர கலத்தை உள்ளடக்கியிருக்கும் பேழையை நான்கு சட்டங்களாக பிரித்து விடுவார். பேழையின் புறப்பகுதி கழன்று விழும்

**சந்திரக்கலத்தை உள் அடக்கிய பேழை**

அதேசமயம் தாய்க்கலமும் முன்னேக்கிப் பிரிந்துகொள்ளும்.

அதன்பின் சேவைக்கலத்திலுள்ள 16 சிறு உதைப்பு ரொக்கட்டுகளை தீர்ப்பதன் மூலம் வீரர்கள் தாய்க்கலத்தை மறுபக்கமாகத் திருப்புவார்கள் இப்பொழுது தாய்க்கலமும் சந்திரக்கலமும் ஒன்றையொன்று நோக்கியபடி பறந்துகொண்டிருக்கும். தாய்க்கலத்தின் மூக்குபோன்ற பகுதி சந்திர கலத்திலுள்ள துவாரம் ஒன்றுக்குள் செலுத்தப்பட்டு இறுக்கப்படும்வரை இவை இவ்வாறே பறந்துகொண்டிருக்கும், இவ்வாறு இணைக்கப்பட்ட பின்னர் மூக்குப்பகுதியின் உட்புறம் இரு கலங்களுக்குமிடையில் குழாய் போன்று இருக்கும்.

இந்தப்பணிகளை வீரர்கள் செய்து முடிக்கும்வரை மூன்றாம்கட்ட எஞ்சின்கள் சந்திரக்கலத்தின் பிற்பகுதியிலிருந்து அதனை முன்னேக்

—பேனு—

கிச் செலுத்திக் கொண்டிருக்கும். அதன்பின் மற்றவை போன்றே மூன்றும் கட்ட எஞ்சின்களும் கருவிகள் பகுதிகளும் கழன்று பிரிந்து கொள்ளும்.

அப்பலோ சந்திரனைநோக்கிய பாதையில் விரைந்து கொண்டிருக்கும் அதே சமயம் பூமியின் ஈர்ப்பு சக்தி கலத்தின் வேகத்தைக் குறைத்துக்கொண்டே இருக்கும். கலம் பூமியிலிருந்து மேலும் தூரத்துக்குச் சென்றதும் பூமியின் ஈர்ப்புக் குறைந்து சந்திரனின் ஈர்ப்பு விசைக்குள் பிரவேசிக்கும். இதன் பின் சந்திரனின் ஈர்ப்பின் காரணமாக கலத்தின்வேகம் அதிகரிக்கும். சந்திர மண்டலத்தில் பிரவேசிப்பதற்காக வீரர்கள் தம்கலத்தை மறுபக்கமாகத் திருப்புவர். அதன்பின் சந்திரனை நீள் வட்டமாக வலம்வருவதற்காக எஞ்சின் இயக்கப்படும். பின்னர் கலம் சந்திரனை ஒரே சீராகவலம்வரும் வகையில் மீண்டும் எஞ்சின் இயக்கப்படும்.

இருகலங்களும் ஒன்றாகவே சந்திரனை வலம்வரும் நிலையில் இருவீரர்கள் குழாய் போன்ற துவாரத்தின் வழியாக சந்திர கலத்துக்குள் நுழைந்து அதில் உள்ள கருவிகளையெல்லாம் இயக்கிப் பரிசோதிப்பார்கள். பின் மீண்டும் கட்டளைக்கலத்துக்குள்வந்து ஒய்வு எடுத்துக் கொள்வார்கள். ஒய்வுக்குப் பின்னர் சந்திரனில் இறங்கும் முயற்சி மேற்கொள்ளப்படும். மீண்டும் இருவீரர்களும் சந்திரகலத்துக்குள் போவர். சந்திரகலத்தின் விசைகள் இயக்கப்பெற்று இரண்டும் பிரிந்து சந்திரனை வலம்வந்துகொண்டிருக்கும். சந்திரனின் மறுபகுதிக்குள் பிரவேசித்ததும் சந்திர கலத்தின் விசைகள் இயக்கப்பெற்று அது ஒரு வளைவான பாதையில் சந்திரத் தரையை நோக்கி இறங்கும். கலத்தின் தளபதி சந்திரனில் அதனை எந்த இடத்தில் இறக்குவது என்பதைப் பொறுப்பேற்பார். திட்டமிடப்பட்ட இடம் கலம் இறங்குவதற்கு சாதகமாக இல்லையெனில் மெதுவான ஓர் இடத்திற்கு கலத்தை நகர்த்தி இறக்குவதற்கு அவரால் முடியும்.

சந்திரனில் கலம் இறங்கியதும் உடனடியாகவே தரையில் இறங்கிப் பார்க்க வேண்டுமென்ற ஆவல் எழுந்தாலும் அந்த ஆவலைக் கட்டுப்படுத்திக்கொண்டு வீரர்கள் தமக்குரிய பணிகளை முதலில் கவனிப்பார்கள்.


உடனடியாகப் புறப்பட வேண்டியேற்படுமானால் அதற்குத் தயார் செய்வது மற்றும் கருவிகள், சாதனங்களை பரிசோதிப்பது அவர்களின் முக்கிய பணிகளாக இருக்கும்.

இவைகளில் சிறு தவறு ஏற்பட்டாலும் பல ஆண்டுகளாகப் பலகோடி பணம் செலவழித்து மேற்கொள்ளப்பட்ட இந்தப் பயணம் பரிதாபகரமாகத் தோல்வியடைந்து விடக்கூடும். அதனால் வீரர்கள் மிகக் கவனமாக கருவிகளைப் பரிசோதிப்பார்கள். அதன்பின்னர் சந்திரத்தரையில் இறங்குவதுபற்றி முடிவெடுப்பார்கள்.

ஒருவர் முதலில் இ... சந்திரத்தரையில் ந... வார். பின்னர் மற்... இறங்குவார். இரு வ... தங்களுடன் கொ... சென்ற சில கருவிக... இதரசாதனங்களையும்... ரத் தரையில் பொ... விட்டு சந்திரமண்மாதி... யும் சேகரித்துக் கொ... மீண்டும் கலத்துக்கு வ... மீண்டும் கலத்தில் ஓ... த்துக்கொண்டிருடும்... கான ஆயத்தங்களைச்... வார்கள். சந்திரக்கல... கால்கள் போன்ற ... யும் இறங்குவதற்கு ... பட்ட எஞ்சின்களும் ... மீண்டும் சந்திரத்த... ருந்து மேலே கிளம்... கான மேடையாக உ... கப்படும்.

இது சந்திரத்தரை... மனிதச்சுவடுகளில் ஓ... நிரந்தரமாக நிலை...

## அப்பலோ—11 கலத்தின் சந்திர பயணம்



1. புறப்படுதல். 2. பூமியை சுற்றி வருதல். 3. சந்திரனை நோக்கி புறப்படுதல். 4. தாய்க்கலம் பின்னால் திரும்பி சந்திரக் கலத்துடன் இணைதல். 5. பாதைதிருத்தல். 6. சந்திரனை வலம்வருவதற்காக எஞ்சின் இயக்கப்படுதல். 7. சந்திரனை வட்டமாகவலம் வருதல். 8. சந்திரக்கலம் பிரிதல். 9. சந்திரனில் இறங்கல். 10. சந்திரனிலிருந்து திரும்பிவந்து தாய்க் கலத்துடன் இணைதல். 11. பூமிக்குத் திரும்புவதற்காக சந்திரக் கலம் பிரித்து விடப்படல். 12. பூமியை நோக்கிப் புறப்படுவதற்கான எஞ்சின் இயக்கப்படல். 13. பாதை திருத்தல். 14. இறுதியாக கட்டளைக்கலம் பிரிதல். 15. பாரசூட்கள் விரிந்து பசிபிக் சமுத்திரத்தில் வந்து இறங்கல்.

## சந்திரனில் கால்வைத்த முதல்மனிதன் ஆம்ஸ்ட்ரோங்

'அப்பலோ - 11' என்ற பெயர் இந்த நூற்றாண்டில் வரலாற்றுப் புகழ்மிக்கதொரு பெயராகும். அதைப் போலவே அதில் பிரயாணம் செய்த மூன்று மனிதர்களும் சரித்திரப் புகழ்மிக்க மனிதர்களாகிவிட்டார்கள். சந்திரத்தரையில் மனிதனின் சுவடுகளைப் புதைத்துவிட்டு மீண்டும் பூமிக்குத் திரும்பிய இந்த மூன்று மனிதர்களது வாழ்க்கையைப்பற்றியும் சிறிது அறிந்துகொள்ள முயல்வோம்.

அப்பலோ-11 ல் பிரயாணம் செய்த மூன்று விண்வெளி வீரர்களுமே 1930 ம் ஆண்டில்தான் பிறந்திருக்கிறார்கள். கேணல் ஆல்டிரின் ஜனவரி 20ம் திகதியும், நீல் ஆம்ஸ்ட்ரோங் ஆகஸ்ட் 5 ம் திகதியும்கேணல் கொலின்ஸ் அக்டோபர் 31 ம் திகதியும் பிறந்தவர்கள். மூவருமே அமெரிக்க மத்தியதரக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் என்றாலும் சமூகத்தின் வெவ்வேறு துறைகளைச் சேர்ந்தவர்கள்.

### நீல் ஆம்ஸ்ட்ரோங்

அமெரிக்காவின் மத்தியிலுள்ள வாப்பகொனெட்டா (Wapakoneta) என்ற கிராமத்தில் நீல் ஆம்ஸ்ட்ரோங் பிறந்தார். தந்தை பெயர் ஸ்டீபன் ஆம்ஸ்ட்ரோங். தாயார் வயலா ஏஞ்சல் ஆம்ஸ்ட்ரோங் இசையிலும் நூல்களைப்படிப்பதிலும்பிரியமுடையவர். இவரது பண்புகளே நீல் ஆம்ஸ்ட்ரோங்கின் குணங்களில் பெரிதும் பிரதிபலித்தன- ஸ்டீவன்ஸ் குடும்பத்தின் மூன்று பிள்ளைகளில் மூத்தவர் ஆம்ஸ்ட்ரோங்.

நீல் தமது 7 வயதிலேயே குடும்பத்துக்காக உழைக்கத் தொடங்கினார். ஓய்வு நேரங்களில் ஒகியோவில் ஒரு இடுகாட்டில் புல் செதுக்குவதின் மூலம் ஒரு மணி நேரத்துக்கு 10 சதம் வீதம் அவர் உழைத்தார். இளவயதில் மருந்துச்சாலையொன்றின் பண்டங்களைப் பேணும் பொறுப்பை வகித்தார்.

"எனது பிள்ளைகள் மற்ற மனிதர்களுக்கு உபயோகமான எதையாவது செய்ய வேண்டும் அதன்மூலம் உயர்ந்து மகிழ்ச்சியோடு வாழவேண்டும் என்றே நான் விரும்பினேன்" என்றார் நீலின் தாயார்.

நீல் தமது தாயாரின் பராமரிப்பில் மிக புத்திசாலிப் பையனாக வளர்ந்தார். விரைவிலேயே விஞ்ஞானம், கணிதம் போன்ற துறைகளில் கல்வியில் சிறந்தார். சிறு வயதில் அவர் அதிகமானவர்களுடன்பழகுவதில்லை. விளையாட்டுகளிலும் அதிக நாட்டமில்லை. ஆனால் கடற்படையில் ஒரு விமானியாகச் சேர்ந்ததின் பின்னர் தன்னம்பிக்கை பெற்ற பூரண மனிதராக அவர் முதிர்ச்சியடைந்தார். நீல் தமது 20 வயதில் கொரியா யுத்தத்தில் கடுமையாகப் போரிட்டார். ஈஸக்ஸ் கப்பலிலிருந்து யுத்த முனைகளுக்கு 78 தடவைகள் அவர் பறந்து சண்டையிட்டார். இந்தச் சண்டைகளின்போது அவர் செலுத்திய ஜெட் விமானம் இறக்கைகளை இழக்க நேர்ந்தது. ஆனால் அவர் மிக சாதுர்யமாக நேச நாடொன்றுக்குள் விமானத்தைத் திருப்பிவிட்டு பத்திரமாக உயிர் தப்பினார். இதனால் இவரது படையைச்சேர்ந்த முதிய போர் வீரர்களின் பாராட்டையும் பெற்றார்.

### இரண்டு வயதில்

நீல் இரண்டு வயதாய் இருக்கும்போது கிளீவ்லன்ட் விமான நிலயத்துக்கு தமது குடும்பத்தினருடன் சென்றார்விமானப்பயணத்துக்கும் அவருக்கும் அன்றுதான் தொடர்பு ஏற்பட்டது. நான்கு ஆண்டுகளின் பின்னர் நீல் தமது தந்தை ஸ்டீபன் ஆம்ஸ்ட்ரோங்குடன் முதல் தடவையாக விமானப் பிரயாணம் செய்தார். ஓர் ஆண்டு கழித்து அவர் தனக்கென மாதிரி விளையாட்டு விமானமொன்றைச் செய்தார். பின்னர் இளவயதில் வாப்பகொனட்டா விமான நிலயத்தில் மணிக்கு 9 டாலர் கட்டணம் கொடுத்து விமானம் ஓட்டுவதற்கு பழகினார். அவர் கார் லைசென்ஸ் எடுக்குமுன்பதாகவே விமானம் ஓட்டும் லைசென்சைப் பெ... கொண்டார்.

சிறு வயதிலேயே ... விண்வெளி ஆராய்ச்சி... லும் நாட்டம் செ... வந்தார். அவர்களின் ... இருந்து ஜாக்கொப்... என்ற விஞ்ஞான... தொலைநோக்கியி... யாக நீல் ஆம்ஸ்... ஆகாயத்தை வெகு ... உற்று நோக்கிபபடியி... ராம். எப்பொழுதுமே... மையுடன் தோற்றம... நீல் ஆம்ஸ்ட்ரோங் ... படையில் சேவை ... பின் மீண்டும் கல்லூ... படிக்கத்தொடங்... 1955 ம் ஆண்டு ... பயண இயல் பொறி... ளர் பட்டத்துடன் க... யிலிருந்து விலகி விண்... ஆராய்ச்சித்துறையில் ... தார்

நீல் ஆம்ஸ்ட்ரோங் ... பாகவே விண்வெளி ... ச்சியில் அக்கறைகொ... ருந்தார். அதன் காரண... சந்திரனில் காலடி ... முதல் மனிதன் என்ற ... புகழையும் தட்டிக்... டாராம்.

1966 ல் இரு வீ... டன்விண்வெளிக்குச்... திரும்பிய ஜெமினி... தின் தளபதியாகவிரு... திருமணமான இ... துணைவியின் ... ஜெனெட். ஒரிக், ... என்ற இரு ஆண்கு... களின் தந்தை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ழுதலில் இறங்கிச்
ரையில் நடமாடு
ானர் மற்றவரும்
ர். இரு வ ரு ம்
ன் கொ ண் டு
ல கருவிகளை யு ம்
ளங்களையும் சந்தி
யில் பொருத்தி
ிரமண்மாதிரிகளை
ித்துக் கொ ண் டு
லத்துக்கு வருவர்.
லத்தில் ஓய்வெடு
ண்டு திரும்புவதற்
த்தங்களைச் செய்
சந்திரக்கலத்தின்
போன்ற பகுதி
குவதற்கு பயன்
ஞ்சின்களும் கலம்
சந்திரத்தரையிலி
மேலே கிளம்புவதற்
டையாக உபயோ

திரத் தரையில்
டுகளில் ஒன்றாக
க நிலைபெற்று

சப் பெற்றுக்
ர்.

திலேயே அவர்
ஆராய்ச்சி இயலி
டம் செலுத்தி
அவர்களின் நகரில்
ஹாக்கொப்ஸின்ட்
விஞ்ஞானியின்
ாக்கியின் வழி
நீல் ஆம்ஸ்ட்ரோங்
த வெகு நேரம்
க்கியபடியிருப்பா
பொழுதுமே இள
தோற்றமளிக்கும்
ட்ரோங் கடற்
சேவை செய்த
டும் கல்லூரியில்
ந் தொடங்கினார்.
ஆண்டு வான்
யல் பொறியியலா
டத்துடன் கல்லூரி
விலகி விண்வெளி
த்துறையில் சேர்ந்


ஸ்ட்ரோங் இயல்
விண்வெளி ஆராய்
அக்கறைகொண்டி
அதன் காரணமாக
ல் காலடி வைத்த
ிதன் என்ற வான்
ம் தட்டிக்கொண்

ல் இரு வீரர்களு
வெளிக்குச்சென்று
ஜெமினி கலத்
பதியாகவிருந்தார்.
மான இவரது
வியின் பெயர்
. ஓரிக், மார்க்
இரு ஆண்குழந்தை
ந்தை.

விடும். எஞ்சின்கள் இயக்கப்பட்டு கலம்மேலே நீள் வட்டமாகக் கிளம்பும், பின்னர் மேலும் ஒரு எஞ்சின் இயக்கப்பட்டு சந்திரனை ஒரே சீராகச் சுற்றும்பாதையில் அது திருப்பப்படும்.

(12-ம் பக்கம் பார்க்க)

அப்பலோ விண்வெளிக்கலமும்




சட்டர்ன் V ஏவுகணையும்

# லெனின் வாழ்க்கை அருமையான நாடகம்!

லெனின்!

அவருடையவாழ்க்கையை விடச் சிறந்த தெளிவான அரசியல் வாழ்க்கை உலகில் இருந்தது உண்டா? எளிய பள்ளி ஆசிரியரின் மகனுன அவருடைய வாழ்க்கை. ஜாரிச ரஷ்யாவின் அரசியல் குழப்பத்தில் ஆழ்ந்து மறைந்து போயிருக்கக்கூடும். ஆனுல் அந்தநாட்களில் மேலோங்கிநின்ற பிரபுக்களின் தலைவர்களை இன்று யார் நினைக்கிருர்கள்? லெனினுடைய பெயரை அறியாதார் யாருமிலர்.

இந்தவரலாற்றின் பொன்னேடுகளை மீண்டும் ஒரு முறை காண்போம்; கஜான் பல்கலைக்கழகமாணவர். சமாராவில் துணை வழக்கறிஞர். செயின்ட் பீட்டர்ஸ்பர்க் ரகசியமார்க்சியக் குழுவின் தலைவர். 'இஸ்க்ரா'வைத் தொடங்கியவர் தலைமறைவு சமூக—ஜனநாயக போல்ஷ்விக் கட்சியை உருவாக்கியவர். சோவியத் ரஷ்யாவின் மக்கள் கமிசார்கள் சபையின் தலைவர் கம்யூனிச அகிலத்தின் வழிகாட்டி.

லெனினுடைய வாழ்க்கையில்தான் எத்தனை துணிச்சல், எத்தனை துன்பம்? அவருடைய வாழ்க்கை நிகழ்ச்சிகளே ஒரு சிறந்த நாடகமாகஉள்ளன சிறைச்சாலை, சைபீரியாவுக்கு நாடுகடத்தப்படுதல். ரஜ்லீவில் மறைந்து வாழ்ந்த வைக்கோல் குடிசை. இறுதியாக, ஸ்மோல்னிக்கு வருதல். தொழிலாளர்களின் முதலாவதுஅரசுக்குத் தலைமை தாங்குதல். லெனின் வாழ்க்கைஓர் அருமையான நாடகம்அல்லவா?

அரசியல் என்பது கலையும் விஞ்ஞானமுமாகும் என லெனின் அடிக்கடி கூறுவார். அவருடைய சொந்த ஆளுமையிலும் பணியிலும் இந்த இருகூறுகளும் அருமையாக அமைந்திருந்தன.

## அளப்பரிய அறிவாற்றல்

அனைவரையும் முதலில் கவருவது அவருடைய அளப்பரிய அறிவாற்றல்தான். இந்த நூற்றுண்டின் தொடக்கத்தில், நாகரீக மனிதகுலம் முழுமையின் அறிவார்ந்த வாழ்க்கையில் செல்வாக்குச் செலுத்தியபல எழுத்தாளர்களையும், விஞ்ஞானிகளையும் கலைஞர்களையும் ரஷ்யா உருவாக்கியது. அரசியல் சிந்தனையாளர் என்ற வகையில் லெனினை மிஞ்சியவர் யாருமிலர். புதிய சூழலைத் தவறின்றிப் புரிந்துகொண்டு, அதில் அடங்கியுள்ள அரசியல் பணியைக் குறித்துக் காட்டி, அதை அடைவதற்கான வழியை வகுக்கும் அரியதிறன் அவரிடம் இருந்தது. மக்கள் இதயத்தில் பதியும்வகையில் முழக்கங்களை முன்வைப்பார்.

பண்புகள் இவை.

லெனின் என்ற சிந்தாந்தியின் அறிவுச்சிறப்பு. உண்மையிலேயேஇரும்புபோன்ற மனவலிமையுடனும் அரசியல் துணிச்சலுடனும் இணைந்து நிற்பதாகும். கொள்கையில் தேவையான கூரிய மாற்றங்களைச் செய்யும் திறமையை லெனினுக்கு அளித்தது இந்த இணைப்புத்தான்.

## கூரிய திருப்பங்களில் செல்லும் திறன்

பல கூரிய திருப்பங்களில் லெனின் சென்றுர். பெப்ரவரிப் புரட்சிக்குப் பிறகு. சோவியத்துகளில் உள்ள இடதுசாரி சக்திகள் நீண்ட காலத்துக்கு ஒத்துழைக்க வேண்டிய கட்டம் வந்துவிட்டது என்று கட்சியிலுள்ள பலரும் கருதினர்; தின் விளைவான அவசரகால முறைகளிலிருந்து, சகஜமான, நிலைத்த முறைகளுக்கு மாறவேண்டியது அவசியம் என்பதை அவருடைய கூரிய பார்வை கண்டது ராணுவ நிர்வாக முறைகளை அதிதமாகப் பயன்படுத்துவதால் விளையும் அபாயத்தைச் சுட்டிக்காட்டியதோடு அவருடைய அறிவாற்றல் நின்றுவிடவில்லை. அதற்கு நேர் எதிராக, கட்சியின் தலைமைப் பாத்திரத்தைப் பலவீனமாக்க எண்ணிய வலதுசாரிக் கும்பல்களை அம்பலப்படுத்தி எதிர்ப்பதிலும் அது வெளிப்பட்டது.

சர்வதேசத் தொழிலாளி வர்க்கத்தின் நடைமுறைத் தந்திரம் பற்றி, லெனினுடைய 'இடதுசாரிக் கம்

## அவர் அடிக்கடி கூறுவார்:

# "கலையும் விஞ்ஞானமும் கலந்ததே அரசியல்"

ஒருசில விவரங்களை வைத்துக்கொண்டே ஒரு போக்கினைக் கண்டறிந்து அதுபற்றிய முடிவுகளைச் செய்யவல்லவர். 1917 அக்டோபரில் ரஷ்யாவின் புரட்சிகர எழுச்சிக்கான தருணம் வந்துவிட்டது என்று அவர் குறிப்பிட்டுக்காட்டியதை நினைவுகூரலாம். '24-ம் நாளில் காலம் கனியவில்லை. 26-ம் நாள் என்ருலோ காலம் கடந்துவிடும். 25-ம் நாளில்தான் வெற்றி உறுதிசெய்யப்பட்டுள்ளது.' லெனினைச் சந்தித்தவர்கள் அனைவரும் அவருடைய அறிவாற்றலை உணர்ந்தனர். விரிவான ஊடுருவிச் செல்லும், கத்திமுனைபோன்ற கூரிய சிந்தனை; எந்தப் பிரச்னையினுடைய அரசியல்சாரத்தையும் உடனடியாக உய்த்துணரும் திறன் - அமைப்பாளரும், உரையாடல் வல்லுநரும், விவாதத்திற்குரிய மனிதருமான லெனினது தற்காலிக அரசாங்கத்துக்கு ஆதரவு தருவதுஎன்றுகூடப் பேசினர். ஆனுல், தனது ஏப்ரல் ஆய்வுரையில், பாட்டாளிவர்க்கப் புரட்சியை நோக்கித் தயாராகும்படி ஒரு திருப்பத்தை லெனின் தந்தார். 2917 ஜூலைக்கும் செப்டம்பருக்குமிடையில் கட்சியிலிருந்த பலர், அழிவிலிருந்து கட்சியைக் காப்பாற்றுவதுஎப்படிஎன்று கவலைப்பட்டுக்கொண்டிருந்தபொழுது, புரட்சிகரமாக அதிகாரத்தைக் கைப்பற்றுவோம் என லெனின் முழக்கமிட்டார்.

## புதிய பொருளாதாரக் கொள்கை

"யுத்தகால கம்யூனிசத்திலிருந்து" புதிய பொருளாதாரக் கொள்கைக்கான திருப்பம் குறிப்பிடத்தக்கது. உள்நாட்டுப் போர் என்ற அவசரகால நிலவரத் யூனிசம் —ஒரு சிறுபிள்ளைத்தனமான கோளாறு' என்ற நூல் வந்தது புதிய பொருளாதாரக் கொள்கை பல போல்ஷ்விக்குகளுக்கு எப்படி வியப்பாக இருந்ததோ அதைவிட இது சில 'கம்யூனிஸ்டு அகில' நபர்களுக்கு அதிக வியப்பினையளித்தது. புரட்சிக்குப் பிந்திய தன்னுடைய பெரிய நூலான இதை, 'இடதுசாரி' கம்யூனிசத்துக்கு எதிராகப் போராட அவர் படைத்தார். அந்தச் சமயத்தில், ஐரோப்பாவில் புரட்சி அலை தணியத் தொடங்கி விட்டதை உணராத மேற்கத்திய கம்யூனிஸ்ட்டுக் கட்சிகள், வலதுசாரி அபாயத்தை எதிர்த்துப் போராடுவதிலேயே ஈடுபட்டிருந்தன.

அரசியலில், விளைவுதான் உரைகல். மற்றவர்களை விடத் தொலைநோக்குக் கொண்டவர்., இடையில்

(12-ம் பக்கம் பார்க்க)


நெற் கிருமிப் பீடைகள் யாவற்றையும்
அறவே ஒழிக்க உபயோகியுங்கள்




'என்றெக்ஸ்' 20
என்றின் என்னும் பொருளின் வலுமிக்க உருவம்

நெற் பயிரைத்தாக்கும் கிருமிப் பீடைகள் பல உள்ளன. ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு வகை கிருமி நாசினி உயர்ந்த விலைகளில் கிடைக்கின்றது. இவையனைத்தும் இவ்வுயர் விலைகளில் தனித் தனியாகச் செய்ய வல்லதை ஒரே முறையில் சிக்கனமாகச் செய்ய வல்லதே "என்றெக்ஸ் 20" "என்றெக்ஸ் 20" இலங்கையில் மட்டுமல்ல உலகின் பலவேறு பாகங்களிலும் வெற்றிகரமாகப் பாவிக்கப் படுகிறது. தற்பொழுது, நெற்கிருமிப் பீடைகளுக்கு மட்டுமின்றி, புகையிலை, பருத்தி, காய்கறி வகைகளைத் தாக்கும் கிருமிப் பீடைகளையும் உடன் அழிக்கக் கைதேர்ந்ததென நிருபிக்கப்பட்டு, உங்களுக்குச் சிபார்சு செய்யப்படுகிறது. நெற்பயிர் 10-14 நாளய பருவத்திலிருக்கையில் முதன் முறையாகத் தெளிப்பின் பயிர்கள் முழுப்பாதுகாப்பு பெறும். பின்னர் மாதத்திற்கொருறை பாவிப்பின் பீடையற்ற செழிப்பான பயிர் பெறுவீர்கள். நெற்பயிர், புகையிலை, பருத்தி, காய்கறிவகையின் கிருமிப் பீடையழிப்பிற்கு 1 திரவ அவுன்ஸ் "என்றெக்ஸ் 20" உடன் 2 கலன் நீர் கலந்து 32-40 கலன் கொண்ட இத்திரவத்தை ஒவ்வொரு ஏக்கருக்கும் பாவிக்க.

பெறவும் பீடையற்ற நற்தாவரங்களுக்கும் ... ரூ. 9/- இக்கனமான 'என்றெக்ஸ் 20'



பிறரால் அகற்ற முடியாத இப் பொறிப்பு முத்திரையே தரச் சிறப்பிற்கு, உங்கள் உறுதி.

ஷெல் ரசாயனப் பொருட்கள்
SHELL


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடல்காற்றும்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

டும் காதலுக்கும் இதே முடிவு. மதம்மாறி குல விரோதம் குடும்ப விரோதத்தைத் தேடிக்கொண்டு சின்னஞ்சிறு பராயம் முதலாக வளர்ந்த நேசமும் காதலும் அது. செம்படவன் மகளும் 'கொச்சி முதலாளி' என்றழைக்கப்படும் முஸ்லிம் வாலிபனும்தான் இந்தக் காதலர்கள். இருவரையும் பிரிக்க முடியாத நிலையில், செம்படவன் தன் மகளுக்குத் தான் விரும்பிய ஒரு கடற்றொழிலாளியைக் கல்யாணம் செய்து வைக்கிருன். அதனுல் பெரும் பிரிவுத் துன்பம். தாயின் மரணத்தின்போதுகூட, பிறந்து வளர்ந்த வீட்டுக்கு வரமுடியாதவளாக அவர்கள் தனிக்குடித்தனம் மிக எட்டவிலகிப்போய்விடுகிறது. அவர்கள் தனி வாழ்வு அவளுக்கும் முஸ்லிம் வாலிபனுக்குமிருந்த பால்ய நேசம்பற்றிய அவதூருன ஊர்ப் பேச்சினுல் சலனமடைகிறது. இந்நிலையில் அவளுடைய பிறந்தகம் - அங்கு உருவான வாழ்வின் ஒரு பாதி கண்முன் தோன்றி கருத்தம்மாவின் கருத்தைக் கலக்கிய போது......கடலே கொந்தளித்து எழுகிறது. ஒரு குழந்தை மட்டும் உயிருடன் எஞ்ச, அவள் வாழ்வின் இரு பாதியும் முற்பாகம் பிற்பாகம் இரண்டுமே நிர்மூலமாக அழிந்து போகிறது. பொன்மீனுக்கு ஆசைப்பட்டு சொந்தமாக தோணி வாங்கி தொழிலில் முன்னேற்றம் தேடி காசு பணம் சம்பாதித்த இருல் பிடிச் செம்படவனின் வாழ்க்கைப் படகு இவ்வாறாகத் தரை மோதி சுக்குநூருக உடைந்து சிதறி சோககாவியமாக நமக்கு அறுசுவைவிருந்தளிக்கிறது.

கதையும் அதன் வெள்ளித்திரை சித்தரிப்பும் கொச்சி மிளகாய் மீனகுழம்பின் காரசாரச் சுவைமல்க தியேட்டரில் குழுமியிருந்தோரின் மூக்கையும் நாவையும் ஓரோர் சமயம் அவர்கள் கண்களையும்கூடத் தீட்சண்யமாகத் தாக்கியதைப் பார்த்தேன்.

கதை நிகழும் கேரளநாட்டுக் கடற்கரைக் கிராமக் காட்சிகளையும் சம்சார சாகரத்தின்ஆசாபாசச் சுழியிலே சிக்கிச்சுழலும் கடல்பாசி போன்ற பசுமையான அந்த மனிதர்களையும் இரண்டு இரவு உறக்கத்தின் பின்னரே என்னுல் மறக்க முடிந்தது.

வல்வெட்டித்துறைக்கடற்கரையில் நின்று அக்கரைக்கும் இக்கரைக்கும் பாலம் போட்ட அமைச்சர் சுகததாசாவையும் அவர் தம் தோழர்களையுமோ - செய்தியைப்படித்துவிட்டுப் பத்திரிகையை மடித்து கீழே போட்டதுடனே மறந்து போனேன்.

நோபல் பரிசுபெற்ற ஹெமிங்வேயின் கடலும்கிழவனும் கதையில் வரும் கிழவனை 'செம்மீன்' கதையில் வரும் செம்படவக் கிழவனும் நமக்கு ஞாபகப்படுத்துகிருன். வயதான காலத்திலும்கூட தொழிலிலே ஆசை, சாதனைகள் நிலைநாட்டுவதிலே இன்பம் உடலின் தளர்ச்சியை விஞ்சிய முறுக்கான மனநினைவுகள், மனைவி பிள்ளை, குடும்பம், சுற்றம் சூழல் பொருள் பண்டம் சுகபோகம் — என்றெல்லாம் நெஞ்சத்தில் மாளாத பந்தபாசங்கள் ...

ஆம் இவர்கள்வாழப்பிறந்தவர்கள், போராடப்பிறந்தவர்கள்!

# ஆங்கில நாவலாசிரியர் சார்ள்ஸ் டிக்கன்ஸ்

(ஆங்கில சிருஷ்டி இலக்கியத் துறையில் அமரத்துவம் பெற்றுவிட்ட எழுத்தாளர் சாள்ஸ் டிக்கன்ஸ். அவரது நூற்ருண்டுவிழா இவ் வருடம் இங்கிலாந்தில் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.)

தாம் வாழும் காலகட்டத்தில் சர்வதேச புகழீட்டும் பாக்கியம் பெரும்பாலான எழுத்தாளருக்கு கிட்டுவதில்லை. உலக இலக்கிய மேதைகளின் வாழ்க்கை வரலாற்றைப் பார்க்குமிடத்து இவ்வுண்மை புலப்படும். உயிரோடிருக்கும் வரை இலைமறை காயாக விருந்து, செத்த பின்னர் தான் 'காலத்தால் சாகாத கௌரவம்' பலருக்குக் கிடைத்திருக்கிறது. தாம் வாழும் காலத்தில் புகழ் மாலை சூடிக்கொள்வோர் ஒருசிலர்தான். இந்தவகையில் ஆங்கில எழுத்தாளர் சாள்ஸ் டிக்கன்ஸ் ஒரு அதிர்ஷ்டசாலிதான். ஏனென்ருல், உயிரோடிருக்கும் போது உலகப்புகழ் எய்தி, உலகடங்கிலும் எண்ணற்ற வாசகநேயர்களைத் தேடிக்கொண்ட பாக்கியசாலி அவர். இவ்வெழுத்தாளர் இறந்த பின்னரும் இன்றும் கூட அவரது படைப்புகள் லட்சக்கணக்கில் விற்பனையாகி வரத்தான் செய்கின்றன,

டிக்கன்ஸின் சிறுபிராய வாழ்க்கை மிகவும் துன்பம் நிறைந்தது. ஏழ்மையான குடும்பத்தில் பிறந்த அவர், தந்தையார் கடன் காரணமாக சிறை அனுப்பப்பட்டதும், எண்ணற்ற இன்னல்களை அனுபவிக்க நேரிட்டது, சிறுவயதில் குதம் ஒன்றில் கூலிவேலை செய்யும்போதும் அவர் அனுபவித்த வேதனை, அவரது நாவல்களில் மிகச் சோகமயமான கட்டங்களாக விபரிக்கப்படுவதைக் காணலாம் பின்பு அவர் பத்திரிகை நிருபராகப் பணிபுரிந்து எழுத்துத் துறையில் பிரவேசித்ததை அடுத்து வாழ்க்கை ஒருவாறு சீரடையத் தொடங்கிற்று.

டிக்கன்ஸ் ஆரம்பத்தில் எழுதிய நாவல்கள் வாரசஞ்சிகைகளில் தொடரம்சமாக வெளிவரத் தொடங்கின, 'ஹாட் டைம்ஸ்', 'டேல் ஒவ் டூ சிட்டீஸ்' போன்றன இவ்விதம் வெளியாகிய அவரது ஆரம்ப நாவல்களாகும். வாசகர் வட்டம் வளரத் தொடங்க, அவரது எழுத்தின் பிரபல்யம் விசாலமடைய, பிரசுரிப்பாளர்கள் அவரது நாவல்களுக்காக காத்திருந்தனர். டிக்கன் ஸூமோ சாகும்வரை சளையாது எழுதிவந்தார்.

டிக்கன்ஸின் சிருஷ்டி இலக்கியத்திறனுற்றலைக்கொண்டு கணிக்குமிடத்து, அவரை மகாகவி ஷேக்ஸ்பியருக்கு இரண்டாவதாகக் குறிப்பிடலாம் பத்தொன்பதாம் நூற்ருண்டுகாலத்தில், கைத்தொழில்யுக இங்கிலாந்தில் நிலவிய சமூக சீர்கேடுகளை அப்படியே யதார்த்தமாக அவர் தமது நாவல்களில் சித்தரித்துக் காட்டியிருக்கிருர். சமூக ஏற்றத்தாழ்வு, வறுமை, அநீதி போன்ற பிரச்னைகளை ஆழமாக ஊடுருவிய பார்வை அவரது சிருஷ்டிகளில் மலிந்து கிடக்கின்றன. ஆயினும் அவரது சமூகக் கண்ணேட்டம் முற்றிலும் தார்மீக ரீதியானது என்றே சொல்லவேண்டும். மனுநீதியையும், மனிதாபிமானத்தையும் வலியுறுத்துவதே அவரது எழுத்தின் இலட்சியப் பாங்காக இருக்கிறது. அவர்சமூகசீர்திருத்தத்தை விரும்பினுர் என்பது உண்மைதான். ஆனுல் அதற்கான அரசியல் ரீதியான பரிகாரங்களைத் தேட அவர் விழையவில்லை. அவர் அரசியலில் அக்கறை காட்டாததுதான் காரணம் என்கிருர்கள் சில விமர்சகர்கள் என்ருலும் மக்களிடையே மானசீகமான புரட்சி ஏற்பட்டால்தான், சமூகத்திலும் புரட்சிகரமான மாற்றங்கள் ஏற்படலாமென்பது அவரது நம்பிக்கை.



டிக்கன்ஸை ஒரு புரட்சியாளர் என்றும், தீவிரவாதி என்றும் சிலர் கூறுகிருர்கள். ஒருசில விமர்சகர்கள் அவரை முற்போக்காளர் என்றும் சொல்கிருர்கள். ஏனென்ருல் கைத்தொழிற் சமூகத்தில் நசுக்கப்படும் தொழிலாளருக்காக அவர் போராடிவந்தவர். ஒடுக்கப்பட்ட மக்களின் சோக வாழ்க்கையை அவர் எழுத்தில் வடித்துக் காட்டியதுமன்றி, இம்மக்களுக்காக நியாயம்கோரி அரசாங்கத்தை அடிக்கடி கண்டித்தும் வந்திருக்கிருர்.

டிக்கன்ஸின் படைப்புக்கள் பல்வேறு சுவைநயங்களைக் கொண்டவை, வாழ்க்கையை ஊடுருவி அலசிப் பார்த்து மனித உறவின் போலித்தன்மைகளை கிண்

(13-ம் பக்கம் பார்க்க)

# இலக்கியத்துக்குச் சமய நோக்கு அளிக்கலாமா?

[சைவஇலக்கியம், இஸ்லாமிய இலக்கியம், கிறிஸ் தவ இலக்கியம் என்று இலக்கியத்திற்கு வரம்பு கட்டலாமா? இதுபற்றித் தமது கருத்தைக் கூறுகிருர் இக்கட்டுரையாசிரியர். எழுத்தாளர், வாசகநேயர்களின் கருத்துக்களை வரவேற்கின்ருேம். — ஆ-ர்.]

எஸ். எம். ஜே. பைஸ்தீன் பி. ஏ.

இலங்கையிற் சமீபகாலமாக இலக்கியப் போக்கிலே சுயநலமற்ற பாங்கொன்றினைக் காணமுடிகிறது. தமிழ் இலக்கியங்களுக்குச் சமயச் சார்பினை வலியுறுத்திப் பேதங் காணுவதே அப்போக்காகும். கல்விப் பொதுத் தராதரப் பத்திரப்பரீட்சையில் இஸ்லாமிய இலக்கியங்களுக்குத் தனிப் பாடத்திட்டம், சாகித்திய மண்டலத்தில் இஸ்லாமிய இலக்கியங்களுக்குத் தனிப் பாடத்திட்டம், சாகித்திய மண்டலத்தில் இஸ்லாமிய இலக்கியங்களுக்கெனத் தனிப்பிரிவு என்பவற்றின் கோரிக்கைகளாக அப்போக்கு பிரதிபலிக்கின்றது. தமிழ் இலக்கிய ரசனையைப் பொறுத்தவரையில், இதனுல் எதிர்காலத்தில் மோசமான தாக்கங்களை விளைவிக்கக் கூடிய அபாயம் எம்மை எதிர்நோக்கியுள்ளது.

இலங்கையில் தமிழைப் பேசுவோரில் சைவம், இஸ்லாம், கிறீஸ்தவம் எனும் மூன்று சமயங்களைக் கடைப்பிடிப்போர் உள்ளனர். இந்நிலையில் சைவ இலக்கியம், இஸ்லாமிய இலக்கியம் என்பதாக இலக்கியத்தை வரம்பு கட்டும்போது மூன்ருவது பிரிவினரான கிறீஸ்தவர்கள் வேருக்கப்படுகின்றனர். அங்கீகரிக்கப்பட்ட பாடத்திட்டங்கள் இரண்டு மட்டுமே இருக்கும்போது அவர்கள் சைவ இஸ்[illegible] இலக்கியங்களுள் ஏதாவது பிரிவையே தெரிந்தெடுத்துப் படிக்கவேண்டும். இது தாம் ஒதுக்கப்படுகின்றன ரென்ற உணர்வைத் தரக்கூடுமாதலின், அவர்களும் தமக்கெனக் கிறீஸ்தவ இலக்கியங்களைக்கொண்ட பாடத்திட்டம் ஒன்றினைக் கோருதல் கூடும். இவ்வாறு பாடத்திட்டம் போன்று பிறதுறைகளிலும் சமயரீதியாக எல்லைகோலுவது இந் நாட்டின் எதிர்காலச்சந்ததியினருக்குத்தான் பெருந்தீங்குகளை ஏற்படுத்தும். பலதிறப்பட்ட சமயத்தை அனுஷ்டிப்போர் ஒரேமொழியைப் பேசும்போது ஒவ்வொரு சமயத்தவரும் தத்தஞ்சமய இலக்கியங்களை மட்டுமே போற்றமுயலுவது தேசிய ஒற்றுமைகளுக்கும் முரணுகும். அதிலும் தமிழைப் பேசுவோர் சிறுபான்மையினராக உள்ள இலங்கையில் இவ்விஷயத்தில் மிகுந்த எச்சரிக்கை அவசியம்.

அது மட்டுமன்றி, தமிழை [illegible] வேண்டிய இளைய பரம்பரையினர் தமிழ் இலக்கியத்தினது சுவையை முழுமையாகவும் முறையாகவும் அறியவும் அதில் ஆர்வங்கொள்ளவும் இடமில்லாமற் போகும். ஏனெனில் தமிழிலக்கியத்திற்குப் பல்வேறு சமயத்தவர்களும் தொண்டாற்றியுள்ளனர். இது சங்க காலமுதல் தற்காலம்வரை தொடர்ச்சியாக நடைபெற்றுள்ளது. குறிப்பாகக் கூறுவதாயின் கிறீஸ்தவ, இஸ்லாமிய இலக்கியங்களது அறிமுகம் 18, 19ம் நூற்ருண்டுகளுக்குப் பின்புதான் இடம் பெறுகிறது. இவை வளரவும் இதுகாலவரை இருந்துவந்த பிற இலக்கியங்கள் பேருதவி ரிந்துள்ளன. எனவே இவ்விலக்கியங்களை நன்குசுவைக்க 18ம் நூற்ருண்டு வரையிலான இலக்கியங்களைப் பற்றிய அறிவு மிகவுமவசியம்.

தமிழிலக்கியங்களுட் பெரும்பாலானவை சைவ சமயச் சார்பானவை என்பது, எடுத்துக் காட்டப் பெறும் ஒரு முக்கிய விஷயமாகும். தமிழ்மொழி பிரதானமாகப் பேசப்பட்ட, தமிழ்நாட்டில் தமிழருட் பெரும்பான்மையோர் ஆரம்பமுதல் கடைப்பிடித்து வந்த சமயம் என்ற முறையில் இது இயல்பாகவும், தவிர்க்கமுடியாதபடியும் ஏற்பட்ட நிலை என்பது ஓர் அம்சமாகும். அடுத்ததாக தமிழிலக்கியங்களில் முக்கிய இடம் வகிக்கின்ற புராணச்செய்திகளைச் சைவசமயக்கடவுளார் சார்பானவையாக மட்டுமே கருதும் தவருன போக்காகும். கம்பராமாயணம், திருவிளையாடற்புராணம் போன்ற இலக்கியங்களில் வரும் தேவர், அரக்கர் போன்ருர் தேவலோக வாசிகள் என்ற அளவிலேயே கருதப்படுகின்றனர். ஆனுல் உண்மையில் பைபிள், திருக்குர்ஆன் போன்ற சமயமறைகள் எவ்வாறு புராதன வரலாற்றை எடுத்துரைக்கும் வரலாற்று மூலகங்களாகவும், இருக்கின்றனவோ அதே போலவே இந்தியப் புராணங்களும் இந்திய வரலாற்றினையும் (பரந்த அளவில் ஆசிய வரலாற்றையும்) அறிவிக்கும் சரித்திரச் சான்றுகளாகவும் கொள்ளப்படலாம் என்ற புதிய கருத்தொன்று இப்போது தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, புராணங்களில் ஆசிய மக்களது நாகரீகங்கள், மரபுகள் என்பன பொதிந்துள்ளதாகவும், அவற்றை ஆராய்வதனுல்

[14ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தை தனயனை நடத்தும் முறை




மகன் ஒரு குடும்பத்தின் விழுது. ஆலமரம் விழுதால் தன்னைப் பலப்படுத்திக்கொள்கிறது. தந்தை வயதாகித் தளர்ந்த காலத்தில் மகன் அவன் தோளிலிருந்து குடும்பப் பாரத்தைத் தன் தோளுக்கு மாற்றிக் கொள்கிறான். நல்ல மகனை உருவாக்காத தந்தை வயதான காலத்தில் 'மகன் வஞ்சித்துவிட்டானே' என்று அவலக்குரல் எழுப்புகிறான் பண்புள்ள மகனைப் பெற்ற தந்தை அமைதியடைகிறான்.

'சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே' என்கின்றார் சங்ககாலப் பெண் புலவர். சான்றோனாக்குதல் எவ்வாறு? மகனின் உடலையும் அறிவையும் மாத்திரம் தந்தை வளர்த்துவிட்டால் போதாது. அறிவை மட்டும் வளர்த்துக் கொண்டவன் கர்வியாகிறான். உள்ளம் பண்பட்டால்தான் மனிதத்தன்மை வளமடைகிறது. தந்தை மகனின் உள்ளத்தைத்தாம் பண்படுத்த வேண்டும். பண்பட்ட உள்ளத்தில் அன்பு பிறக்கிறது. பண்பட்ட மகனையுடைய தந்தை மகனின் அன்புக்கு ஆளாகி இன்புறுகிறான்.

முட்டிவிட்டுக் குனிவதாலோ கொட்டிய பாலுக்கு அழுவதாலோ பயனேதும் ஏற்படாது. மகனை எப்படி நடத்துவதென்ற இலக்கணம் தெரியாமல் மனம் போனவாறு நடத்திவிட்டு இறுதியில் வேதனையடைவது அழகல்ல. வெள்ளம் வருமுன் அணைபோடுவது தான் விவேகம். இன்று நாம் அறிவுலகில் இருக்கிறோம். உலக வளர்ச்சிக்கேற்றவாறு நம் கண்ணோட்டமும் மாறவேண்டும். பருவமறிந்து பயிர் செய்து பலனடையும் விவசாயிபோல நல்ல தந்தையும் தன் மகனை எந்த வயதில் எப்படி நடத்தவேண்டும் என்பதை அறிந்து நடந்து இன்புறுகிறான். அவன் குடும்பம் உலைவதில்லை. உருக்காக உறுதி பெறுகிறது. வயதிற்கேற்ப மகனை நடத்தும் முறையை நான்கு பிரிவாகப் பிரிக்கலாம்,

## விளையாட்டுப் பொம்மையாக

மகன் சிறு குழந்தையாக இருக்கும்போது தந்தை தன் அல்லல் தீர்க்கும் அருமருந்தான அவனோடு விளையாடுகிறான். அவனைத் தன் விளையாட்டுப் பொம்மையாக்குகிறான். குழந்தையோடு விளையாடுவதன் மூலம் தன் வேலைக்களைப்பையும், கவலைகளையும் களைகிறான்.

## வேலைக்காரனாக

குழந்தைப் பிராயத்தைக் கடந்து ஏழுவயதை மகன் தாண்டிவிட்டால் இன்னும் தந்தை மகனோடு கொஞ்சிக் குலவிக்கொண்டிருப்பது அழகாகுமா? ஏழு வயதிற்கு மேல் மகனின் உள்ளம் உழைப்பை நாடவேண்டும். உடல் வலுப்பெற வேண்டும். அவன் கல்வியில் தந்தை கூடிய கவனம் செலுத்த வேண்டும். 7 வயது முதல் 14வயதுவரை தந்தை மகனை ஒரு வேலைக்காரனைப் போல் நடாத்த வேண்டும். தனக்கும் குடும்பத்தாருக்கும் உதவி செய்யத்தக்க வகையில் அவனைப் பழக்கியெடுக்க வேண்டும், துணிவு இடம் பெறுவது இந்தப் பருவத்தில்தான்.

இருட்டைக்கண்டு மகன் அஞ்சாதவாறும் எதிரியைக்கண்டு பதுங்காதவாறும் இந்தப் பருவத்தில் மகனை வளர்க்கவேண்டும், வீட்டுக்குத் தேவையான வெளிவேலைகளையெல்லாம் செய்வதற்கு அவனைப் பழக்கிக்கொள்ளவேண்டும்.

இந்த வயதில் தந்தை மகனை அடிக்க வேண்டிய

**பொ. ம. ரா.**

இடத்தில் அடிக்கவேண்டும் கண்டிக்கவேண்டிய இடத்தில் கண்டிக்கவேண்டும். பொதுவாகக் கண்ணுக்குள் எண்ணெய் விட்டுக்கொண்டு பையன் யாருடன் சேருகிறான், எங்கு போகிறான் என்பதைக் கவனிக்கவேண்டும். இப்பருவத்திலேயே பொய் பேசாமை, திருடாமை, ஏமாற்றாமை, பிறர்க்குதவுதல், வாக்கைக் காப்பாற்றுதல் போன்ற நற்பண்புகள் மகனிடம் வளரும்படி தந்தை பார்த்துக்கொள்ள வேண்டும். இப்பருவத்தில் அவனிடம் காணும் நற்பண்புகள்தான் அவனின் பிற்கால வளர்ச்சிக்கு அத்திவாரமாகும்.

## விருந்தாளியாக

அடுத்து பதினான்கு வயது இக்கட்டானது. இந்த வயதுப் பையன் பெரியவனுமல்லன் சிறியவனுமல்லன். கடிகாரத்தின் ஊசல் போல அவன் மனம் ஒரு நிலையில் நில்லாது ஊசலாடுகிறது பாவம்! தான் பெரியவரிடமும் சிறியவரிடமும் அணுக முடியாது அவன் தயங்கி ஒதுங்கி நிற்கிறான், மனதில் இனம் தெரியாத பயம் ஒருவித நாணம் அவனிடம் உள்ளது. உடலில் ஒருவித மாறுதல்கள், புதிய உணர்ச்சிகள், அனுபவங்கள் இந்த வேளையில் தந்தை மகனைக் கண்ணாடிப் பாத்திரத்தைக் கையாளுவதுபோலக் கவனத்துடன் நடத்தவேண்டும். அவன் அறிவின் மாறுதல்களையும், மனத்தில் கலக்கத்தையும் உணர்ச்சியின் கொந்தளிப்புக்களையும் அவர் மனக்கண்ணின் முன் கொண்டு நடக்கவேண்டும். சுருக்கமாகச் சொல்லப்போனால் விருந்தாளியைப் போல் மகனை நடத்தவேண்டும். அன்பிற்கு ஏங்கும் பருவம் இது. அப்போது தரப்படும் அன்பு மகன் உள்ளத்தில் வேரூன்றி நன்கு வளரும்.

## நண்பனாக

இருபத்தொரு வயது தாண்டிவிட்ட மகனைத் தகப்பன் விளையாட்டுப் பொம்மையாகவோ வேலைக்காரனாகவோ விருந்தாளியாகவோ நடத்துவது விவேகமல்ல. மகன் சம்பாதிக்கும்

தயாரிப்பு: குணம்

திறனடைந்ததும் தகப்பன் அவனுக்கு வீண் சோறு போடலாகாது. உழைக்க ஏற்பாடு செய்யவேண்டும்

ஏதாவது வீட்டில் நடந்தால் மகனுடன் கலந்தாலோசிக்கவேண்டும். நல்ல நண்பர் ஒருவருக்கொருவர் தாராளமாக நடப்பதுபோல் நடக்கவேண்டும். தந்தை மகனுக்கிடையே உள்ள தகராறில் மூன்றாவது ஆளை நுழைக்கக்கூடாது. அவரே பேசித் தீர்த்துக்கொள்ள வேண்டும். பொறுப்புவாய்ந்த தலைவனாக மகனை உருவாக்கவேண்டியது இப்பருவத்திலேயேயாகும்,

நல்ல தந்தை மகனின் இயல்பறிந்து அவனுக்கேற்ற வாழ்வு முறையை அமைத்துககொடுககிறார். நல்ல தந்தை ஒரு சிறந்த ரோஜா மலர். அதனிடமிருந்து வெளியேவரும் சுகந்த மணமே நல்ல மகன்.

---

சமையல்

# தித்திக்கும் பட்சணங்கள்

## சவ்வரிசி கேக்

தேவையானபொருட்கள்

| | | |
|---|---|---|
| சவ்வரிசி | 1 | றாத்தல் |
| சீனி | 3/4 | ,, |
| நெய் | 1/2 | ,, |
| முந்திரிவற்றல் | 1/4 | ,, |
| முந்திரிக் கொட்டை | 1/4 | ,, |

செய்முறை

சவ்வரிசியை தண்ணீரில் 20 நிமிடம்வரை ஊற வைத்து ஆட்டுக்கல்லில் நன்றாக அரைத்தெடுக்கவும், பின்னர் அடுப்பில் எண்ணெய்ச்சட்டியை வைத்து அதில் நெய்விட்டு முந்திரி வற்றல், முந்திரிக்கொட்டை இரண்டையும் பொரித்து எடுத்தபின்னர் சீனியைப் பாகுகாய்ச்சவும். பாகு பதம் வந்ததும் அரைத்துவைத்திருந்த சவ்வரிசியை அதில் போட்டு இடைவிடாது கிளறவேண்டும். கிளறும் போது நெய்யையும் சிறிது சிறிதாக விடவும். பொரித்துவைத்திருந்த முந்திரிவற்றல், முந்திரிப்பருப்பு ஆகியவற்றையும்அதனுடன்சிறிது வனிலா, கலர் ஆகியவற்றையும் சேர்த்து இறுகும் வரை கிளறவும். பின்னர் இறக்கி தட்டில் ஊற்றி ஆறியபின்னர் விரும்பியவடிவில் வெட்டிப் பரிமாறலாம்.

## ரவை கேசரி

தேவையானபொருட்கள்

| | | |
|---|---|---|
| ரவை | 1 | றாத்தல் |
| சீனி | 2 | ,, |
| நெய் | 3/4 | ,, |
| முந்திரிப்பருப்பு | 1/4 | ,, |
| முந்திரிவற்றல் | 1/8 | ,, |
| கேசரிப்பவுடர், வனிலா | (சிறிதளவு) | |

செய்முறை

ரவையை நன்றாக நெய் விட்டு வறுத்தெடுக்கவும். இதேபோன்று முந்திரிப் பருப்பு, முந்திரி வற்றல் ஆகியவற்றையும் நெய்யில் வறுத்துக்கொள்ளவும். பின்னர் ஏற்கனவே வறுத்து வைத்த ரவையை ஒரு பாத்திரத்திலிட்டு கேசரிப்பவுடரையும் கலந்து தேவையான அளவு நீர்விட்டுவேகவைக்கவும். ரவை அவிந்துவரும் பொழுது சீனி, முந்திரிப் பருப்பு - வற்றல் ஆகியவற்றைப் போட்டு நன்றாகக்கிளறவும். கலவை இறுகிப் பதமானதும் இறக்கி நெய்தடவிய தட்டில் கொட்டி ஆறிய பின்னர் சிறுசிறு சதுரத் துண்டுகளாக வெட்டி ஊற வின் பின் பரிமாறவும்.

---

# மலர்களின் ராணி

கிளியோபட்ரா என்ற அரசிக்கு மலர்களின் ராணியான ரோஜாவின் மேல் மிகுந்த ஈடுபாடு உண்டு. மார்க்அந்தோனி என்ற புகழ்பெற்ற ரோம தளபதி தன் விருந்தினராக வந்த போது ராணி ஓர் ஆடம்பரப் பொதுவிருந்துக்கு ஏற்பாடு செய்தாள். விருந்து மண்டபத்தில் கண்ணையும் கருத்தையும்கவரும் ஆயிரக் கணக்கான ரோஜாமலர்கள் நிலத்தில்பரப்பச்செய்தாள். அந்த மலர்களை விருந்தினர் மிதித்துவிடாமல்அவற்றைக் கண்டுகளிக்கும்படி மேலே வலைகள் போட்டிருந்தாள்! ரோஜாவின் அழகும் மணமும் விருந்தினரைக்கவரவே அரசியாரை அவர்கள்வாழ்த்திச் சென்றார்கள்.

ரோஜாவிலிருந்து ஆதிகாலம் முதல் அத்தர் என்ற மணத்தைலம் எடுத்து வந்தார்கள். இந்தச் சாற்றை உணவுகளுக்கு மணமூட்டவும், மருந்தாகவும் பயன்படுத்தினார்கள். முற்காலத்தில் அத்தரை விலை மிக்க பொருளாகக் கருதிவந்ததால் கடல்வணிகர்கள் சிலர் தங்கள் எஜமானர்களுக்கு நாணயத்துக்குப் பதில் ரோஜா மலர்களைக் கொடுத்துவந்தனராம். 15-ம் நூற்றாண்டு இங்கிலாந்தில் ஆண்டுக்கு ஒரு ரோஜாமலர் வாடகை கொடுக்கக்கூடிய வரை, ஓர் ஏக்கர் நிலத்துக்குரியவராகக் கருதிவந்தார்களாம்.

---

# தவறான கருத்துக்கள்!

—சரோஜினி சங்கர்—

## ஆதவனும் தாமரையும்

ஆதவனைக்கண்டு தாமரையும், அம்புலியைக் கண்டு அல்லியும் மலர்கிறது' என்ற கருத்துத் தவறானதாகும். சந்திரனே தோன்றாத அமாவாசை இரவிலும் அல்லிமலரத்தான் செய்கிறது. ஆதவன் வரவுக்குக் காத்திராமலே தாமரை மலர்கிறது. இதனை நிரூபித்துக் காட்டியவர் ஜகதீச சந்திரபோஸ்.

0 0 0

## பாம்புப் புற்று

புற்று எழுப்பத் தெரியாததால் பாம்பு கறையான் புற்றுக்குள் குடியேறி வசிக்கிறது என்று தவறாகக் கருதிக்கொண்டு கறையான் புற்றுக்குப் பூஜைசெய்து பால் விடுகிறோம். பாம்பு புற்றுக்குள் குடியேறி வசிப்பது இல்லை. கறையான் களைத் தின்னவே பாம்பு புற்றுக்குள் நுழைகிறது. பின்னர் அது வெளியே வந்துவிடும்.

## மீன்களின் தூக்கம்

மீன்கள் தூங்குவதே இல்லையென்ற தவறான கருத்துப் பலரிடமும் நிலவுகிறது. உயிருள்ள பிராணிகளெதுவும் உறங்காமல் இருப்பது இல்லை. மீன்களுக்கு இமைகள் இல்லாததால் தூங்கும்போதும் கண்கள் திறந்தபடியேதான் இருக்கும். பாம்பும் இப்படித்தான்:

முப்பது ஆண்டுகளுக்கு மேல்
தங்க, வைரநகைகள்
வியாபாரத்தில்
முன்னணியில் நிற்கும்
சிறந்த நாணயமுள்ள ஸ்தாபனம்
ராணி ஆபரண மாளிகை
224, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
நவீன - நாகரிக அமைப்புள்ள
தங்க வைர நகைகளைப் பெறுவதற்கு
இன்றே விஜயஞ் செய்யுங்கள்
மனேஜர்: A. KARAPUTUGALA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுகதை

(5-ம் பக்கத்தொடர்ச்சி)

யிலின் புழுதி, மண்ணையும் விண்ணையும் மறைக்கக்கூடிதாகஎழுந்துபரந்து கொண்டிருக்க...'' அவையளைக் கோயிலுக்குள்ளே போங்கோவெண்டு விட்டாத்தான் அவையள்கோயில்வீதிகூட்டவருவினமாம்...இந்தஉலகம் உண்டான... காலந்தொட்டு இடுந்துவாற வழமையை... இப்ப...தங்களுக்காக மாத்தெண்டு நிண்டால் சரிவருமோ? ஏன்...எண்டைக்கும் நிண்டு கும்பிட்ட மாதிரி வெளியாலை நிண்டு கும்பிட்டா... பிள்ளையார் வரமாட்டாரா? உள்ளுக்குப் போனால்தானே அவையளுக்குக் கைலாயம் கிடைக்கும்? என்னத்தைத்தான் செய்தாலும் காகம் எப்படித்தான் கங்கையிலே மூழ்கிக்குளிச்சாலும்வெள்ளைக்கொக்காகிவிட முடியுமோ'' என்றெல்லாம் மனதுக்குள்ளே குமுறினாள் மயிலி. சாதி என்ற ஒன்று உண்மையாகவே உலகத்தில் இருக்கின்றது.. இந்தஉலகத்தைப் படைத்த கடவுள்தான் மனிதர்களுக்குள்ளும்...நீ இன்ன சாதி... நீ இன்ன சாதியென்று பகுத்தும் படைத்திருக்கின்றாரென்று நெடுங்காலமாக நிலை பெற்றுவிட்ட சமூக மரபு வழியில் அவளது சிந்தனை சென்றதனால் தன்னுடையாட்கள் நடப்பது மிகமிகப்பிழையென்ற எண்ணம் ஆணித்தரமாக அவள் மனத்தில் வேரோடியிருந்தது. ''எனக்கு மற்றவை வராததல்ல இப்ப வருத்தம்... என்ரை அவற்ரை...சகோதரி... என்ரை மச்சாள்காரி வள்ளிப்பொம் பிள்ளையார் செய்ததுதான் மனதுக்கு ஆகலும் பெரிய வருத்தமாய்க்கிடக்குது... பிள்ளையாரே ... எங்கடை பிள்ளையாரே எண்டு இரவு பகலாய் பிள்ளையாரோடை நிண்டு நல்லாய் அருந்தி வருந்தி பதின்மூன்டு வருசத்துக்குப் பிறகு ஒரு பிள்ளையையும் பிள்ளையாரிட்டைக் கேட்டுக் கையிலை வாங்கின கணக்காக வாங்கிப்போட்டு இப்ப அவவும் மற்றவையளோடை ஒத்துக்கொண்டு கட்சிகட்டி நிண்டுட்டா...'' மன ஆவேசம் புழுதியாய்ப் பறக்கப்பறக்க நிலத்தைக் கூட்டிக்கொண்டிருந்தாள்மயிலி. அவ்வேளையாக அந்த இடத்தில் மறுகுரலொன்று திடீரட்டியாகக் கேட்டதும்...அப்படியே தன்னுடைய கூட்டுகிற விளக்குமாற்றையும் அவுக்கடீரெனக் கீழே போட்டுவுட்டுத் திரும்பிப் பார்த்தாள் மயிலி.

''...என்னணை மயிலியார்.. உன்னை மட்டும் கோயிலுக்குள்ளே விடலாமெண்டு சொன்னவையோ?''

''வாய்க்கொழுப்பான கதை கதைக்காதை ... எங்கடை பேத்திபூட்டிகாலந்தொட்டு எத்தினையோ தலைமுறை தலைமுறையாய் எல்லோரும் கூடிச் செய்துவந்த இந்தக் கோயில் காரியத்தை...இப்ப நான்தானொரு காகம்பறந்து பறந்து—''

''எடி... ஓமடி ... ஓமடி... இப்பிடியெண்டா ... உன்னை இங்கை வாவெண்டு இழுத்துக்கொண்டுபோய் ஆதி மூலத்துக்குள்ளேதான் விடுவினம்...''

''நீயென்ன... இதிலையிப்ப ஒவசியர் வேலைபாக்கவோ வந்தனீ''

''நானோ... நானிப்ப உனக்கு முன்னாலை காறித்தூவெண்டு துப்பிப்போட்டுப் போகத்தான் இதிலையிப்ப வந்தனான்.''

''எங்கநீ...துப்புபாப்பம்''

''தூ...தூ''

அடுத்த விநாடி ஒரு பத்திரகாளியாகவேமாறிவிட்ட மயிலி...''ஓடடி இந்தடத்தாலை...உனக்குமெனக்கும் கதையில்லையடி ... ஓடடி... ஓடடி'' யென்று விளக்குமாற்றையும் ஆவேசமாக ஓங்கிக்கொண்டு வள்ளியை அடிக்கநெருங்கியபோது வள்ளி புத்தியாக அடுத்த கதைக்கு இடம் வைக்காமல் அப்பால விலகி நடந்தாள். அதன்பின் மயிலி இந்த உலகின் முழுச்சக்திகளையும் தனக்குள் ஒரு விசுவரூப சக்தியாக ஒன்று திரட்டி...இந்த பரந்து விரிந்த உலகம் முழுவதையுமே வேகமாக... அதிவேகமாக காற்றிலும் வேகமாக விளக்குமாறுபிடித்துக் கூட்டிப்பெருக்கித் தள்ளிக்கொண்டிருப்பதைப் போல உணர்வுப் பிரளயமாக கையும் காலும்கிடுகிடுக்க, கடகடவென்று வீதியெங்கிலும் பம்பரமாகச்சுழன்று தன் வேலையைத்தொடர்ந்தாள். தான் களவாக வந்து கோவில்வீதிகூட்டும்விஷயம் இனி எப்படியும் வள்ளிமூலமாகத் தன்னுடைய கணவனுக்கு தெரியவேண்டிவந்து தான்வீட்டுக்குப் போனதும் பெரியநாடகமே நடக்கப் போகுது என்று நல்லாக மனம் எண்ணிகொண்டது. தன்னுடைய காரியம் முடிந்தபின்பு தனக்கு மரணம் தான் சம்பவித்தாலும் அது குறித்துச்சிறிதேனும் அஞ்சுபவளல்ல மயிலி. நிறைவு பெற்ற உள்ளத்தினளாய் மயிலி தன்னுடைய கருமத்தை முடிக்கும் தருணம் 'என்னடி மயிலீ... உன்ரை ஆக்களெல்லாரும்... எங்கை போட்டினம்?' என்ற குரல் கேட்டு தலை நிமிர்ந்தாள். 'எல்லாரும் கோயிலுக்குள்ளை வரப்போகினமாம். இண்டைக்கிக் கோயில்வீதி கூட்ட வராததுக்கு சரியான பாடம் படிக்கப் போகினம் எல்லாரும். இந்தப்பிள்ளையார் சும்மா விடார்...ஏனுன்ர புரிசன் கணபதி போன திருவிழா விலண்டு ஒரு கொஞ்சக் காடையளையும் சேர்த்துக் கொண்டு வந்து...இதிலை நிண்டு குதிச்ச குதிப்புக்கு இந்தத் திருவிழா வாறதுக்கிடேலை அவனைப் பிள்ளையார் அடிச்சு முறிச்சுப் பாயிலை போட்டதைக் காணலையோ. குதிரைக்குக் கொம்பைக்குடுத்தால் அது சும்மா விடுமா?... என்னத்தைத்தான் வெட்டிப் புடுங்கினாலும் ... காகம் காகந்தான் வெள்ளைக் கொக்கு வெள்ளைக்கொக்குத்தான்.'

கோவில் வடக்கு வாசற் படலையடியில் கோவில் தர்மகர்த்தாவான விக்கினேஸ்வரக் குருக்கள்தான் நின்று மயிலியைப்பார்த்து இவ்வாறு முழங்கினார். ஒருவித பக்திபரவசமான உள்ளத்தோடு மயிலி அவரைப் பார்த்துக்கொண்டே 'அவையளெல்லாம் இருந்த இடம் தெரியாமை அழியப்போகின' மென்று தன்னுடையாட்களுக்கு ஒரு பிரளயமே பயங்கரமாக வந்து முடிந்துவிட்டதைப் போன்ற உணர்வோடு அப்படிச் சொல்லிவிட வாய் திறந்தவள் அதே பொழுதாக தன்னுடைய கணவன் கணபதி எழும்பி நடக்கமுடியாமல் கிடந்தநிலையிலும் வழங்கக்கூடிய ஒருகையில் ஒடுசிறு கடதாசிப் பெட்டி போன்ற ஒரு பொருளை ஏந்திப் பிடித்தவண்ணம் இருந்த இருப்பாக அரக்கி அரக்கித் தன்னைநோக்கி மூர்க்கத்தனமாக வந்துகொண்டிருந்ததைப் பார்த்துத் திகைத்து வாயடைத்துப் போய் நின்றாள். 'நான் செய்ய நினைச்ச வேலையைச் செய்து முடிச்சிட்டன். இனி என்னை என்ரை புரிசன் நான் கோயில் வீதி கூட்டப்போன குற்றத்துக்காக கொலை செய்தாலும் செய்யட்டுக்கு மென்றும் மின்னலாக ஒரு நினைவு மனதில் பளிச்சிட ஒருவித பயபக்தியோடு தன்னுடைய கணவனை நெருங்கி நெருங்கி நடந்தாள் மயிலி. ஒரு நொடிக்குள்ளாக திடீரென்று குளறியெழுந்த அசுரபலத்தின் வேகத்தோடு கணபதி மயிலியின் காலடியில் தூக்கி வீசிய நாலைந்து எறிகுண்டுகளடங்கிய அந்தக் கடதாசிப்பெட்டி பயங்கரப் பேரொலியுடனே வெடித்துச் சிதறியது அதைத் தொடர்ந்து இந்த உலகையே ஒரு கலக்குக் கலக்கி விடும் மயிலியின் கதறல்— 'ஐயோ பிள்ளையாரே! ஐயோ பிள்ளையாரே' எரிகின்ற நெருப்பிற்குள் போடப்பட்ட வண்ணாத்திப்பூச்சியாகச் சுழன்று துடித்து தசைகள் சிதற இரத்தவெள்ளத்தினுள் குதித்துப்புரண்டு உருண்டது அவள்சடலம். இந்த எதிர்பாராத அதிர்ச்சியான நிகழ்ச்சியினால் கோவிலின் இராஜகோபுரமே தன்னுடைய தலையில் தூள் தூளாக இடிந்து நொருங்கி விழுந்து கொண்டிருப்பதைப்போன்ற பேரதிர்ச்சியின் தாக்குதலோடு கோவிலுக்குள் நின்றவர்களுடன் கூடி அந்த அவலக் காட்சியைக் கண்கொண்டு பார்க்கவே முடியாமற் பார்த்துக்கொண்டிருந்த விக்கினேஸ்வரக் குருக்களின் நினைவிலும் நெஞ்சிலும் ஆதியும் அந்தமுமில்லாத ஒரு சக்தி மின்னலெனப் பளிச்சென்று மாறி மாறி மின்னி இடியாக ஆர்ப்பரித்து, முழங்கித்தள்ளியது. சோவென்று அடித்தூற்றும் சோனாவாரி மழையாக அவருடைய கண்களிலிருந்து அருவி பெருகியது.

'ஒன்றே குலம் ஒன்றே குலமென்று இந்த உலகம் முழுவதும் ஓங்காரமாக ஒலித்து விட்ட அசரீரி வாக்காக இறைவனின் மேன்மையான உத்தரவாக ஒரு நொடிக்குள்ளே ஒரு யுகப் புரட்சியே நடந்தேறியதாக ஓர் உள்ளொளி அவரின் உள்ளத்தே ஊற்றெடுத்தது. வெவ்வேறு திசைகளிலிருந்து பறந்து வந்த ஒரு காகமும் ஒரு வெள்ளைக் கொக்கும் கோவில் இராஜகோபுரத்தின் உச்சியில் வந்து ஒன்றாக அமர்ந்திருந்த காட்சியைப் பார்த்துக்கொண்டே அமைதியான உள்ளத்தோடு விக்கினேஸ்வரக் குருக்கள் சென்னிமேல் கைகுவித்து வணங்கிக் கொண்டதும்... அவரோடு கூடிநின்ற அந்தக் கூட்டத்தினரும் அவரைப் பின்பற்றிக் கரங்களைக் கோபுரமாய் உயர்த்த [illegible]

(யாவும் கற்பனை)

## அம்புலி ...

(9-ம்பக்கத் தொடர்ச்சி)

பின்னர் படிப்படியாக தாய்க்கலத்தை அண்மியதும்அத்துடன் இருகலங்களும் இணைக்கப்படும். சந்திரக் கலத்திலிருக்கும் இரு வீரர்களும் தாய்க் கலத்துக்குள் நுழைந்ததும் அதனைக் கழற்றி விடுவார்கள். அதன் பின்னர் பூமிக்குத் திரும்பும் நடவடிக்கைகளை அவர்கள் கவனிக்கத் தொடங்குவார்கள்.

(வளரும்)

# லெனின் வாழ்க்கை . . .

(9-பக்கத் தொடர்ச்சி

உள்ளவைகளை எல்லாம் கடந்து இறுதி லட்சியத்தைக் காண்பவர், வெல்கிறார். சதுரங்கத்தில் லெனின் ஆர்வம் கொண்டிருந்தார். அதுபோலவே, அரசியலிலும் பல காய்களை நகர்த்த வேண்டிய அவசியத்தை அவர் தொலைநோக்குடன் உணர்ந்திருந்தார். அந்தக் காலத்திய கட்சி வரலாற்றில் நிறைந்து கிடக்கும் ஏற்ற இறக்கங்கள் முன் சென்றது, தற்காலிகமாகப் பின்வாங்கியது. தவிர்க்க முடியாத சமரசங்கள் ஆகியவைகளின் ஊடே லெனினுடைய நேரானவழிமுறையைக் காணலாம். புரட்சியின் நலன்களையும், தொழிலாளி வர்க்கத்தின்நலன்களையும் உழைக்கும் மக்களின் நலன்களையும் காக்கும் வகையில், லெனின் கொள்கைகளை உருவாக்கினார். அவற்றை நடைமுறைக்குக் கொண்டுவந்தார்.

லெனினுடைய தீர்க்கதரிசனம் குறிப்பிட்ட பிரச்னைகளிலும் பயன் பட்டது. 'கோயல்ரோ' மின்சாரமயத் திட்டம், கூட்டுப்பண்ணை கிழக்கத்தியநாடுகளில் புரட்சி, ஏகாதிபத்திய நாடுகளுடன் மாறுபட்ட உறவு கொள்ளும் சாத்தியக்கூறு ஆகிய அந்தக்காலப் பிரச்சினை எதை வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளுங்கள். எதிர்காலத்தை ஊடுருவிக் காணும் லெனினுடைய திறனை எங்கும் காணலாம்.

### சோவியத் அரசாங்கத்தின் தலைவராக...

பழைய அமைப்பைஅழிக்கும் புரட்சிக்காரர்கள், நல்ல நிர்மாணகர்களாகவும், நிர்வாகிகளாகவும் இருந்ததாக வரலாற்றில் காணவேமுடியாது. இதிலும்கூடலெனின் விதிவிலக்காகவே அமைந்துவிட்டார் சோவியத் அரசாங்கத்தலைவர் என்றமுறையில், அவர் ஈடு-இணையற்ற புதுமைத் தலைவராகத் திகழ்ந்தார். மார்க்ஸின் அளவுக்கு அரசியல் அறிவாற்றல் பெற்ற லெனினுக்கு அரசாங்கத்தலைவர், கட்சித்தலைவர் என்ற முறையில், தனது திறன்களைப் பல்வேறு துறைகளில் பயன்படுத்தும் வரலாற்று வாய்ப்புக்கிடைத்தது.

மக்களின் மதிப்புக்குரிய தலைவராக லெனின் விளங்கினார்; மக்கள் போற்றும் வகையில் அவரது அதிகாரம் அமைந்திருந்தது; மக்கள் கண்மூடித்தனமாக வழிபாடு செலுத்தும் முறையில் அது அமைந்திருக்கவில்லை. கட்சி, தொழிலாளி வர்க்கம் ஆகியவைகளின் ஏற்றுக்கொள்ளப்பட்ட தலைவரான லெனின், தான் முன்வைத்த செயல்களுக்கான முழுச் சொந்தப் பொறுப்பையும் பலசமயங்களில் ஏற்க வேண்டியிருந்தது. 'பதவி விலகுவேன்' என்று கூடப் பயமுறுத்தி, வலுவான நிர்ப்பந்தத்தைக் கொண்டு வந்து, லெனின் முடித்து வைத்த 'ப்ரெஸ்ட் அமைதி உடன்படிக்கை' இதற்கு ஒரு சிறந்தஎடுத்துக்காட்டு.

அதே சமயத்தில், சூழ்நிலையால்மட்டுமின்றிஉறுதியான நம்பிக்கையாலும் லெனின் தனது செயல்களைக் கட்சியின் கூட்டுமுடிவுக்குக் கட்டுப்படுத்திக் கொண்டார்... கோட்பாடுகள் சம்பந்தப் படாத விஷயங்களில்விட்டுக் கொடுத்தார். தவறுகளை நடைமுறை திருத்திவிடும் என அறிந்திருந்த அவர் அவ்வாறு செய்தார். கூட்டுத் தலைமையை லெனின் இவ்வாறு விளங்கிக்கொண்டதால், லெனின் பலம் பெற்றார்; பலவீனம்அடையவில்லை.

மக்களை அறிவதில், லெனினுக்கு இருந்த அரியதிறனைப் பற்றி மாக்ஸிம் கார்க்கி எழுதினார். மனிதர்களுடைய திறமைகளையும், முறைகளையும், பலத்தையும் பலவீனத்தையும் முன் காணும் நுண்ணுணர்வினை லெனின் பெற்றிருந்தார். தான்காண்பவர்களுடைய அரசியல் பரிணாமத்தை அவர் முன் கூட்டியே சொல்லி விடுவார். தரம் அறிந்து பணிகள் தருவதில் அவர் வல்லவர். அந்தக் காலத்திய கட்சித் தலைவர்கள், அரசாங்கத்தலைவர்கள் பலருடைய பண்புகள் பற்றிய கூரிய குறிப்புக்களை அவருடைய கடிதங்களில் காணலாம்.

லெனின் ஒரு பிறவி அரசியல் தலைவர்; இந்தச்சொற்களில் அனைத்தும் அடங்கி விடுகின்றன. தனதுவாழ்வை அர்ப்பணித்துக் கொண்டு புரட்சிகர லட்சியத்துக்கு அதிகப்பலன்கள் கிடைக்கும் வகையில், நிலைமைக்கு ஏற்ப அவர் செயல்பட்டார். தீர்மானம், உறுதிப்பாடு, துணிச்சல், கோட்பாட்டில் உறுதி, நெளிவுசுளிவு, எங்கும் பரவி நிற்கும் மனிதாபிமானம்-மாமனிதர் ஒருவருக்கு உரிய பண்புகள் அனைத்தும் லெனினிடம் இருந்தன.

பன்முகப்பட்ட லெனினுடைய அரசியல்வடிவம் அற்புதமானது. முன்பு நாம் காணாத பல அம்சங்களை அதில் கண்டுகொண்டே இருக்கிறோம். நமது சகாப்தத்தின் சின்னமாக நிற்கும் இந்த மனிதரின் தீர்க்கதரிசனத்தை மேலும் மேலும் காலம் காட்டுகிறது. லெனினுடைய பெருமைவளர்ந்து கொண்டேயிருக்கிறது!

—ஃயோதர்-பர்லாத்ஸ்கி

"லேடன்" LEYDEN
தயாரிப்புகள்
★ பெனியன்
★ ஸ்போட் சேட்
★ ரி சேட்
★ ரெறி சேட்
★ ரெறி பிளவுஸ்
★ பேபி வெஸ்ட்
★ கால்மேஸ்
(Nylon & Cotton)
லேடன் காமென்ஸ்
74A, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.
போன்: 330

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




# கானகத்துத் தேவதை [6]

இதெல்லாம் கண்ணனுக்கு எங்கே புரியப்போகிறது? அவளின் பிடிதளர்த்தப்பட்டமையால் ஓடிவிடலாமென்ற எண்ணத்துடன் ஓடமுயன்றான். ஆனால் அவள் அவனின் நோக்கைப் புரிந்தாளோ இல்லையோ ஓடிவந்து கண்ணனின் கையைப் பற்றினாள்- கண்ணனுக்கு இவளின் போக்குப் புரியாத தொன்றாகவிருந்தது. ஆனால், இவளின் போக்கிலிருந்து இவள் ஒரு தேவதையாகத்தானிருக்கவேண்டுமென்று கண்ணன் ஊகித்துக்கொண்டு கண்ணன் பக்கம் திரும்பி கண்ணனை இறுகப்பிடித்தாள். பிடித்தவள் கண்ணனை அப்படியே தூக்கி மலைச்சாரலில் நின்றவாறு 'தொப்' பென்று வீசியெறிந்தாள் கருங்கடலில் வீசியெறிந்தவள் அவ்விடத்தில் நில்லாது ''குய் குய்'' யென்று கத்திய வண்ணம் அவ்விடத்தை விட்டு கடும்வேகமாக மலைமாறி மாறி வானூர்தியாக ஓடி மறைந்தாள். 'காடேறி' யென்னும் தேவதை.

அங்கே அவன் கண்ட காட்சி மிகவும் உயர்ந்தடதில் வியப்பில்லை. அவனை அறியாமலே கண்ணீர் தாரை தாரையாகப் பெருகியது. பெருகும் கண்ணீரைத் துடைத்தவண்ணம் அவளைத் தொடர்ந்து சென்றுகொண்டிருந்தான், பசி அவனை வாட்டியது. ஒருவேளை இவள் எனது தந்தையிருக்குமிடத்திற்குத்தான் அழைத்துச் செல்கின்றாளோ என நினைக்கும்பொழுது அவன் உள்ளம் மகிழ்ச்சிக் கடலில் மிதந்தது. அவளோ கால் போன போக்கிலே போய்க்கொண்டிருந்தாள். திடீரென அவளுக்குமுன் வந்த பயங்கரக் கொம்பன் யானை அவளை எதிர்க்காது பின் வாங்கியோடியது. நல்ல காலம் தப்பினேன் என்று எண்ணியவனாய் கண்ணன் அவளைத்தொடர்ந்துகொண்டிருந்தான்.

கண்ணனை இழுத்து வந்தவள் திடீரென வெகுண்டாள். கண்ணனை ஏற இறங்கப் பார்த்தாள். பின் ஏதோவெல்லாம் சொல்லிச் சிரித்தாள். அங்குமிங்கும் பார்த்து அவள் திடீரென கரிய தோற்றம், அகண்ட பெரும் விழிகள் நீண்ட கைகளில் ஈட்டியெனவளர்ந்திருக்கும் நகங்கள், உடலெங்கும் கட்டுக்கடங்கா ரோமம், யானையின் தந்தம் போல் நீண்டு வளைந்திருக்கும் பற்கள் வாயைவிட்டு இருபக்கமும் வளர்ந்திருந்தன. பார்வைக்குப் பயங்கர ராட்சதன் போல் காட்சியளித்தது அவ்வுருவம். அவ்வுருவத்தை கண்டு கண்ணன் இருகைகளையும் எடுத்து அடக்கமாக என்னையொன்றும் செய்யவேண்டாமென்று கும்பிட்டான். ஆனால் அவனோ வெகுண்டான். ''ஆ ஆ... ஊ ஊ'' வென்று இரு கைகளையும் மேலே தூக்கிப் பலமாகச் சத்தமிட்டான். கடல் மண்ணை வாரிவாரி அள்ளி வீசினான். பின் கண்ணனை கோழிக்குஞ்சைத் தூக்கிச் செல்லும் பருந்து போல் தூக்கிக்கொண்டு வேகமாகப்பாய்ந்துபாய்ந்துஓடினான் அப்பயங்கர ராட்சதன்.

(தொடரும்)

— க. கனகலிங்கம் —

மக்களின் மனதை பலப்பல விதங்களில் மகிழ்ச்சியடையச் செய்கிறது, பல அரிய சாதனங்கள். அவ்வரிய சாதனங்களைச் செய்ய அடிக்கோலாக இருக்கும் மூலப்பொருள் எதுவெனில் இசை என்னும் சங்கீதமேயாகும்.

இசையின் இன்பத்தைக் கேட்டு மகிழ்ச்சியடையாதோர் ஒருவருமே இல்லை. விலங்கினங்களும், புள்ளினங்களும், நீர் வாழ்வனவும்கூடக் கீதத்தின் இசையைக் கேட்டு மகிழ்ச்சி என்னும் வெள்ளத்தில் மூழ்கிவிடுகின்றன. கீதம் மனிதனின் உடலை முயற்சியுறச் செய்கிறது உள்ளத்தை உருக்குகிறது. ஊக்கத்தை அளித்து உற்சாகத்தைக் கொடுக்கிறது.

பண்டைக் காலத்திலே இசையைப்பற்றிய கதையொன்று உண்டு. ஒருநாள் ஒருபெண் பரண்மேல் ஏறிக்கொண்டு இசை பாடிக்கொண்டிருந்தாள். அங்கே தினைக்கதிரைக் கொய்ய வந்த யானை அக்கதிரையும் உண்ணமல் அப்பெண்ணின் இசையைக்கேட்டு மகிழ்வடைந்து சொக்கிப்போய் நின்றது என்று கதை கூறுகிறது.

தேனினும் இனிய செந்தமிழை இசையால்பாடி மன்னரையும் மக்களையும் மகிழ்வு படுத்திய பெருமை பழைய பாணர்கள், புலவர்களுக்கு உரியது என்பதை

# இசை இன்பம்

ஏ. மொடிஸ்டா பாக்கியநாதன் நாவலப்பிட்டி

நூல்கள் வாயிலாக அறிகிறோம். இன்னும் நாம் சிறு தொழிலைச் செய்யும்போது கூட, ஏலோ, ஏலோ என்று பாடிப்பாடி அத் தொழிலை நன்குறச்செய்ய இசை எமக்கு இன்பத்தையளிக்கிறது.

ஒருவன் மரணம் அடையும்போதும் அவனின் ஆத்மா சாந்தியடைய இசை மூலம் தேவார திருவாசகங்களைப் பாடுகின்றனர். கர்நாடக இசையின் கர்த்தாக்களாகிய மும்மூர்த்திகளைப் பாடித் துதித்தார்கள். அக்காலத்தில் பாரத நாட்டில் அந்தகக்கவி வீரராகவன் என்னும் கண்தெரியாத தமிழ்ப் புலவர் ஒருவர் வசித்து வந்தார். அவர் இசைபாடுவதில் வல்லவர். அவர்தம் மனைவி மக்களுடன் வறுமையால் வாடியதால் எம் ஈழ நாட்டை அடைந்து அக்காலத்திலுள்ள சிங்கள மன்னனின் அரண்மனைக்குவந்து கவிபாடி அரசனையும் பரவசமடையச் செய்து யாழ்ப்பாணத்தைப் பரிசாகப்பெற்றார்.

அருவி வெட்டுபவர்களும் தண்ணீர் இறைப்பவர்களும் பாட்டுக்களை இசைத்து களைப்பைப் போக்கி அயராது உழைக்கின்றனர். யுத்த களத்திற்குப் போகும் போர்வீரரும் இசையின் இனிமையைக் கேட்டு தம் உயிரையும் மதியாது தம் தாய்நாட்டிற்காகப் போர் புரிகின்றனர்.

கற்பனைகள் நமக்குப் புதிய அனுபவங்களை அளிப்பன. அக்கற்பனைகள் மனிதனிடம் பிறக்கப் பிறக்கத் தற்போது மக்கள் பல புதியபுதிய சக்திகளில் ஈடுபட்டு பல நாடகங்களையும், சினிமாக்களையும் இசையின் மூலமே நடித்தும், பாடியும், காட்டி மக்களின் மனதை இசையிலேயே ஈடுபடச் செய்கின்றனர் மக்கள் சோம்பலென்னும் நோய் நீங்கி ஒளி என்னும் எதிர்காலத்தை இசையின்மூலம் தேடிக் கொள்கிறார்கள்.

இன்னும் இவ்விசையை கல்வியழகு, சொல்லழகு, உடையழகு, குணவழகு, முகவழகு என்னும் அழகோடும் ஒப்பிடலாம். ஏனெனில்இவ்வழகினை ஒவ்வொன்றாய் வகுத்தும் தொகுத்தும்யாம் ஆராய இவ்விசை உபயோகமளிக்கின்றது. அதை வளர்க்க வேண்டும்; மக்களை அறிவுடையோராகச் செய்யவேண்டும் இசையை நாம் அனுபவித்து இன்பம் அனுபவிப்பது போல மற்றவர்களுக்கும் சிறந்த பாட்டுக்களை இசைத்து, அவர்களையும் இன்பமுறச் செய்வோமாக.

# இந்த நூற்றாண்டில் நாம் கண்ட மாபெரும் தலைவர்

நெடுந்தீவு
**லக்ஷ்மன்**

அராஜகம் நிறைந்த ஆட்சியாளரின் பயங்கரப் பிடியிலிருந்து தமது இனத்தையும் தமது நாட்டையும் பாதுகாத்து அவர்தம் சுதந்திரத்தையும் உரிமைகளையும் நிலைநாட்டக்கூடிய தியாக உணர்வுபடைத்தவர்கள் ஆயிரமாயிரம் ஆண்டுளுக்கு ஒருமுறை உலகில் தோன்றி மறைந்துள்ளதை வரலாறுகள் மூலம் நாம் அறிந்துள்ளோம். அதே போன்று தமிழினத்தின் இந்த நூற்றாண்டின் மாபெருந் தலைவராக, தியாகியாகத் தோன்றியவர் அறிஞர் அண்ணா அவர்களென்பதை எவரும் மறுக்க முடியாது.

காஞ்சிநகரில் ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்த அவர் பிற்காலத்தில் ஒரு தலைசிறந்த எழுத்தாளராகவோ, பேச்சாளராகவோ அரசியல் மேதையாகவோ, திகழ்வாரென எவரும் எதிர்பார்த்திருக்கமாட்டார்கள். ஆனால் சிறுவயதுமுதல் அவருக்குக் கல்வியிலிருந்த ஆர்வமும் எதையும் அலசி ஆராயும் திறமையுமே பிற்காலத்தில் அவரொரு மேதையாகவும், அரசியல் ஞானியாகவும் விளங்க வழிசெய்தது எனலாம். கல்லூரி வாழ்வில் தனது திறமையை வெளிப்படுத்தி மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் பெருமதிப்பைப் பெற்றிருந்த அவர் ஒருமுறை கல்லூரி ஆண்டுமலரில் எழுதியிருந்த 'Moscow Mob Parade' என்ற ஆங்கிலக் கட்டுரையைப் பார்த்த ஆசிரியர்கள் தாங்களே புரிந்துகொள்ள முடியாத அளவிற்கு அண்ணாவின் சிறந்த அழகிய ஆங்கிலநடையைக்கண்டு வியப்புற்றனரென்றால் அவரின் திறமைக்கு வேறு சான்றே தேவையில்லையெனலாம். அன்றியும் கல்லூரியில் அவர் நிகழ்த்திய 'தீண்டாமை கூடாது', 'சாதிஒழியட்டும்' 'கலப்பு மணம்' என்னும் தலையங்கங்களைக் கொண்ட பேருரைகளைப் புகழாதவர் எவருமில்லை.

இளமையிலிருந்தே மக்கள் அனைவரும் உயர்வு - தாழ்வு என்னும் பேதங்கள் நீங்கி வாழவேண்டுமென விரும்பிய அவர் தீண்டாமையை ஒழிக்கப் போராடியதுடன் தமிழக முதல்வரானதும், கலப்பு மணம் செய்வோருக்குத் தங்கப் பதக்கங்களைப் பரிசளித்தும் அவர்களுக்கு வேண்டிய இதர சலுகைகளை அளித்தும் நம்மிடையே காணப்படும் சாதிவெறியைச் சிறிது சிறிதாக விரட்டியடிக்க உழைத்ததாம்.

நம்மிடையேயுள்ள பேதங்கள்நீங்க உழைத்த அவர் சர்க்காரின் பிடியில் சிக்கிச் சீரழிந்துவரும் தமிழ்மொழி

(14-ம் பக்கம் பார்க்க)

## பிறந்த நாள் கொண்டாடினர்



வண்ணார்பண்ணை சிவதாசன் - ராஜேஸ்வரி ஆகியோரின் செல்வப் புதல்வி விநோதினி தமது பிறந்த நாளைச் சிறப்பாக கொண்டாடினர். இவர் 'ஈழநாடு' நடத்திய 10-வது ஆண்டு நிறைவு விழா விநோத உடைப் போட்டியில் ஆறுதல் பரிசு பெற்றவர்

## ஆங்கில . .

(10ம் பக்கத் தொடர்ச்சி)

டல்செய்யும்பாணியை அவர் நாவல்களில் காணலாம். சில கட்டங்கள் உணர்ச்சிக் கனிவு மிகுந்தவை. சோகமயமான உணர்ச்சியை தூண்டிவிடும் சம்பவங்களை சித்தரிப்பதில் அவர் சமர்த்தர். துன்பமும், சோகமும் நிறைந்த ஒரு பயங்கர உலகை காட்டும் அதேவேளை, மனித பலஹீனங்களை நையாண்டி செய்து வாய்விட்டுச் சிரிக்கும் அளவுக்கு நகைச்சுவையைத்தூண்டிவிடும் அபாரமான ஆற்றலும் அவருக்குண்டு

அவர் படைத்த பாத்திரங்களோ ஜீவத்துடிப்புள்ளவை. நிதர்சனமானவை. அவரது பாத்திரங்கள் மனித குணதிசயங்களை பிரதிபலிக்கும் சொற்களாக இன்று ஆங்கில மொழியில் உபயோகிக்கப்பட்டுவருகின்றன. இது அவரது சிருஷ்டி ஆற்றலுக்கு எடுத்துக்காட்டு.

கதையைச் சுவையாகக் கொண்டுசெல்வதற்கு உணர்ச்சிமயமான அதாவது உணர்ச்சிக் கனிவு செறிந்த கட்டங்களை அவர் சிருஷ்டித்துவிடுவதால், நாவல்களின் கட்டுக்கோப்பு தொய்ந்துபோவதாக விமர்சகர் கூறுவதுண்டு. இதில் ஓரளவு உண்மை இருக்கத்தான் செய்கிறது. வாசகர்களை உணர்ச்சி வசப்படுத்துவதில் டிக்கன்ஸ் பெரிதும் ஆவல் காட்டத்தான் செய்தார். கடைசி காலங்களில் தமது நாவல்களை மக்கள் மத்தியில் அவர் வாசித்துக் காட்டி சோக மயமான கட்டங்களின்போது, கேட்போர்கண்ணீர் வடிப்பதைக் கண்டு அவர் ஆனந்தமடைந்து வந்தார்.

சென்ற நூற்றாண்டு காலத்தில் சாதாரண மக்களால் விரும்பி வாசிக்கப்பட்ட எழுத்தாளர்களில் டிக்கன்ஸ் முதன்மையான இடத்தை வகிக்கிறார். வாழ்க்கையை அப்படியே படம்பிடித்துக் காட்டும் அபார சிருஷ்டி ஆற்றல் அவரிடம் இருந்தமையால்தான் அவர் இன்றும் ஒரு ஜனரஞ்சக எழுத்தாளராக விளங்குகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கியத்துக்கு . . .

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

திராவிடர், ஆரியர் பற்றிய அரிய தகவல்கள் வெளிப்படலாம் என்றும் கூறப்படுகிறது இதற்கு உதாரணமாக தேவரும், அசுரரும் மந்தாகினி மலையை மத்தாகவும், வாசுகி என்ற பாம்பை நாணாகவும் கொண்டு பாற்கடலைக் கடைந்த பிரபலமான செய்தியை எடுத்துக்கொள்ளலாம் இதனை ஆழ்ந்து சிந்திக்கும்போது, இக்கதை முழுதும் ஒரு கடற்பயணத்தைக் குறிப்பதை அறியலாம். இதிலுள்ள மலை கப்பலையும், நாண் அதைப் பிணித்த கயிற்றையும் சுட்டுவதாகக் கொள்ளலாம். பாற்கடல் என்பது தற்போதுள்ள செங்கடல், வெண்கடல்போல ஏதாவது ஒரு கடலாக இருக்கக்கூடும். கடலைக் கடையும்போது தோன்றிய நஞ்சு பெரும் புயலொன்றாகலாம். தேவரும். அசுரரும் எதிரிகளாயினும் ஒன்று சேர்ந்தமை பொது நன்மை கருதியாகவேண்டும். எனவே பயங்கரமான தொற்று நோய் ஒன்றுக்குரிய மருந்தைக் கண்டுபிடிக்க ஏற்பட்ட கடற்பயணம் இதுவெனலாம். மத்திய கிழக்கின் வரலாற்றிலும் கடற்பயணமொன்றைப்பற்றிய குறிப்புண்டாதலின் இவ்விரண்டும் ஒன்றேயாகவுங் கூடும். எனவே இதுபற்றிய ஆய்வு பாற்கடல் எங்கே உளது, பெருங்கடற் பயணம் எப்போது நிகழ்ந்தது. தேவர், அசுரர் என்போர் யாவர் எனும் அரிய தகவல்களை வெளிப்படுத்தும்.

ஆகவே, தமிழிலக்கியங் கூறும் செய்திகளைப்பற்றிய நுண் ஆய்வு அவற்றுக்குத் தற்போது போர்த்தப்பட்டுள்ள சமயப் பண்பினைப் பெருமளவுக்கு விலக்கிவிடக் கூடும். அந்நிலையில் தமிழிலக்கியக் கல்வி ஐரோப்பிய வரலாறு, பிரித்தானிய வரலாறு என்பனபோல ஆசிய நாட்டு வரலாற்றுக் கல்வியாகவும் அமையும்.

அடுத்ததாக, இலக்கியமானது எத்தகைய பொருள்களையும் பற்றிக் கூறலாம். அப்பொருள்களை என்னென்ன இலக்கிய வடிவங்களில் எவ்வெவ்வாறு கூறப்பட்டுள்ளன என்பதே முக்கியமாகும். எனவே தமிழிலக்கியங்களைப்பற்றிய அடிப்படை அறிவுள்ள எவரும், அவற்றிற் கூறப்படும் பொருள்கள் எத்தன்மைத்தாயினும், எச்சமயத்தினவாயினும் சுவைக்கவியலும். சிலப்பதிகாரம், கம்பராமாயணம் போன்ற காவியங்களை அறியாமல் சீறாப் புராணம், தேம்பாவணிபோன்ற இலக்கியங்களைச் சரிவரச் சுவைக்க முடியாது. எனவே இலக்கியப் பொருள் எச்சமயத்ததாயினும், அவ்விலக்கியங்களைக் கற்பதால், படிப்போர் அவ்வச் சமயக் கருத்துக்களால் கவரப்பட்டுத் தத்தஞ் சமயங்களைப் புறக்கணிக்கும் நிலை ஏற்படலாம் என்ற அச்சம் அர்த்தமற்றது. சைவசமயத்துக்காகப் பெரிதும் உழைத்தவரான ஆறுமுகநாவலர் பைபிளைத் தமிழில் மொழிபெயர்த்தவர் என்ற செய்தி எம்மிற் பலர் அறியாதவொன்றன்று. மேலும் ஒரு குறிப்பிட்ட சமய இலக்கியங்கள், மற்றச் சமயக் கலாச்சாரங்களைப் பாதிக்கும் என்று கூறுவது சமயங்களை அனுஷ்டிப்போர் உள்ளங்களில் உறுதி இன்மையையே தெளிவாக்குவதாகும்.

ஆகவே சைவம், இஸ்லாம், கிறிஸ்தவம் என்னும் மும்மதத்தாரிலும் தமிழைத் தாய் மொழியாகக்கொண்ட தமிழ் மக்கள் வாழும் சூழலில்-அம்மூன்று மதத்தாருமே தமிழுக்காக அருந்தொண்டாற்றியுள்ள மரபின் மத்தியில், தமிழிலக்கியத்தில் சமயபேதம் பாராட்டும் நிலை வரவேற்கத்தக்கதன்று. சமயபேதமின்றி எல்லாச் சமய இலக்கியங்களையும் சமமாகப் போற்றும் நிலை உருவாகவேண்டுமென்பது சிறுபான்மையினராகிய தமிழரதும், தேசீய ஒற்றுமையினதும் நலனைக் கருதிய உடனடியான தேவையாகும்.

# இந்த நூற்றாண்டின்

(13-ம்பக்கத் தொடர்ச்சி)

யினதும், தமிழ் மக்களினதும், தமிழ் நாட்டினதும் உரிமைக்குப் புத்துயிர் பெறக்கூடியதான மத்திய அரசுக்கெதிரான போராட்டங்களைப் பொதுமக்கள் அனைவரும் ஒன்று திரண்டு நடாத்தவேண்டியதன் அவசியத்தை இலகுவாகவும் தெளிவாகவும் மக்களுக்கு எடுத்துக்கூறிச் சுதந்திரத்தின் முக்கியத்துவத்தை விளங்க வைத்தார்.

பெரியாரின் திராவிடக் கழகத்திலிருந்து பிரிந்த அவர் திராவிட முன்னேற்றக்கழகத்தை அமைத்துப் பெரியாரே வியக்கும்வகையில் 1953-ல் கைத்தறி நெசவாளரின் துயர் களையவும், ஆச்சாரியார்கள் குலக்கல்வித் திட்டத்தை எதிர்த்தும் தென்னாட்டில் வடநாட்டு ஆதிக்கத்தின் சின்னங்களாக விளங்கும் கிராமங்கள், பொதுநிலையங்கள் ஆகியவற்றின் பெயர்கள் மாற்றப்படவேண்டுமென எடுத்துரைத்து, அதற்கு முதற்படியாக டால்மியாபுரம், கல்லக்குடிப் போராட்டம் என மும்முனைப் போராட்டங்களை நடத்தினர். 17 ஆண்டுகளுக்குமுன்னர் டால்மியாபுரம், கல்லக்குடியாக மாறவேண்டுமெனக் கலைஞர் கருணாநிதியின் தலைமையில் அவர்நடாத்துவித்த போராட்டம் இன்று வெற்றியடைந்தநேரத்தில் அதைக்கண்டு [illegible]ளிக அறிஞர் அண்ணநம்மிடையே இல்லையாயினும் அவரது வரலாற்றில் இதுவொரு மறக்கமுடியாத சம்பவமாகும்.

மூவேந்தராட்சிக்குப் பின் 'மதருஸ் ஸ்டேட்' எனவழங்கப்பட்டுவரும் தென்னாட்டைத் 'தமிழ்நாடு' என மாற்றியமைத்த அண்ணா அவர்கள் 'இந்தி ஆட்சி மொழி மசோதா பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டபோது தீவிரமாக எதிர்த்துநின்ருர். இந்தித் திணிப்பில் ஏற்படவிருக்கும் ஆபத்தை அவரின் உணர்ச்சிமிக்க உரைகளிலிருந்து அறிந்த தமிழகமக்கள் அவரின் தலைமையில் அசைக்க முடியாத நம்பிக்கையுடன் ஆதிக்க வெறியர்களினதும் வகுப்புவாதிகளினதும் தீவிர முயற்சியான இந்தித்திணிப்புக்கு எதிராக ஒரேகொடியின்கீழ் திரண்டு உயிர்களைப் பணயம் வைத்துப் போராட்டம் நடத்தினர்,

வாழ்நாள் பூராவும் தனது நாட்டிற்காகவும், மொழிக்காகவும், மக்களின் வளமிக்க வாழ்வுக்காகவும் அயராது உழைத்ததன்மூலம் 1967-ல் தமது முதல்வராக அறிஞர் அண்ணாவைத் தமிழக மக்கள் தேர்ந்தெடுத்தனர். அவர் முதல்வரானதும் தன்னைப் பதவியிலமர்த்திய மக்களுடனும் எதிர்க்கட்சியினருடனும் நெருங்கி உறவாடி அவர்களின் ஒத்துழைப்புடன் தமிழ்நாட்டில் திறமைமிக்க ஒரு [illegible]வாகம் ஏற்படப் பணியாற்றினர்.

தமிழன்னையின் தவப்புதல்வனாக, சமுதாயச்சிற்பியாக, பாட்டாளியின் காவலனாக, ஒப்பற்ற அரசியல் மேதையாக ஒவ்வொரு தமிழனின் இதயத்தோடு இதயம கக்கலந்துவிட்ட இந்த நூற்ருண்டின் மாபெருந் தலைவரான அறிஞர் அண்ணாவின் முதலாவது சிரார்த்ததினமான கடந்த 3-ம் திகதி தமிழ்மக்கள் தமது ஒப்பற்ற தலைவரை நினைவுகூர்ந்து [illegible]

## குரங்கு மோப்பம் பிடிக்கும்

திருடர்களைப் பிடிப்பதற்கு நாய்கள் உதவி செய்கின்றன. கொலையாளிகளையும் பிடிக்கின்றன. திருடர்களின் பாத அடிகளை மோப்பம் பிடித்து திருடர்கள் வெகுதூரம் சென்ருலும், ரயில்மூலமாகச் சென்றிருந்தாலும் திருடர்களைப் பிடிக்கின்றன. இதுபோலக் குரங்குகளும் மோப்பம்பிடிக்கின்றனவாம். நாய்களுக்கு அடுத்தபடியாக குரங்குகள்தான் மோப்பம் பிடிப்பதில் நிகராக உள்ளனவாம்.

# பழனிமலை

(7ம் பக்கத் தொடர்ச்சி)

வருக்கு முதல் தடவையாக பொன்னாடை போர்த்திக் கௌரவித்தது, கோவை மாவட்டத்தைச் சேர்ந்த பவானி திருமுறைக் கழகத்தார். கடந்த 28 ஆண்டுகளாக ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு சிறந்த கலைஞர்களுக்கு இந்தக் கழகத்தினர் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தனர். 29 வது ஆண்டான இவ்வாண்டு. சிறந்த கலைஞராக கைதடிப் பழனிமலையைத் தெரிந்தெடுத்து, விலைமதிக்க முடியாத பொன்னாடை போர்த்தி, பாராட்டு வழங்கியது

திருமுருக கிருபானந்த வாரியார் இந்த விழாவில் கலந்துகொண்டு பழனியைப் பாராட்டினர். ''கலைத்துறையில் தமிழகத்துடன் போட்டி போடக்கூடிய விதத்தில் பழனியைப்போன்ற கலைஞர்கள் ஈழத்தில் மேலும் பலர் தோன்ற வேண்டும்''

பழனியைக் கௌரவிப்பதற்காகக் கூடிய இந்த விழாவில் தமிழறிஞர் கி. வா. ஜ. போன்றவர்களும் பாராட்டுரை வழங்கினர். சீர்காழி கோவிந்தராஜனும் பாராட்டினர்.

நடப்பது கனவோ என்றுகூட அப்போது எண்ணிஞராம் பழனிமலை. பொன்னாடையை அவருக்கு அங்கு போர்த்தியபோது, ஏதோ என்றுமில்லாத ஓர் உலகில் மிதப்பதுபோன்ற உணர்வுதான் ஏற்பட்டதாம்.

''என்னை ஒதுக்குவதற்குப் பலர் கங்கணம்கட்டிக் கொண்டிருக்கிருர்கள். ஆனுல் எனக்கு எவர்மீதும் கோபமில்லை. அவருடன் சேர்ந்துவாசிக்கமாட்டேன். இவருடன் வாசிக்கமாட்டேன் என்ற கொள்கை எனக்குக் கிடையாது: யாருடனும் எந்நேரத்திலும் நான் சேர்ந்து வாசிக்கத் தயாராக இருக்கிறேன். எனக்குப் போட்டி பொருமை கிடையாது'' என்று கூறிக்கொள்ளும் பழனிமலை பழகுவதற்கு இனியவர்! மூன்று பெண் குழந்தைகளுக்கும், இரு ஆண்குழந்தைகளுக்கும் தந்தையான இவர் அடக்கமாகக் குடும்பம் நடத்துகிருர்.

அவரிடம் இருப்பது: திறமை; இல்லாதது: தலைக்கனம்.


ராஜா (யாழ்ப்பாணம்) (தினசரி 3 காட்சிகள்)
ரவிச்சந்திரன் - ராஜஸ்ரீ நடித்த
பிரிபோயா, போயா 4 காட்சிகள்
டில்லி மாப்பிள்ளை

ஸ்ரீ காலிங்கன் இணுவில்
தினசரி 6-30 9-30
பிறிப்போயா, போயா 2-30 மணி
ஜெமினி — ராகினி நடித்த
ஏழைப்பங்காளன்

வல்வெட்டித்துறை
றஞ்சனு தியேட்டர்
தினசரி: 6-30, 9-30
ஜெமினி — சாவித்திரி நடித்த
ஹலோ மிஸ்டர் ஜமீன்தார்

MANOHARA
JAFFNA
Daily 4-45, 7 & 9-45 p.m
PrePoya, Poya 4 Shows
Don Murray,
Dornald Houstan
THE VIKING QUEEN
(color) (20th centuary
Fox present)

வெஸ்லி சினிமா
மானிப்பாய்
தினசரி: 6-30, 9-30
பிரிபோயா,போயா 2-30மணி
எம்.ஜி.ஆர்-சரோஜாதேவி நடித்த
பெரிய இடத்துப் பெண்

REGAL JAFFNA
Daily 10-30 4-45, 7 & 9-45
Jim Brown, Diahann Carroll
in
THE SPLIT
(adults only)

ராணி (யாழ்ப்பாணம்) [தினசரி 3 காட்சிகள்]
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
அசோகன் - சோ - சந்திரபாபு நடித்த
அடிமைப் பெண்

கெப்பிட்டல் (கொழும்பு)
பிளாஸா (வெள்ளவத்தை)
வெலிங்டன் யாழ்ப்பாணம்
தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி.
தமிழ்நாட்டில் மக்கள் மத்தியில் புதிய சாதனையை ஏற்படுத்திய மாபெரும் வண்ணத்திரை ஓவியம்.
1968-ம் ஆண்டின் சிறந்த படத்திற்குரிய ஜனுதிபதியின் பிராந்தியப் பரிசு பெற்று
''பேசும்படத்தின்'' மூன்று விருதுகள் பெற்ற வெற்றிச்சித்திரம்
(1) சிறந்த படம் (2) சிறந்த நடிகர் (சிவாஜி)
(3) சிறந்த உபநடிகர் (பாலையா)
நாதஸ்வர இசை:
மதுரை சேதுராமன் - பொன்னுச்சாமி சகோதரர்கள்




சிவாஜிகணேசன் பத்மினி
பாலையா
நாகேஷ்
நம்பியார்
ஏ.வி.எம். ராஜன்
மனேரமா
மற்றும்பலர் நடித்த
சிவாஜிகணேசன் [அளிக்கும்]



ஸ்ரீ விஜயலக்ஷ்மி பிக்சர்ஸ்
தில்லானு மோகனும்பாள்
திரைக்கதை, வசனம், டைரக்ஷன்
A. P. நாகராஜன்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### நன்றி நவில்தல்

சென்றமாதம் 28-ந்திகதி எங்கள் இருவருக்கும் நடந்தேறிய திருமண வைபவத்தில் நேரில் கலந்து ஆசீர்வதித்தும், அன்பளித்தும், இன்னும் பிறவூர்களிலிருந்து வாழ்த்துச் செய்திகள் அனுப்பிய உற்றார் உறவினர், அன்பர்கள் சகலருக்கும் எங்கள் அன்புகலந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம் அ. சேனாதிராசா, காயத்ரி சேனாதிராசா, திருமணத் தம்பதிகள் 38, கல்லூரிவீதி, நீராவியடி. 1840

### தேவை

எல்லாவகையான இன்ஜெக்டர் பம்ப், இன்ஜெக்டர்ஸ் முதலியவற்றை All typesof Injector Pump-Injectors) திருத்தங்கள் செய்வதில் குறைந்தது 3வருட அனுபவமுள்ளவர் விரும்பத்தக்கது. விண்ணப்பிப்போர் பிணைப்பணம் கட்டக்கூடியவர்களாகவோ அல்லது தகுந்த அத்தாட்சிப்பத்திரங் (Letter of Guarantee)களைச் சமர்ப்பிக்கக்கூடியவர்களாகவோ இருத்தல் வேண்டும். சம்பளம் முன் அனுபவத்தைப் பொறுத்துக் கொடுக்கப்படும்

நேர்முகப் பரீட்சை இம்மாதம் 15ந் திகதி தொடக்கம் 28-ந்திகதிவரை கீழ்க்கண்ட விலாசத்தில் நடைபெறும்.

நஷனல் டீசல் என்ஜினியர்ஸ், 109, சிவன் கோவில் வடக்குவீதி. யாழ்ப்பாணம். 1828

ஆண்கள் அல்லது பெண்கள் யாழ்ப்பாண ஸ்தாபனத்திற்கு — க. பொ. த. வில் ஆங்கிலம், கணித பாடங்களும், 25 வயதுக்குட்பட்டவர்கள் கட்டிடப் பகுதி, படம் அல்லது கணக்குப்போடும் அனுபவம் உள்ளவர்களும், பழக விரும்புவோரும் இம்மாதம் 20-ந் திகதிக்குமுன் விண்ணப்பிக்கவும். விளம்பர இலக்கம்: 1824, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 1824

யாழ்ப்பாணம் பெரிய கடையில் நன்முறையில் இயங்கும் ரேடியோ திருத்தலும், உதிரிப்பாக விற்பனையும் செய்யும் ஸ்தாபனத்திற்கு [பில் கிளார்க்] லிகிதர் பதவிக்கு 20—30 வயதிற்கு உட்பட்ட பெண் பாலர் மட்டும் தனது சொந்தக் கையெழுத்தில் ''ஆங்கில அறிவுமுக்கியம் யாழ்ப்பாணம் வசிப்பிடமாக உள்ளவர் விரும்பத்தக்கது''. விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 1830 ஈழநாடு மேற்பார்த்து யாழ்ப்பாணம். 1830

வீடு

தெல்லிப்பழையில் யூனியன் கொலிச் பாடசாலைக் கருகாமையில் அல்லது புது ஆஸ்பத்திரிக்கருகாமையில் ஒரு வீடுதேவை. தொடர்பு கொள்ளவும். விளம்பரஇல: 1839 C/oஈழநாடு. யாழ்ப்பாணம். 1839

பேக்கரித் தொழிலில் அனுபவம் வாய்ந்த பேக்கர் தேவை. சம்பளம் எல்லாம் உட்பட 125/-ரூபா கொடுக்கப்படும் அத்துடன் 20 வயதுக்குட்பட்ட ஒரு பையனும் தேவை. எல்லாவிபரங்களுக்கும் உரிமையாளர்: தாஸன் பேக்ஹவுஸ், கீரிமலை வீதி பண்டத்தரிப்பு என்ற விலாசத்திற்கு நேரடியாக தொடர்புகொள்ளவும். 1845

### விற்பனைக்கு

காணி

2 பரப்பு குடிநிலம், புரோசனத்துடன், 91/A பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். தொடர்பு: இராசரத்தினம், வழக்கறிஞர், லெப்பிரகாசம் ரோட்டு, வண்ணார்பண்ணை 1844

# வீட்டுக்கொருவர் முன்வரும்....

3-ம் பக்கத் தொடர்ச்சி)

நெருப்புக் காய்ச்சல், செங்கமாரி, மலேரியா, மேகநோய் ஆகியநோய்களாற் பீடிக்கப்படாத ஆண்களும் பெண்களும் இரத்ததானஞ் செய்யலாம். இப்படியான ஒருவர் மூன்றுமாதத்திற்கு ஒரு தடவை மீண்டும் மீண்டும் இரத்ததானம் செய்யலாம். இந்நாள்வரையிலான ஆராய்ச்சிகளின்படி இரத்ததானம் செய்யும் எவர்க்கும் எக்காலத்தும் எவ்வித தீங்கும் நேரவில்லை என்பதையும் அறுதியிட்டுக் கூறியுள்ளனர். தானம் செய்வதற்கு முன் பிருந்ததைப் போன்றே இரத்தத்திலுள்ள வெள்ளை, சிவப்பு அணுக்களின் நுண்ம எண்ணிக்கைத்தரம் தானம் செய்தபின்பும் சாதாரணமாக இருப்பதாகவும் உறுதி கூறுகிறார்.

### நன்மை பயக்கும்

இரத்ததானம் செய்பவர்கள் இரத்தத்தை இழப்பதனால் தாம் தமக்குப் புதிய இரத்தத்தை உண்டு பண்ணிக் கொள்வதுமன்றி இரத்தத்தை உண்டுபண்ணும் உறுப்புக்களுக்கும் அப்பியாசத்தை அளிப்பதனால் உடலைப் பொதுவாகச் சீர்ப்படுத்திக் கொள்ளவும் முடிகிறது. இன்னும், இரத்ததானம் செய்பவர்கள் வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவதால் அவர்களுக்கு ஏதாவது நோய் இருப்பின் அது கண்டு பிடிக்கப்பட்டு உடன் சிகிச்சை அளிக்கப்படுகின்றது.

சாதாரண உணவை உண்ணும் ஒருநபர் தாம் தானம் செய்த இரத்தத்தை இரண்டு வாரத்திற்குள் திருமப உற்பத்தி செய்துவிட முடியும. சாதாரண மனிதரொருவரின் உடலில்10முதல் 12 பைந்து இரத்தம் இருக்கிறது. தானத்தின்போது முக்கால்பைந்திற்கும் குறைவாகவே பெறப்படுகிறது.

### இடமும் காலமும்

இரத்த தானம் செய்ய விரும்புவோர் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் காலை 8 மணி முதல் மாலை 5 மணிவரையும் இரத்ததானம் செய்யலாம். அன்றேல் இருபத்தைந்துக்குக் குறையாத ஒரு குழுவினர் ஒரு குறித்த இடத்தில் இரத்ததானஞ் செய்யவிரும்பினல் பெரியாஸ்பத்திரியிலுள்ளஇரத்த வங்கி வைத்திய அதிகாரிக்கு அறிவித்தால் அவர்மகிழ்ச்சியுடன் அவ்விடத்திற்கு வந்து இரத்தத்தைச்சேகரித்துச் செல்வார்.

**சன்மானம்**

செய்யாமல் செய்த

உதவிக்கு வையகமும் வானகமும் ஆற்றலரிது.

என்பது வள்ளுவன் வாக்கன்றே. ஆயினும் இரத்ததானம் செய்வோர்க்கு உடனேயே பத்துரூபா சன்மானம் அளிக்கப்படுகிறது. இவ்விடயத்தில் அரசினர் முன்னர் கடைப்பிடித்து வந்த ஒரு விதியில், 1968 ஆகஸ்ட் 20 முதல் சிறிது மாற்றம் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. முன்னர் சன்மானப் பணத்துடன் 'தேசிய இரத்தமாற்றுப்பிரயோக சேவை' அட்டைஒன்றும் வழங்கப்பட்டது. இப்போது அட்டை அல்லது சன்மானம் மட்டுமே தானம் செய்வோரின் விருப்பப்படி வழங்கப்படுகிறது. இவ் அட்டை மிக்க பெறுமதி வாய்ந்த ஒன்றாக அரசினரால் மதிக்கப்படுகிறது, எப்பொழுதாவது தானம் செய்தவருக்கு அல்லது அவரது குடும்பத்தவருக்கு இரத்தம் தேவைப்படும்பொழுது எப்படியாயினும் இரத்தம் கொடுக்க உத்தரவாதமளிக்கும் காப்புறுதியாக இது விளங்கும். சகலஆஸ்பத்திரிகளிலும் வெளிநோயாளர் பகுதியில் சிகிச்சை பெறுவதில் முதலிடம் பெற்றுத் தரும் தகுதியுடையது. அந்த அட்டையில் தானம் செய்பவரின் இரத்தம் பற்றிய குறிப்புகள் இடப்பட்டு இருக்கும். ஒருவரின் விரல் அடையாளத்தைப் போலவே இதுவும் தனிச் சிறப்பு வாய்ந்ததனால் இது ஒரு முக்கிய நடவடிக்கையாகும். இன்னும் இவ் வட்டையானது அரசினர் பாதுகாப்புப் படைக்கலச் சேவைகளில் வேலைவாய்ப்புப் பெறுவதற்கு விசேட தகைமையையும் பெற்றுக் கொடுக்கும் சிறப்பு வாய்ந்துள்ளது.

**அணிதிரட்டி பணிசெய்வோம்**

லட்சக்கணக்கான ரூபாய் பணம் நவீன விஞ்ஞான வைத்திய சாதனங்கள், வைத்திய வல்லுநர்கள், வியத்தகு விந்தை புதும் மருந்துவகைகள், இத்தனையும் இருந்தும் இரத்தம் கொடுக்க முடியாதவரை அதை வேண்டி நிற்கும் உயிரை ஒருபோதும் காக்க முடியாதுபோய்விடுகிறது. இந்நிலையில் கணவனைப் பறிகொடுத்த விதவைகளும் தாயையிழந்து பரிதவிக்கும் பச்சிளம் பாலகர்களும், மைந்தரை இழந்து துயருறும் பெற்றோர்களும் ஆயிரக்கணக்கில் பெருகிவருவதைத்தடுப்பது முடியாத ஒன்று.

எனவே விசேடமாக இளம் இரத்தத்துடிப்புள்ள வாலிப சமுதாயத்தினரின் தாராளமனப்பான்மையையே வைத்திய உலகம் எதிர்பார்த்திருக்கிறது. பாடசாலை மாணவ மாணவியர், முற்போக்குக் கழக உறுப்பினர்கள், விளையாட்டு

(16-ம் பக்கம் பார்க்க)

### விற்பனைக்கு

அச்சுவேலியில் சங்கானை ரோட்டுக்கு அண்மையில் குடியிருப்பு, பயிர்ச் செய்கைக்குப் பொருத்தமான கல் இல்லாத நிலம் 10 1/2 பரப்பு. முழுவதும் வான் பயிரிடப்பட்டுள்ளது. தொழிற்பேட்டை, சந்தை, பாடசாலைகளுக்கு மத்தியான இடம். விலை ருபா 2000 ஒருபரப்பு. கந்தசாமி, ஆசிரிய கலாசாலை, வசாவிளான். 1849

ராசாவின் தோட்டத்தில் நாவலர்ரோட் சந்தியில் முன் பக்கம் பாதை வசதியுள்ள இடத்தில் பனந்தோப்புடனும் கிணற்றுடனும்கூடிய ஐந்தரைப்பரப்புக் காணி உடனடியாக விற்பனைக்கு உண்டு. தொடர்புகொள்ளவும்: 60, புங்கங்குளம்வீதி, தபால்பெட்டி இல. 47, யாழ்ப்பாணம். 1846

வீடும் வளவும்

1. யாழ்ப்பாண நகரம் 2 மாடிவீடு 3 பரப்பு, 7 படுக்கையறை, மெயின் வீதி அண்மை 100,000-150,000 2. பருத்தித்துறை வாடிவீடு ரோட், 2 படுக்கையறை வீடு. 40,000-65,000. 3. நெல்லியடிச்சந்தி, 2 1/2 பரப்பு நிலம், 20,000-30,000 4. அல்வாய் 2 பரப்புக் காணிகள் முத்துமாரியம்மன் கோவில் அப்பால். 5. செங்கலடி— கீழ் மாகாணம் 1 ஏக்கர், மெயின்ரோட், வீடு கட்டும் நிலம், உடன் விற்பனைக்குண்டு. விண்ணப்பிக்கவும். பிறக்டர் மகேசன், 1ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். பிறக்டர் சிவானந்தன், 282, டாம் வீதி, கொழும்பு-12. 1822

### EDUCATION

Undertake part/full time Typing correspondence English and tuition all subjects J.S.C./G.C.E. Jaffna/Tellippalay areas preferred. Apply, S. Narendra kumar, 13, Wyman Road, Jaffna. 1842


மகத்தான புதிய

டேவிட் பிரவுண் 780 செலக்டாமற்றிக்

D B

உங்களுக்கு வழங்கும் சிறப்பான அம்சங்கள்

1. இதன் ரகத்தில் முழுநீள செஸிஸ் உடைய ட்ராக்டர் இது ஒன்றே—டேவிட் பிரவுணின் யூனிற் நிர்மாணிப்பு—இலகுவான துரிதமான பராமரிப்பு.
2. இரட்டை கிளச்சுகள். எல்லா இயக்க வேலைகளிலும் ஹைட்ரோலிக்ஸ் சூட்சுமம் (தரத்தில் சிறந்த இணைப்புகள்)
3. கியர் பெட்டி — நிக்கல் குரோம் முலாமிடப்பட்டது. உலகிலேயே மிகச்சிறந்த கியர்களைத் தயாரிக்கும் டேவிட் பிரவுண் நிறுவனத்தில் தயாரிக்கப்பட்டது.
4. 550 x 16 அளவு முன் டயர்கள். இதன் காரணமாக கூடிய பிரயாசை இல்லாமல் எந்தப் பாதகமான நிலையிலும் ஓட்டிச் செல்லலாம்.
5. எரிபொருள் இன்ஜெக்ஸன் பம்ப் விஷேச இடத்தில் வைக்கப்பட்டுள்ளதால் எவ்வித பாதகமான ஈரலிப்பு சீதோஷ்ணத்திலும் கோளாறு அற்ற சேவையைத் தருகிறது. டீசல் எரிபொருள் மூலம் மலிவு சேவை. இலவச பராமரிப்பு.
6. பிரேக்குகள்—முற்றாக மூடப்பட்ட பிரேக் அமைப்பு. இதனால் ஈரலிப்பான நாட்களிலும் முதல் ரக இயக்கத்துக்கு உத்தரவாதம். நீடிய கால பாவனையையும் தருகிறது.
7. பட்டரியும் எளிதாக எடுத்துப் பரிமாறக்கூடிய விஷேச பீலில் வைக்கப்பட்டிருப்பதால் நீண்ட ஆயுளைத் தருகிறது. உஷ்ண நாட்களில் மின்னறு வாயுமாற்றமும் குறைகிறது.


ரோலண்ட்ஸ் (ட்ராக்டர்ஸ்) லிமிடெட்

103 தர்மபால மாவத்தை கொழும்பு 7.




GPL


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



## மகாத்மா மணிமொழிகள்!

பூவுலகில் நாம் வாழும் வாழ்க்கை பெண்கள் அணியும் உடைந்துபோகிற கண்ணுடி வளையல்கள் மாதிரி நிலையற்றது. ஒரு பெட்டியில் போட்டுப் பத்திரப்படுத்தினுல் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் கூட அந்த வளையல்கள் நிற்கும். ஆனுல் நம்முடைய ஆயுளோ ஓர் இமைப்பொழுதில் அழிந்து போகக்கூடும். ஆகையால் உயிருள்ளபோதே, இப்போதே உள்ளங்களைச் சுத்திசெய்துகொள்ளவேண்டும்.

ஃ ஃ ஃ

சத்தியாக்கிரகம் என்னும் தர்மாயுதம் மனிதனிடத்திலுள்ள கோபம், துவேஷம் முதலிய தீய குணங்களைப் போக்கிச் சாந்தம், அன்பு முதலிய குணங்களைத் தோற்றுவிக்கவல்லது.


முக்கிய வேண்டுகோள்!

1970-ம் ஆண்டு விளம்பர நிதி யாவும் செலவாகிவிட்டதால் தயவுசெய்து விளம்பரம் கேட்டு சிரமம் தரவேண்டாமென்று அன்புடன் கேட்டுக் கொள்கிருேம்.

மில்க் வைற் சோப் தொழிற்சாலை

யாழ்ப்பாணம்.


# 'இராணுவ முகாமை உடனே மூட வேண்டும்'

## ஊர்காவற்றுறை எம். பி பிரதமருக்கு வற்புறுத்தல்


ஈழநாடு

யாழ்ப்பாணம் செளமிய வருஷம் மாசி மாதம் 3-ந் திகதி [14-2-70]


ஊரதீவு, வெள்ளி "வல்வெட்டித்துறைமக்களுக்கு அமைதியான வாழ்க்கையை மீண்டும் அளிப்பதானுல் அதற்கு ஒரேயொருவழிதானுண்டு உடனடியாகவல்வெட்டித்துறை இராணுவமுகாம் மூடப்படவேண்டும். சிறிது காலத்திற்கு முன்பு நடந்த சம்பவத்தில் ஒருவருயிரிழக்கவேண்டி நேரிட்டது அந்த நேரத்தில் அச்சம்பவம்தான் கடைசிச் சம்பவமாக இருக்குமென்று நாம் நம்பியிருந்தோம். அந்த நம்பிக்கையை இச்சம்பவம் போக்கடித்துவிட்டது."

வல்வெட்டித்துறையில்நடந்த இராணுவத் தாக்குதல் பற்றி பிரதமர் டட்லி சேனநாயக்காவிற்கு தமிழர் சுயாட்சிக் கழகத்தலைவரும் ஊர்காவற்றுறைத் தொகுதிப் பிரதிநிதியுமான திரு. வ. நவரத்தினம். அனுப்பியுள்ள கடிதத்தில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அககடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:இச் சம்பவம்மூலம் மீண்டும் ஒருமுறை வல்வெட்டித்துறையில் இராணுவத்தினர் காடைத்தனத்தை கட்டவிழ்த்துவிட்டுள்ளனர். அமைதியாகவாழும் மககளை மீண்டும் காடைத்தனத்துக்கு உட்படுத்துவதை மிகவும் வன்மையாக கண்டிகக விரும்புகின்றேன்.

இச்சம்பவம்பற்றி நான் உடனே அரசாங்க அதிபர் திரு. பீட்டர்ஸுடன்தொலைபேசியில் கதைத்தேன். அவருககுச் சம்பவத்தைப்பற்றி எதுவும் தெரியாமல் இருந்தது இருந்தாலும் தான் உடனடியாகப் பலாலி இராணுவ நிலையத்துடன் தொடர்புகொண்டு தேவையானவற்றைச் செய்வதாக உறுதியளித்தார். பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினம் தாககப்பட்டிருபப்தாகவும் அவர் ஆஸ்பத்திரியில் சேர்ககப்பட்டுள்ளதாகவும் அறிகிறேன் என்று சொல்லி இருந்தேன்.

## கலைகளும் கோயிலும்

கொழும்பு சரஸ்வதி மண்டபத்திலே ராமநாதன் கல்லூரி பழைய மாணவிகள் சங்கத்தார் வெற்றியுடன் நடித்த "சுந்தரர்" நாடகத்தில், அழகான இரு பரத நாட்டியங்களும் திருவாரூர் கோயில் அரங்கில் நடந்ததாகக் காட்சிகள் காட்டின.

கோயிலின் புனிதமான சூழ்நிலையில் நடைபெறும் பரத நாட்டியம் தெய்வீகத்தன்மை பெற்று, காண்போர் உள்ளத்தையும் தெய்வீக வழியில் செலுத்துவதாகவுள்ளது. கலைகளின் மேலான நோக்கமே, மக்களை தெய்வீகமாக்கி புனிதப்படுத்துவதுதான். அக்காலத்திலே கோயில்களிலே, பரத நாட்டியமுள்ளிட்டு எல்லாக் கலைகளையும் வளர்த்து வந்ததன் நோக்கமும் அதுவே.

ஆனுல் இப்போது கோவில்களில் பரத நாட்டியம் அறவே நடப்பதில்லை. மற்ற கலைநிகழ்ச்சிகள் நடப்பதும் அபூர்வமாகிவிட்டன. கோவில்களில் நடைபெறும் கலைநிகழ்ச்சிகளாயின், கட்டணம் கொடுக்காமல் பரம ஏழைகளும் பார்க்கமுடியும். ஆனுல் கலைகளையெல்லாம் விலையாக்கும் இக்காலத்தில். ஏழைகள் நல்ல கலை நிகழ்ச்சிகளைக் காணமுடியாதுள்ளது.

கலைகள் மூலம் மக்கள் மனதைத் தெய்வீகவழியில் மீண்டும் திருப்பவேண்டுமாயின், கோவிலின் புனிதச் சூழ்நிலையிலேயே, பரதநாட்டியமுள்ளிட்டு, எல்லா அருங்கலை நிகழ்ச்சிகளும் நடைபெறச் செய்யவேண்டும். அப்படிச் செய்தால், கோவில்களுக்கு அதிக மக்கள் வருவர். கலைகளையும், கலைஞர்களையும் கோவில்கள் நல்லமுறையில் வளர்க்கவும் முடியும்.

### தேவை

அனுபவமும் திறமையும் வாய்ந்த மெக்கானிக் தேவை. டிராக்ரர் நீரிறைக்கும் யந்திரம் திருத்தத் தெரிந்தவர்கள் விண்ணப்பிக்கவும். விண்ணப்பங்கள் 25-2-70 வரை ஏற்றுக் கொள்ளப்படும். திருச்செல்வம் அன் கோ, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 1851

### விற்பனைக்கு

எம்மிடம் பிறஸ் போட் (Beres ford) 2", 3" பம்புகள் S.M.C. எலெக்ரிக் பம்புகள் 1 1/2"X 1 1/2"; 1 1/4"X1" HONDA Generator 800 watts, SATOH இரண்டு சில்லு டிரக்ரருடன் பாவிப்பதற்கு 2" பம்புகளும் விற்பனைக்குண்டு. கையிருப்பு சொற்பமே உள்ளபடியால் வாங்குவதற்கு முந்துங்கள். திருச்செல்வம் அன் கோ, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 1850

### அரபு-இஸ்ரேல் ...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

வழி. நாலாபக்கங்களிலும் நல்லெண்ணம் வளர்ந்து, இருபகுதியினரும் சிறிது விட்டுக்கொடுத்தால், நல்ல சுமுகமான முடிவை அடைதல் முடியாததல்ல.

மொழிபெயர்ப்பு:

த. இரத்தினம்

### வீட்டுக்கொருவர்

[15ம் பக்கத் தொடர்ச்சி]

வீரர் குழாம்கள் அணிஅணியாகத் திரண்டு இரத்த தானம் செய்ய முன்வர வேண்டும். இதை ஒரு தேசியப்பணியாகக்கருதி வீட்டுக்கு ஒருவர் என்ற விகிதத்தில் இரத்த தானம் செய்ய முன்வரும் நாள் நாட்டின் பொன்னுளாகும்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு [illegible] வெளியிடப்பட்டது.

## மரண அறிவித்தல்

### செல்லப்பா இராஜதுரை

தங்கம்மாவின் அன்புக் கணவரும், தெய்வேந்திரம் (லண்டன்) கனகேந்திரம் (கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை) திருமதி அம்பிகாதேவி பத்மானந்தவேல், திருமதி மகேஸ்வரிதேவி கதிர்காமராஜா (மௌப்றே கல்லூரி கண்டி) ஆகியோரின் அருமைத் தந்தையும், பத்மானந்தவேல் (கணக்காளர், உப்புக் கூட்டுத்தாபனம்) கதிர்காமராஜா (கொழும்பு கொமேர்ஷல் கொம்பனி) தனலட்சுமி கனகேந்திரம் ஆகியோரின் மாமனுரும், நாகேந்திரம், சிவரெத்தினம், திருமதி வைத்திலிங்கம் (மலேஷியா) நடராஜா (அடைவு பிடிப்பவர், யாழ்ப்பாணம்) திருமதி இரத்தினசாமி ஆகியோரின் சகோதரரும் இரத்தினசாமி, திருமதி நடராஜா, திருமதி நாகேந்திரம். திருமதி சிவரெத்தினம், வைத்திலிங்கம், கந்தையா, இராஜதுரை, டாக்டர் அப்புத்துரை (மலேஷியா) ஓய்வு பெற்ற கல்விப் பரிசோதகரும் புருணையிலிருப்பவருமான நவரெத்தினம் ஆகியோரின் மைத்துனரும், சுகுமார், சாந்தகுமார், உமையாள் ஆகியோரின் பேரனுமாகிய திரு. செல்லப்பா இராஜதுரை, (வட்டுக்கோட்டை மேற்கு நகை அடைவு பிடிப்பவர்) நேற்று மாலை இயற்கையெய்திஞர். அன்னரது பூதவுடல், இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் வட்டுக்கோட்டை மேற்கு "முருகவாசா" இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காக கொத்தத்துறை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். 1488


விரையுங்கள்! விரையுங்கள்!

எங்கள் ஸ்தாபனத்தில் புதிதாகத் திறக்கப்பட்ட பகுதியில் பெண்மணிகளுக்குரிய அழகுசாதனங்கள் கோயா, பொண்ட்ஸ், பேபி பவுடர் வகைகளும், ஓடிக்கொலோன், கிறீம், பேபி செற், கலா சென்ற், வண்ணச் சாயம் என்பனவும். மற்றும் புதுவகையான பன்ஸி லைற்(Fancy Light), ரோச்லைற் வகைகளும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

இன்றே விஜயம் செய்யுங்கள்!

ரொலறம்ஸ்

46, பிரதானவீதி, (போன்:7099) யாழ்ப்பாணம்.



பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்கு விசேஷ காட்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டிருப்பதால் தொடர்ந்து காட்சியளிக்கும்

ஔவையார்

வின்ஸரில்

தினசரி 4 காட்சிகள்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org